கார்த்திகை – 2023 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல் 2 பாடல் 8



# ஸ்ரீ கணேஷ் ஜெராக்ஸ்

**79/1, தாலுக்கா ஆபிஸ் ரோடு - மன்னார்குடி**

## பொது ‘இ‘ சேவை மையம்

**அனைத்து விண்ணப்பங்களும் கிடைக்கும்**

பதிவுத்துறை
REGISTRATION DEPARTMENT

AADHAAR

fssai

Pradhanmantri Fasal Bima Yojana

Passport Seva
Service Excellence



**G.பிரபு - செல்: 9751786700 e-mail: praboo.praboo@gmail.com**

**‘கண்ணாமூச்சி’ இலக்கிய பணி தொடர வாழ்த்துகள்...**

# கொண்டாட்டப் பொழுதுகள்

கொண்டாட்டம் என்பது சிலருக்கு வார இறுதி. சிலருக்கு சம்பளத்தேதி. இன்னும் சிலருக்கு நாள், வாரம், மாதம் என்றெல்லாம் கணக்கில்லை. எப்போதும் முப்போகம்தான். அதாவது கொண்டாட்டம்தான். வாழ்வில் எதிர்கொள்ளும் ஒவ்வொரு நிகழ்வையும் கொண்டாடித் தீர்த்தவர்கள் நாம். கொண்டாடித் தீர்ந்தவர்களும் நாம்தான்.

வாகனங்கள் வாங்கினால் கொண்டாட்டம். வாரவட்டிக்கு வாங்கினாலும் கொண்டாட்டம். புது அலைபேசி வாங்கினால் கூட 'பார்ட்டி வை' என்கிற நண்பர்களும் எல்லோருக்குமுண்டு. ஆனாலும், குத்துன மூக்குக்கு குச்சி இல்லாமல், காதுல மூக்குல கிடந்ததைக் கடையில் அடகு வைத்து, தொட்டுக்க தொடச்சிக்க என்று நகரும் வாழ்வில் போனால் வந்தால் போட்டுக்கொள்ள நல்ல துணி இல்லாமல், இட்லி தோசை என்பவை கூட பொங்கல், தீபாவளி பலகாரப் பட்டியலில் இருந்த ஓர் எளிய வாழ்வைக் கடந்து வந்த மக்களுக்கு பண்டிகைகள்தான் அவர்களின் சிறு கொண்டாட்டம்.

எதிர்காலம் குறித்த பயத்துக்கு நடுவில் அதுதான் அவர்களுக்கு சிறுநம்பிக்கை. அதற்கும் கூட வாரவட்டிக்காரர்களிடம் வாங்க அவர்கள் படும்பாடு சொல்லி மாளாது. அரக்கப்பரக்கப் பாடுபட்டுப் படுக்கப் பாய் இல்லை என்பதாகவே அவர்களது கதை உள்ளது. பிள்ளைகளுக்குத் துணிமணி எல்லாம் எடுத்துவிட்டு தனக்கு கடைசியா ஒரு கைலியும் துண்டும் போதும் என்கின்ற குடும்பத் தலைவனுக்கும், தனக்கு ஒரு நைட்டி மட்டும் போதும் என்கின்ற குடும்பத் தலைவிக்கும் இப்படியானப் பண்டிகைகள் தேவையாகவும் இருக்கின்றன.

பாமணியாற்றுப் படுகையிலிருந்து...

அன்பின் ஈரங்களுடன்,

கோ.அருணாகிரி,

ஆசிரியர்

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2054
கார்த்திகை - 2023

நிறுவனர்
**ப. பரிதிபாண்டியன்**

ஆலோசகர்
**அம்ரா பாண்டியன்**

ஆசிரியர்
**கோ.அருணகிரி**

ஆசிரியர் குழு
**கலை பாரதி**
**த.ரெ.தமிழ்மணி**
**சா.தமிழ்ச்செல்வன்**
**ஞா.ஜெயக்குமார்**
**சா.சிவகுமார்**
**பாலகுமரன் பரிதி**
**தமிழாதன்**
**க.சந்தானலட்சுமி**

இதழ் வடிவமைப்பு
**விடா பப்ளிகேஷன்ஸ்**

அட்டைப்பட உதவி
க.தங்கபாபு
திருவாரூர் மாவட்ட
மாதிரிப்பள்ளி மாணவ மாணவியர்.

தொடர்பு முகவரி
**சன்மேன் டெய்லர்ஸ்**
9 அரிசி கடைத் தெரு, மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம்-614001
செல்பேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

கட்டுரை

**துறுகல்**
- சு.இராமசுப்பிரமணியன் | **11**

சிறுகதை

**குலசாமி**
- ச.மோகன் | **15**

மண்ணின் கதைகள் மக்கள் மொழியில்

**வெசக்கடி..சொம்பு..பாவாடை..**
- கோ.அருணகிரி | **19**

ஆய்தல்

**திணை தாண்டிய விழுமியத் தீற்றல்கள்**
- மீனாசுந்தர் | **25**

கவிதை

**மௌன ராகம்**
- பா.உஷாராணி | **35**

போகிறபோக்கில்

**அப்பா..நாம என்ன சாதி**
- சின்னப்பயல் | **48**

சந்தா விவரம்:
**தனி இதழ். 30**
**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட
**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட

சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**

# நண்டு

## கலைபாரதி



அது ஒரு மழைக்கால மாலைப்பொழுது. கால்கள் பதியப் பதிய சொதசொதத்துக் கிடந்தது வயல். கோடைக்காலம் என்றால் கிளுக்கி ஆட்டியோ காத்தாடி வைத்தோ நண்டு பிடிக்கலாம். மழைக்காலம் வளையை வெட்டி நண்டு பிடிப்பதற்கு நடண்ணன், மண்வெட்டியும் கையுமாக வந்தது.

தூக்குவாளியை எடுத்துக் கொண்டு நான். பயித்தமேட்டு வரப்பில் நடண்ணன் வளையை வெட்டுகிறது. வளையை மூடிய மண்ணை ஒரு குச்சியைக் கொண்டு தோண்டி எடுக்கிறேன். ஒரு வெட்டு... இரண்டு வெட்டு... மூன்று... நான்கு... நான் கீழே குனிந்து வளையைத் தோண்டுகிறேன். ஐந்தாம் வெட்டு ஒரே போடு. கீழே குனிந்து வளையைத் தோண்டும் என் உச்சந்தலையில் இறங்குகிறது மண்வெட்டி. இரத்தம் பீறிட பீறிட பார்த்த நடண்ணன் பதறிவிட்டது. உடன், எங்கள் ஊர் தர்மாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று நடுமண்டையில் நான்கு தையல். ஆஸ்பத்திரியை தர்மாஸ்பத்திரி என்று சொல்வார்கள். அது அப்போது.

“அப்பாக்கிட்ட மட்டும் சொல்லிடாதேடா...

அப்பாக்கிட்ட மட்டும் சொல்லிடாதேடா...!

என்று சொல்லிக்கொண்டே சுப்புணிக் கடையில் டீயும், ரெண்டு காராச்சேவு பொட்டலமும் வாங்கிக் கொடுத்தது. சரி.. சரி... என்று தலையாட்டிய நான், அப்பாவிடம் சொல்லி நடண்ணனை மாட்டிவிட்டப் பிறகுதான் பெருத்த நிம்மதி எனக்கு.

இளமணலில் திரிகின்ற கடற்கரை நண்டுகளை அலவன் என்கிறது நற்றிணை. நெய்தலந் தலைவியொருத்தி தலைவனுக்காகக் காத்திருக்கிறாள். குறித்த நேரத்தில் வருவதாகச் சொன்ன தலைவன் வரவில்லை. நீடுதோறும் இனிப்பவன் அன்று நின்ற சொல்லன் அல்லன். நண்டுக் கொழம்பின் மணம் தெருவெல்லாம் கமகமத்துக் கிடப்பதைப் போன்று அலர் ஊற்றி நிற்கிறது ஊர். தலைவன் மீது நம்பிக்கை இழந்து பெருந்துயரில் வாடும் தலைவிக்கு, நம்பிக்கை என்னும் வார்த்தை வெளிச்சம் பாய்ச்சுகிறாள் தோழி.

கடற்கரைச் சாலை வழியாக நம் தலைவன் வருகிறான். அவன் உன் மீது மட்டும் காதல் கொண்டவன் அல்லன். உயிர்கள் மீதும் பெருங்காதல் கொண்ட உயிர்நேயனும் கூட. உன் மீதான பேரன்பில் தேரினை விரைவாகச் செலுத்தினால், கடற்கரை பூமணலில் ஒடித்திரியும் நண்டுகள் தேர்ச்சக்கரத்தில் மாட்டி இறந்துவிடும். ஆதலால் தேரினை விரைவாகச் செலுத்தாமல் தேரோட்டியிடம் சொல்லி மெதுவாகச் செலுத்தச் சொல்லி இருக்கலாம். அதுதான் அவனது தாமதத்திற்கான காரணம்.

**“புணரி பொருத பூமணல் அடைகரை**
**ஆழி மணலின் அலவன் ஓம்பி**
**வலவன் வள்பு ஆய்ந்து ஊர**
**...”**

*என்கிறார் உலோச்சனார் என்னும் பெரும்புலவர். நெய்தல் நிலமக்களின் அத்தகைய உயிர்நேயத்தை மக்கள் பாவலர் இன்குலாப்பும் பதிவு செய்திருப்பார். நெய்தலந்தலைவி இரவுக்குறியில் தன்னைச் சந்தித்துச் செல்லும் பவுர்ணமி இரவு படகோட்டித் தலைவனிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறாள்.*

**“பவுர்ணமி இரவின் படகுக்காரரே**
**நதி நுரைக்கும்**
**நாணற்புதர்களை விலக்கிச் செல்கையில்**
**மெதுவாய்ச் செல்லுங்கள்**
**வழியில் தண்ணீர் வாத்துகள்**
**அடைக்காத்த முட்டைகள் இருக்கலாம்**
**கால்கள் மோதிவிடாதிருக்கட்டும்..!**

*உலோச்சனாரின் நெய்தலந் தலைவனும் இன்குலாப்பின் கடற்கரைத் தலைவியும் மானுடத்தின் மீது மாறாக்காதல் கொண்டவர்கள். சொந்தக் காதலைத் தாண்டிய சமூகக் காதலே அவர்களை கடற்கரை நண்டின் மீதும் தண்ணீர் வாத்துகள் மீதும் கரிசனத்தைப் பொழியச் செய்திருக்கின்றது. சிற்றுயிர்கள் மீதான அன்பு மிக்கவர்கள் தன்னுயிர்க்கு நெருக்கமானவர்களைத் தவிக்க விடுவார்களா என்ன..?*

*அவர்களது உயிர்நேயம் திரியிலிருந்து வெளிப்படும் சுடராய்ப் பேரொளி வீசுகிறது!*

*நண்டு எக்கர் அடித்த மணலில் வாழும். எக்கர் என்ற சொல் சங்கச் சொல். அது இன்று கீழத்தஞ்சை மக்களின் புழங்கு மொழிகளில் ஒன்றாகவும் இருக்கின்றது. எக்கர் என்றால் மணல் தொகுதிகள் சேர்ந்த சிறுமேடு. வாய்க்காலிலிருந்து வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சும்போது வாமடையில் எக்கலடிச்சிட்டு என்பர். வயிற்றைப் பள்ளமாக்கி நெஞ்சுப் பகுதியை மேடாக்கிக் காட்டுவது எக்குதல். உயர்ந்த மரக்கிளையை கைநீட்டி எட்டிப் பிடிப்பது. எக்கிப் பிடிப்பது. அந்த எக்கர் அடித்த மணலில் வளை அமைத்திருக்கும் நண்டின் கண்கள் நொச்சிப் பூக்களைப் போன்று இருக்கின்றது. அது பெண்களின் கைவிரல் போன்ற தன்னுடைய மென்மையானக் கால்களால் வளைக்கு அருகில் கொட்டிக் கிடக்கும் நொச்சிப் பூக்களின் மீது நடந்து செல்கின்றன. நொச்சிப்பூ போன்ற கண்கள். பெண்களின் கைவிரல் போன்ற நண்டின் மெல்லிய கால்கள். பெண்ணின் கைவிரலுக்குச் சற்றும் பொருந்தாத வெண்டைக்காயைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அனிச்ச விரல்கள், காந்தள் விரல்கள் என்று சங்கத்தமிழ் கொஞ்சும். நற்றிணையில் நண்டின் கால்களுக்கு பெண்ணின் கைவிரல் களை உவமையாக்கி இருக்கிறார் கபிலர்.*

**“நொச்சி மாஅரும்பு அன்ன கண்ண**
**எக்கர் ஞெண்டின் இருங்கிளைத் தொகுதி**
**இலங்கு எயிற்று ஏனர் இன்நகை மகளிர்**
**உணங்கு திணை துழவும் கைபோல்...”**

**நற்றிணை 267**

*நண்டு பக்கத்திற்கு ஐந்தாக மொத்தம் பத்துக் கால்களை உடையது. முன்புறமுள்ள கால்கள் கடிகால்கள். அது இரையைப் பிடிக்கவும், தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் பயன்படுகிறது. மீதமுள்ள பக்கவாட்டுக் கால்களால் நகர்ந்து இடம் பெயர்கிறது. கால்களில் உள்ள செதில்களால் சுவாசிக்கிறது. நண்டு நான்கறிவுள்ள உயிரினம் என்கிறது தொல்காப்பியம்.*

**“ஒன்றறிவு அதுவே உற்றறிவதுவே**
**இரண்டறிவு அதுவே அதனொடு நாவே**
**மூன்றறிவு அதுவே அவற்றோடு மூக்கே**
**நான்கறிவு அதுவே அவற்றோடு கண்ணே**
**ஐந்தறிவு அதுவே அவற்றோடு செவியே**
**ஆறறிவு அதுவே அவற்றோடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே”**

**- மரபியல்-தொல்காப்பியம்.**

*நண்டுகள் உற்றறிதல், சுவையுணர்தல், மோப்பமுணர்தல், அவற்றோடு கண் பார்த்தல் என்கிற நான்கறிவை உடையது.*

*தமிழர்களின் மிக உயர்ந்த பண்பு*

விருந்தோம்பல் ஆகும். வித்துகளை விற்றும் விருந்தோம்பல் செய்வர் என்கிறது வள்ளுவம். இல்வாழ்வின் நோக்கமே விருந்தோம்பி உதவி செய்வதுதான் என்கிறார் வள்ளுவர்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்**
**விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு"**

இங்கு வேளாண்மை என்ற சொல் உதவி என்ற பொருளிலேயே வருகிறது. தன்னிடம் என்ன இருக்கின்றதோ அதனையே விருந்தாகவும் அளித்திருக்கின்றனர். தன் நிலத்தில் விளைந்தவற்றையே விருந்தினர்க்குக் கொடுத்து மகிழ்ந்திருக்கின்றனர். கண்ணப்பன் என்ற வேடன் இறைச்சி உணவைச் சுவைபார்த்து சிவனுக்குக் கொடுத்து நாயனார் ஆனதைப் போன்று. வேடர்குலத் தலைவன் குகன் இராமன் மீது கொண்ட அன்பின் மிகுதியால் கங்கை யாற்று மீனையும் கொம்புத்தேனையும் கொடுத்து இராமனுக்குத் தோழனானதும் நினைவுக்கு வருகின்றது.

இக்காலத்தில் குசராத் மாநிலம் சூரத்தில் உள்ள ராஜ்நாத்சிங்கேலா என்ற சிவன்கோவிலில் உயிருள்ள நண்டுகளை சிவனுக்கு காணிக்கையாக்கி வழிபடுகின்றனர். இவ்வாறு செய்யும்போது காது தொடர்பான நோய்கள் குணமாகும் என்று அப்பகுதி மக்கள் நம்புகின்றனர். உயிருள்ள ஆடு, மாடு, கோழிகளை கோயிலுக்கு நேர்ந்து விடும் வழக்கமும் இங்குண்டு.

என் மகனின் முதல் பிறந்த நாளன்று உறவுகள், நண்பர்களுக்குச் சொல்லி சிறுவிருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தேன். அந்தப் பிறந்தநாள் கட்டிகை வெட்டாமல், மெழுகுவர்த்தி அணைக்காமல் குத்துவிளக்கேற்றி பொங்கல் வைத்துக் கொண்டாடப்பட்டது. அந்த விருந்தில் இறைச்சி, மீன் உணவோடு வயல் நண்டையும் வறுவல் செய்து வைத்திருந்தேன். அனைவரும் மிகவும் விருப்பமாகவும் உண்டனர். ஒரு மருதநில வயலாடியின் விருந்தோம்பலில் வயலில் விளைகின்ற நண்டு விருந்தில் முதன்மை பெறுவதில் வியப்பென்ன இருந்துவிடப் போகிறது!

இன்றையப் பொழுதில் என் வீட்டு விருந்தில் மட்டும் நண்டு இடம்பெறவில்லை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆமூரில் வாழுகின்ற உழுகுடிகளின் விருந்தோம்பலிலும் நண்டு இடம்பெற்று இருக்கின்றது. அது,

**"வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி**
**னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை**
**பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்**
**தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப**
**விருங்கா ழுலக்கை யிரும்பு முகர்**
**தேய்ந்த**
**அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு**
**கவைத்தா ளலவன் கலவையொடு**
**பெருகுவீர்."**

**சி.பா.190-195**

என்கிற சிறுபாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலமாகத் தெரியவருகிறது.



மருதநில சேற்று வயலில் வலிமையான எருதுபூட்டி உழவு நடக்கின்றது. ஏர் ஓட்டும் உழவர்களின் தங்கைகள் இரவலர்க்கு உணவளிப்பர். அவர்களது பின்னிருங் கூந்தல் யானையின் துதிக்கைப் போன்றது. உலக்கை பூண் தேயத்தேய குத்தியெடுத்த அரிசியில் சமைத்த வெண்பொங்கலில் நண்டு குழம்பூற்றி விருந்தளிப்பர் என்கிறார் நல்லூர் நத்தத்தன்.

நண்டு மணம் நாவில் ஊற ஊற நண்டு பிடிக்கும்போது நடண்ணன் வெட்டிய நடுமண்டை தழும்பைத் தடவிக்கொண்டே துணைவி எடுத்துவரும் நண்டு கொழம்பிற்காகக் காத்திருக்கிறேன்.

நகரும்

# இளமைக்கால அப்பா

## பாலகுமரன் பரிதி



அப்பா தனது குழந்தைப் பருவம் பற்றியோ இளமைப்பருவம் பற்றியோ என்னிடம் அதிகமாகப் பகிர்ந்து கொண்டது இல்லை ஒரு சில விஷயங்களைத் தவிர.

சமீபத்தில் அத்தையுடன் பேசிக் கொண்டிருந்தபோது சில தகவல்கள் கிடைத்தது.

அப்பாவின் குடும்பம் மிகப் பெரிய குடும்பம். அப்பாவிற்கு ஒரு அண்ணன் ஒரு தம்பி மூன்று தங்கைகள் பெற்றோருடன் சேர்த்து குடும்ப உறுப்பினர்கள் எட்டு பேர்.

அவர்களின் பெயர்களை சொல்கிறேன் கேளுங்கள் அப்பா பெயர் பரிதி பாண்டியன். அப்பாவின் அண்ணன் பெயர் இளங்கோவன். அப்பாவின் தம்பி பெயர் குலோத்துங்கன். இன்னும் மூன்று தங்கைகள் பெயர் உமா, சித்ரா, மாதவி. தாத்தா அந்தக் காலத்திலேயே இலக்கியங்கள் படிப்பதில் ஆர்வம் மிகுந்தவராக இருந்திருக்கிறார் என்பது குழந்தைகளுக்கு வைத்த பெயர்களிலேயே தெரிந்து விடுகிறது அல்லவா?

எத்தனை குழந்தை பிறந்தால் என்ன பெயர் வைத்து விடலாம் ஆனால் எல்லா குழந்தைகளுக்கும் சோறு...?

தாத்தா ராணுவத்தில் இருந்து விருப்ப ஓய்வு பெற்று வந்து தாலுக்கா அலுவலகத்தில் பியூனாக பணியாற்றி வந்திருக்கிறார். நீங்கள் நினைப்பது போல ஒரு கடைநிலை ஊழியனின் ஊதியத்தைக் கொண்டு எட்டு பேர் கொண்ட குடும்பத்தை நடத்தி விடலாம் என்பது சாத்தியமில்லாதது.

அந்த கடைநிலை ஊழியனின் பிள்ளைகள் இன்று ஆசிரியராக, தலைமையாசிரியராக, இராணுவ வீரராக, அஞ்சலக அதிகாரியாக இருப்பது அவருக்கு பெருமை சேர்க்கும் நிகழ்வுதானே...

சமச்சீர்கல்வி பற்றி அப்பா ஒரு கூட்டத்தில் பேசியது நினைவுக்கு வருகிறது" சமச்சீர் கல்வி என்பது பாடப்புத்தகங்கள் சமமாக இருப்பதால் வந்துவிடாது. தாலுக்கா ஆபிஸ் பியூன் மகனாகிய நானும் தாசில்தார் மகனும் ஒரே பெஞ்சில் அமரந்து படித்தோமே அதுதான் சமச்சீர் கல்வி." எவ்வளவு ஆழமான பார்வை.

அத்தை சொன்னதை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

"பாலா, அந்தக் காலத்தில் அந்த நேரத்துல மூன்று வேளை சாப்பாடு என்பதே பெரிய விஷயம். சில நாட்களில் ரெண்டு வேளை சாப்பாடுதான். நாம இப்ப இருக்கிற ஆடம்பர வாழ்க்கையை வைத்து பார்க்கும்போது அப்ப ரொம்ப கஷ்டப்பட்டு இருக்கோம். சாப்பாட்டுக்கே வழி இல்லாமல் இருந்திருக்கோம் அப்படின்னு தோணுது. ஆனா அப்போதைக்கு அது எங்களுக்கு கஷ்டமா தெரியல. அதுதான் எங்க வாழ்க்கை. ஆனா கஷ்டப்பட்டதுக்கு அழுததில்லை; சாப்பாடு இல்லனா அழுததில்லை; எல்லா நேரமும் சந்தோசமாகத் தான் இருப்போம்; நிறைய புத்தகங்களைப் படிப்போம்; கதை

பேசுவோம்; கதை எழுதுவோம்; வீடு, கூத்தும் கும்மாளமுமாகத்தான் இருக்கும்."

அவர்கள் சொல்வதைக் கேட்ட பிறகு தான் புரிந்தது அப்பாவுக்கு புத்தகத்தின் மீது தீராக் காதல் எப்படி வந்தது என. இவ்வளவு கஷ்டத்திற்கு நடுவேயும் புத்தகங்கள் படிப்பது புத்தகங்களைப் பற்றிப் பேசுவது அவர்கள் வாழ்க்கையாகவும் வாடிக்கை யாகவும் இருந்திருக்கிறது.

நான் பசியை உணர்ந்திருக்கிறேன் ஆனால் பட்டினியை உணர்ந்ததில்லை. பசி என்பது வேறு. பட்டினி என்பது வேறு.

அப்பா இளமைப்பருவத்தில் அந்தத் தெருவில் இருக்கும் இளைஞர்களுடன் இணைந்து இரவு நேரங்களில் பட்டிமன்றம் நடத்துவதும் கவியரங்கம் நடத்துவதும் நாடகங்கள் நடத்துவதும் என ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபட்டு இருந்திருக்கிறார்.

அத்தை கோலம் போடும் போதெல்லாம் கோலத்திற்கு கீழே ஒரு பாரதியார் கவிதையை எழுதி வைப்பாராம் அதை அப்பாவும் ரசிப்பாராம்.

அப்பாவின் நண்பர் வட்டமும் வித்தியாசமானதாக இருந்திருக்கிறது. கடைத்தெரு கவியரங்கம் என்று ஒன்று நடக்கும். அப்பாவும் அப்பாவின் நண்பர்களும் இணைந்து நடத்துவது. மேடை கிடையாது. ஒலிவாங்கி கிடையாது. கவிதை சொல்ல விரும்புபவர்கள் ஒரு ரூபாய் நுழைவு கட்டணம் கட்ட வேண்டும். சிறந்த கவிதை தேர்ந்தெடுக்கப்பட்டு நுழைவுக் கட்டணத்தில் வந்த காசுகள் வெற்றிப்பெற்றவருக்குக் கொடுக்கப்படுமாம். அப்படி கிடைக்கும் காசுகளை நண்பர்களுடன் சேர்ந்து புகைத்து மகிழ்வாராம் அப்பா.

அப்பா வேலையில்லாப் பட்டதாரியாக இருந்த காலத்தில் மெடிக்கல் ஷாப்பில் வேலைபார்தார். அப்போதெல்லாம் பிளாஸ்டிக் பாட்டில் கிடையாது எல்லாமே கண்ணாடி பாட்டில்தான். ஏதாவது மருந்து எடுக்கும் போது தவறுதாலாகப் பாட்டில் விழுந்து உடைந்து போனால் சம்பளத்தில் கழிக்கப்படுமாம். இது போல இரண்டு மூன்று சம்பள கட் அப்பாவிற்கு விழுந்ததாம். அதன் பிறகு பாட்டில் விழும் போது இலாவகமாகப் பாட்டில் தரையில் விழாமல் காலால் தடுத்து சம்பளத்தைக் காப்பாற்றியிருக்கிறார்.

அப்பாவின் இறுதிக் காலங்களில் அவருடன் நெருங்கிப் பழகியவர் கலைபாரதி. அவரிடம் பேசிக்கொண்டு இருக்கும்போது அப்பா சொல்லியிருக்கிறார் "பாரதி, நான் டீச்சர் ட்ரைனிங் படிக்கும்போது என் கூட ஒரு கிறிஸ்தவப் பெண் படிச்சது. அந்தப் பொண்ணுக்கு என்னை பிடிக்கும் எனக்கும் அந்தப் பொண்ணைப் பிடிக்கும். ஆனால் குடும்பச் சூழல், வேற மதம், நானே அந்தப் பழக்கத்தை அப்படியே விட்டுட்டேன். ஆனா இப்ப கொஞ்ச நாளா கனவுல அந்தப் பொண்ணோட முகம் வருது என்னவா இருக்கும்?"

இந்தக் கதையை அத்தையிடம் சொன்னேன். அத்தை சொல்லி சிரித்தது எனக்கு தெரியாத பாண்டியின் காதல் கதையா! அப்ப பாண்டிக்கு 28 வயசு இருக்கும் ஒரு பொண்ண விரும்புவதா சொல்லுச்சு.

ஒருநாள் நடுராத்திரியில் அந்தப் பெண்ணின் நினைவு வர விழித்திருக்கிறார் அப்பா. வீட்டில் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில். ஒரு வேகத்தில் சைக்கிளை எடுத்துக்கிட்டு புறப்பட்டுவிட்டார். சைக்கிள் அந்தப் பெண்ணின் ஊரை நோக்கி. அந்த கும்மிருட்டு வேளையில் சைக்கிள் டைனமோ மஞ்சள் ஒளியில் பத்து மைல் பயணத்தின் போது இது சரிதானா என்ற எண்ணம் கூட தோன்றவில்லை போல அந்தக் காதலுக்கு. புளிய மரத்தை ஒட்டிய அந்த ஓட்டு வீட்டை விடியும் வரை பார்த்திருந்து விட்டு திரும்பியிருக்கிறார்.

இதை அத்தையுடன் பகிர்ந்திருக்கிறார்.

"பாண்டி, ஒரு அடலெசன் பையன் கூட இப்படிப் பண்ண மாட்டான். உனக்கு என்ன வயசு ஆகுது தெரியுமா?" என்றதாம் அத்தை.

"காதலிக்கும்போது எல்லாருமே அடலெசன்தான்" என்று பாண்டி சொல்லி சிரித்தது என சொல்லும் போது அத்தையின் நினைவுகள் அந்த காலத்தைத் தொட்டுத் திரும்பி பெருமூச்சு விடுகிறது.

"ஆனா பாலா நாங்க யாராவது

பசங்களிடம் பேசினால் கடுகடுக்கும் பாண்டி. இது என்ன நியாயம்?” என கேட்கும் அத்தைக்கு சொல்ல என்னிடம் பதிலில்லை.

அப்பாவுக்கு உறவுகளைப் பிடிக்கும் ஆனால் கையாளத் தெரியாது. தனக்குத் தவறு என்று படும்போது கோபப்பட்டு விடுவார். அப்பாவின் கோபம் உறவினர்கள் அறிந்ததுதான். அவன் அப்படித்தான் கோபப்படுவான் என்று அவர்களே சமாதானம் சொல்லிக் கொள்வார்கள்.

ஒருமுறை ஆத்தாவிடம் சண்டை போட்டு “செத்தா கூட உன்னைப் பார்க்க வரமாட்டேன்” என்று சொல்லியிருக்கிறார். இன்று ஆத்தாவுக்கு 92 வயது. பாண்டி சொன்ன மாதிரியே என் சாவுக்கு வராம போயிட்டான் என்று சொல்லி அழுததுண்டு.

தீபாவளி போல் பொங்கலுக்கு புது சட்டை கிடைக்காது. மற்றபடி பொங்கல் கொண்டாட்டமாகதான் இருக்கும். கடவுளை மறுக்கும் அப்பா அன்று சூரியனுக்கு ஆரத்தி காட்டும் போது ஒரு பணிவு தெரியும்.

பொங்கலுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னரே கோட்டூரில் வசிக்கும் அத்தைக்கு மணியாடர் அனுப்புவது வழக்கம். தங்கை என்ற உறவின் தொப்புள் கொடி நீட்சிதான் பொங்கல் வரிசை. வரிசை வைக்காவிட்டாலும் அந்த மணியாடர் தரும் மகிழ்ச்சி தங்கைகளுக்கும் அண்ணன்களுக்கும் மட்டுமே புரிய கூடிய புதுக்கவிதை.

அப்பா மறைந்த பிறகு பொங்கல் நெருங்கும் வேளையில் எனக்கு அத்தை ஞாபகம். அப்பாவின் மணியாடரை அத்தை எதிர்பார்க்குமா? அண்ணன் இல்லாவிட்டாலும் அண்ணனின் உறவு இல்லாமல் போய்விடுமா என்ன? அப்பாவின் பெயரிலேயே நான் அனுப்பினேன் அத்தைக்கு மணியாடர்’’

சமையல் வேலை பார்த்துக் கொண்டு இருந்த அத்தை மனதில் அண்ணனின் நினைவுகள் நிழலாடுகிறது. பாண்டி இருந்தால் மணியார்டர் அனுப்பி இருக்கும் என்று நினைத்துக் கொண்டு ஒரு பாட்டம் அழுதுக்கொண்டிருந்த போதே வாசலில் போஸ்ட்மேன் சத்தம்.

“சார் மணியார்டர் வந்திருக்கு”

“யார் அனுப்பி இருக்கா?”

“பரிதி பாண்டியன்”

அப்பாவின் பெயரை கேட்டு அத்தையின் கண்களில் தாரை தாரையாக நீர்... இந்த அழுகை துக்கத்தால் அல்ல சந்தோசத்தால். ●

---

கவிதை

## மருகி நிற்கிறாள் மருதச்சி

நம்பிக்கைகள்
பொய்த்த நிலத்தில்
மகிழுந்தேறி வருகிறான்
பெருநகரத்
தலைவன் ஒருவன்.

ஒளி பீய்ச்சும்
முகப்பு விளக்கால்
பாதையோரம் ஒதுங்கியவள்
பதறி எழுகிறாள்.

அலறவிட்ட சத்தத்தில்
பிணையலாடும் சாரை
இணை உதறி
விரைந்தூறுகிறது.

வந்து நின்ற புங்கை
வெம்மை உமிழ்கிறது.

முகம் பார்க்க மறுத்த
மருதச்சி
மருகி நிற்கிறாள் மனைக்குள்.

**- கருப்பி**



கட்டுரை

# ‘துறுகல்’ - பல்லுயிர் ஓம்பிய சங்கத்தமிழர்



## சு.இராமசுப்பிரமணியன்

**மந்தைக்குத்துக்கல்:**

ஒரு வீட்டில், ஒருவன் ஏதோ ஒரு தவறு செய்கிறான். அவனிடம் வீட்டில் உள்ளவர்கள் பல கேள்விகளைக் கேட்கிறார்கள். ஆனால் அவனோ எந்த ஒரு கேள்விக்கும் பதில்சொல்லாமல் மௌனமாக இருக்கிறான். அப்போது அவனைப்பார்த்து, “இத்தனைபேர் கேட்கிறோம். அவன் பதில் சொல்லாமல் ‘மந்தைக்குத்துக்கல்லாட்டம்’ இருக்கிறான் பார்” என்று சொல்வதுண்டு. அது என்ன ‘மந்தைக்குத்துக்கல்’ என்று தெரிந்துகொள்ளத் தோன்றுகிறது அல்லவா?

எங்கள் ஊரான சிவந்திபுரத்தில் (அம்பாசமுத்திரம்), அந்தக்காலங்களில், பல வீடுகளில் பால்மாடுகளை வளர்த்தார்கள். அப்போதெல்லாம் மாடுகள் புல்மேய்வதற்கான மேய்ச்சல் நிலங்கள் இருந்தன. மாடுமேய்க்கும் சிறுவர்கள் தினமும் காலையில் குறிப்பிட்ட நேரத்தில் மாடுகளை மேய்ச்சலுக்காகக் கொண்டுசெல்வார்கள். மாலையில், பொழுது சாய்வதற்கு முன்பாகவே மாடுகளை வீடுகளுக்குக் கொண்டுவந்துவிடுவார்கள். சிறுவர்களில் சிலர் எருமைகளின் மீது அமர்ந்து, அசைந்து அசைந்து செல்வதும் உண்டு. அது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களிடம் இருந்த வழக்கம் என்பது ஒரு நற்றிணைப்பாடலிலிருந்து நமக்குத் தெரியவருகிறது.

**“மன்ற எருமை மலர்தலைக் காரான்**
**இன் தீம் பாற்பயம் கொள்மார், கன்று விட்டு**
**ஊர்க் குறுமாக்கள் மேற்கொண்டு கழியும்**
**பெரும் புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து “**

(நற்றிணை, பாடல்30, வரிகள் 14)

எருமைகள் வெயில்தாங்காது என்பதனாலேயே பொழுதுபுலரும் காலைவேளையில் மேய்ச்சலுக்குக் கொண்டுசெல்லப்பட்டன என்றுதான் நான்கூட நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால் அதற்குப் பின்னால் ஓர் அனுபவ அறிவியல் இருப்பது இந்த நற்றிணைப்பாடல் வரிகளை வாசித்த பிறகே தெரியவந்தது. பொழுதுபுலரும் வேளையில் மேய்ச்சலுக்குக் கொண்டுசெல்லப்படும் எருமைகள் நிரம்பப் பால்கொடுக்கும் என்பதுதான் அந்த சங்ககாலத் தமிழனின் அனுபவ அறிவு. அதனால், கன்றுகளைத் தொழுவத்தில் கட்டிவிட்டு, கரியநிறம்கொண்ட எருமைகளை மட்டும் மாடுமேய்க்கும் சிறுவர்கள் மேய்ச்சலுக்குக் கொண்டுசெல்கின்றனர். அப்படிச் செல்லும்போது அந்தச்சிறுவர்கள், எருமைகளின்மீது அமர்ந்து செல்வர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும்கூட இந்தத் தொடர்ச்சி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மாடுகளின் தொகுதியை ‘மாட்டு மந்தை’ என்று சொல்வதுண்டு. ஊருக்குத் தெற்கில், ஒரு திறந்தவெளி திடல் வரும். அங்குதான் அனைத்து மாடுகளும் கூடி, அதன்பிறகு மேய்ச்சலுக்குச்செல்லும். ஊருக்குப்பொதுவான அந்த இடத்தையும் ‘மந்தை’ என்று சொல்வதுண்டு. அங்கு ஒரு ‘குத்துக்கல்’ நாட்டப்பட்டிருக்கும். ‘குத்துக்கல்’ என்றாலே நட்டமாக நிற்கும் கல் என்று பொருள். மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகள் அந்தக்கல்லில் உரசிஉரசித் தங்களது அரிப்பைப் போக்கிக்கொள்ளும். அவற்றிற்குச் சொறிவதற்குக் கைகள் இல்லை அல்லவா? அதுபோலவே, மேய்ச்சல் முடிந்து மீண்டும் ஊருக்குள் நுழையும் போதும் அந்தக் குத்துக்கல்லில் உரசும். அந்தக்கல்தான். ‘மந்தைக் குத்துக்கல்’.

எத்தனை மாடுகள், எத்தனை முறை உரசினாலும் அந்தக்கல்லுக்கு

*உரைக்கப்போகிறதா என்ன? அதனைத் தான், மௌனமாக இருக்கும் கல்லுளிமங்கனுங்களுக்கு உவமையாகக் கூறுவார்கள். (அதுசரி கல்லுளிமங்கன் என்றால் என்ன?)*

*அந்த மந்தைக்குத்துக்கல் அதற்காகவே நாட்டப்பட்டதா அல்லது அது ஒரு எல்லைக்கல்லா என்று எனக்குத் தெரியாது. ஆனால், காலம்காலமாகச் சொல்லப் பட்டுவரும் சொலவடை என்பதால், முற்காலங்களில் அந்தக் குறிப்பிட்ட காரணத்திற்காகவே அந்தக்கல் நாட்டப் பட்டிருக்கும் என்று நாம் யூகித்தால் தவறேதும் இல்லை. நம்முடைய அந்த யூகம் சரி என்கிறது 277வது ஐங்குறுநூறு பாடல்.*

**துறுகல்:**

**"குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்**
**கல்லா மந்தி கடுவனொடு உள்ளும்**
**குன்ற நாடநின் மொழிவல் என்றும்**
**பயப்ப நீத்தல் என்இவன்!**
**கயத்துவலர் குவளையின் அமர்ந்த கண்ணே"**

**(ஐங்குறுநூறு - 277 குறிஞ்சி - கபிலர்)**

*கபிலர் பாடிய ஐங்குறுநூறு குறிஞ் சித்திணையில், குரக்கு பத்து (குரங்கு பத்து) என்னும் தொகுப்பில் உள்ள பத்துப் பாடல்களில் இந்தப்பாடலும் ஒன்று. ஒவ்வொரு பாட்டிலும் மந்தி, கடுவன் என்னும் சொற்கள் இடம்பெற்றிருக்கும். இந்தப்பாடலில் வரும் முதல் வரியான 'குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்' என்பது குறவர் இல்லங்களின் முற்றத்தில் நாட்டப்பட்டிருக்கும் கல்லையே குறிக்கிறது. 'மாதீண்டு துறுகல்' என்பது, ஆடுமாடுகள் தங்களது உடலை உரசி அரிப்பைப் போக்கிக்கொள்வதற்காக நாட்டப்பட்ட கல் என்று சொல்கிறது. இந்த 'துறுகல்'தான் பிற்காலத்தில், 'குத்துக்கல்லாக' மாறியிருக்கிறது.*

*அக்காலத் தமிழர்களின் விருந்தோம்பும் பண்பை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை போன்ற சங்க இலக்கியப் பாடல்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளமுடிகிறது. சக மனிதர்களிடம் மட்டும் அன்பு பாராட்டாமல், தாங்கள் வளர்க்கும் ஆடு மாடுகளின் தேவையை உணர்ந்தும் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியும்போது, பல்லுயிர் ஓம்பிய அன்றையத் தமிழர்கள் பண்பாட்டில் மேலும் உயர்ந்துநிற்கிறார்கள்.*

*இன்று பெரும்பாலும் மந்தைகள் இல்லை. அதனால், குத்துக்கல்களும் இல்லை. என்றாலும், 'மந்தைக்குத்துக்கல்' என்னும் சொல்வழக்கு, அந்தப் பழக்கத்தை நினைவூட்டிக்கொண்டே இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்புவரையிலும்கூட சங்கத்தமிழரின் பண்பாட்டுத்தொடர்ச்சியாக மந்தைக்குத்துக்கல் நாட்டும் வழக்கம் இருந்தது குறிப்பிடத்தக்கது.*

*தென்காசிக்கு அருகில், 'குத்துக்கல் வலசை' என்று ஓர் ஊர் இப்போதும் உள்ளது. அந்த ஊரில் உருண்டுதிரண்ட 80 அடி உயரம்கொண்ட ஒரு பெரிய பாறை நின்றுகொண்டிருப்பதால்தான் அப்பெயர்பெற்றது என்று அவ்வூர் மக்கள் கூறுகிறார்கள். முற்காலத்தில், இக்குத்துக்கல் மக்களால் வழிபடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட கல்லும் 'துறுகல்'தான்.*

*செல்வம் என்னும் இளைஞனைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, அக்கல்லைப் பார்ப்பதற்காகச்சென்றேன். என்னுடைய மொபைலில் படங்கள் எடுத்து உதவியது செல்வம்தான். குத்துக்கல்லைச் சுற்றியுள்ள பாறையைக் கொஞ்சம் கொஞ் சமாக வெட்டி எடுத்திருக்கிறார்கள். போனால்போகட்டும் என்று கல்லையும், அதன் அடியில் கொஞ்சம் பாறையையும் விட்டுவைத்திருக்கிறார்கள். அரசின் அனுமதியோடு கனிமவளங்கள் அனைத்தும் கொள்ளையிடப்படும் இன்றைய காலத்தில், கொடும்பாவிகளின் கண்களில் படாமல் அந்தக்குத்துக்கல் நின்றுகொண்டிருப்பதே வியப்புத்தான்.*

*தென்காசிக்கு அருகில் கணக்குப்பிள்ளை வலசை, பெரியபிள்ளை வலசை, புல்லுக்காட்டு வலசை என்று மேலும் சில ஊர்கள் இருக்கின்றன. வலசை என்பதற்குச் சிற்றூர்' என்று பொருளாகும் (நன்றி, சிராப்பள்ளி மாதேவன்). நெல்லை*

மாவட்டம், சமூகரெங்கபுரத்தில் உள்ள ஒரு குத்துக்கல் (துறுகல்), சுடலைமாடனின் பல வடிவங்களில் ஒன்றான மாடசாமி என்னும் பெயரில் வழிபடப்பட்டு வருகிறது.

‘துறுகல்’ என்னும் சொல் ஐங்குறுநூறில் மேலும் சில பாடல்களிலும் இடம்பெறுகிறது. ‘துறுகல்’ என்பது நட்டமாக (நேர்க்குத்தாக) நிற்கும் ஒரே கல் என்னும் பொருளைத்தருகிறது. அது இயற்கையாகவே அப்படி நிற்கலாம்,

அல்லது மனிதர்களால் அப்படி நிறுத்தப்பட்டிருக்கலாம்.

**‘அன்னாய் வாழி வேண்டன்னை**
**நம்படப்பை**
**புலவுசேர் துறுகல்ஏறி அவர்நாட்டுப்**
**பூக்கெழு குன்றம் நோக்கி நின்று**
**மணிபுரை வயங்கிழை நிலைபெறத்**
**தணிதற்கும் உரித்துஅவள் உற்ற நோயே”**

**(ஐங்குறுநூறு-210-குறிஞ்சி)**

தலைவியின் களவு வாழ்க்கை வெளிப்பட்டதால், தலைவி வீட்டுச் சிறையில் வைக்கப்படுகிறாள். தலைவனை நினைத்துத் தலைவியின் உடல் மெலிகிறது. ‘தலைவி நம் வீட்டுத் தோட்டத்திற்காவது செல்ல அனுமதியுங்கள். அங்கு, மறி அறுப்பதற்கான ‘துறுகல்’ உள்ளது. அதன்மீது ஏறி நின்று தலைவனின் மலையை நோக்கினால், தலைவனைப் பார்த்ததுபோல தலைவி மகிழ்வாள். அதனால் அவளது நோயும் குணமாகும்‘ என்று தலைவிக்காகத் தோழி தாயிடம் வேண்டுகிறாள். இந்தப்பாடலில் ‘புலவுசேர் துறுகல்’ என்பது மறி அறுப்பதற்காக நாட்டப்பட்ட குத்துக்கல் என்று புரிந்துகொள்ளமுடிகிறது.

**“சுரும்புஉணக் களித்தபுகர்முக வேழம்**
**இரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்நின்”**

**(ஐங்குறுநூறு-239, குறிஞ்சி-தெய்யோ பத்து)**

ஆண் யானைக்கு, வண்டுகள் உண்ணும் அளவிற்கு மதநீர் வழிகிறது. அந்த ஆண் யானை, சொரசொரப்பான துறுகல்லைத் தன் பிடி யானை என்று மயங்கித் தழுவி நிற்கிறது.

**சிறுதினை மேய்ந்த தறுகண் பன்றி**
**துறுகல் அடுக்கத்து துணையொடு வதியும்“**

*(ஐங்குறுநூறு 262 குறிஞ்சிகேளல் பத்து)*

**“சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்**
**துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி**
**ஐவனம் கவரும் குன்ற நாடன்”**

**(ஐங்குறுநூறு-267குறிஞ்சிகேளல் பத்து)**

**“மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்**
**துறுகல் அடுக்கத் ததுவே பணைத்தோள்**
**ஆய்தழை நுடங்கும் அல்குல்**
**காதலி உறையும் நனிநல் ஊரே”**

**(ஐங்குறுநூறு-291குறிஞ்சி - மஞ்ஞை பத்து)**

ஔவையார் பாடிய ஓர் அகநானூற்றுப் பாடலிலும் ‘துறுகல்’ பற்றிய குறிப்பு வருகிறது.

**“ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த**
**…**
**துறுகல் விடர் அளைப் பிணவுப் பசி கூர்ந்தென**
**பொறி கிளர் உழுவைப் போழ் வாய் ஏற்றை**
**…**
**வெள்ளி வீதியைப் போல நன்றும்**
**செலவு அயர்ந்திசினால் யானே;**

**(அகநானூறு, பாடல் 147 - பாலைத்திணை ஔவையார்)**

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியானவள் தோழிக்குத் தனது நிலையை உணர்த்தும் பாட்டு.

தலைவன் சென்ற வழியில், மலைச் சாரலில்மலைப்பிளவாகியக்குகையில்,பிடவ மலர்களுடன் மலர்ந்த நறுமணம் கொண்ட வேங்கை மலர்களின் இதழ்கள்போல் பெண்புலி மூன்று குட்டிகளை ஈன்றிருக்கிறது. அதன் பசிப்பிணியைப் போக்க ஆண்புலி இரைதேடுகிறது. அது, உடைந்த கொம்புகளை உடைய கலைமான் (ஆண்மான்)எழுப்பும்ஒலிகேட்கிறதாஎன்று கவனமுடன் காத்திருக்கிறது. அப்படிப் பட்ட எல்லையில்லாக் காட்டிலே, தனது காதலனைத் தேடிச்சென்ற வெள்ளி வீதிபோலத் தானும் செல்ல விருப்பம் கொள்வதாகத் தலைவி உரைக்கிறாள்.

புலிக்குகையில் பெண்புலி மூன்று குட்டிகளை ஈன்றெடுத்திருப்பதை ஔவையால் எப்படி அறிந்துகொள்ள முடிந்தது என்னும் கேள்வியும் எழத்தான்

செய்கிறது. அன்றைய வாழ்வுமுறையை முழுமையாக அறிந்தால் மட்டுமே, அக்கேள்விக்கான விடை கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இயற்கையில் மலைக்குகைகள் பல வடிவங்களில், பலவிதங்களில் உருவாவதுண்டு. இந்தப் பாடலில் 'துறுகல் விடர் அளை ' என்று வருவதால், நிமிர்ந்து நிற்கும் பாறைகளால் உருவான குகை என்பதாக பொருள்கொள்ளலாம். எனவே இங்கு 'துறுகல்' என்பது, குகையை உண்டாக்கும் நிமிர்ந்த மிகப்பெரியப் பாறைத்துண்டுகளைக் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளலாம்.

**துறுகல்லுக்குச் சான்றாக மேலும் சில பாடல்கள்:**

**"களிறு மலைந்தன்ன கண்கூடு துறுகல்"**

*(மலைபடுகடாம் 384)*

**"பூம்பொறி உழுவை போழ்வாய் ஏற்றை**
**தேம் கமழ் சிலம்பின் களிற்றொடு பொரினே**
**துறுகல் மீமிசை உறுகண் அஞ்சாக்க**
**குற குறுமாக்கள் புகற்சியின் எறிந்த**
**தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது.**
**பந்தாள் செந் தினை படு கிளி ஓப்பும் "**

*(நற்றிணை 104, வரிகள் 16, குறிஞ்சி, பேரி சாத்தனார்)*

வரிப்புலியும், யானையும் சண்டையிடுகின்றன. அதனைக்கண்டு அஞ்சாத குறக்குடிச் சிறுவர்கள் அருகிலுள்ள உயரமான பாறைமீது (துறுகல்) ஏறிநின்று 'தொண்டகம்' என்னும் சிறுபறையை முழக்கி, அச்சண்டைக்காட்சியைக் கண்டு ஆரவாரம் செய்கின்றனர். அந்த ஆரவாரம், அருகிலுள்ள தினைப்புலத்தில் மேயும் கிளிகளை விரட்டுகின்றது.

**"துறுகல் மீமிசைக் குறுவனக் குழீஇ"**
**(நற். பாடல்-206)**

**"துறுகல் அயல தூமணல் அடைகரை"**
**(நற். பாடல்-243)**

**"துறுகட் கண்ணிக் கானவர் உழுத"**
**(நற். பாடல்-386)**

**பெரும் பெயல் உழந்த இரும் பிணர்த் துறுகல்"**
**(குறு.பாடல்-13)**

**"துறுகல் அயலது மாஅணை மாக் கொடி"**
**(குறு., பாடல்-36)**

**கருங் கால் வேங்கை வீ உகு துறுகல்"**
**(குறு. பாடல்-47)**

**"மழை கழூஉ மறந்த மாயிருந் துறுகல்"**
**(குறு.பாடல்-279)**

**"மன்றத் துறுகல் மீமிசை பலவுடன்"**
**(குறு.பாடல்284)**

**தோல்தா தோல்தா என்றி; தோலொடு**
**துறுகல் மறையினும் உய்குவை போலாய்;"**
**(புறநானூறு.300-அரிசில் கிழார்)**

'கேடயம் கொண்டுவா, கேடயம் கொண்டுவா' என்று கத்துகிறாய். நீ கேடயத்துடன், உயர்ந்துநிற்கும் பாறையின் (துறுகல்) பின்புறம் ஒளிந்துகொண்டாலும் இன்று உன் உயிர் போவது உறுதி" என்று சொல்லும்விதமான புறநானூற்றுப்பாடல் இது. இங்கும் 'துறுகல்' என்பது இயற்கையாகவே நிமிர்ந்து நிற்கும் கல்லைக் (பாறையை) குறிக்கிறது.

இங்கே நாம் குறிப்பிட்ட சில சங்க இலக்கியப்பாடல்களில் இருந்தும், இயற்கையாகவோ, செயற்கையாகவோ நிமிர்ந்து நிற்கும் தட்டையான, கூர்மையான, உருண்டையான எந்த ஒரு கல்லும், அது ஒரே கல்லாக இருக்குமானால் 'துறுகல்' என்று அழைக்கப்பட்டிருப்பதாகப் புரிந்து கொள்ளலாம்.

சங்கத்தமிழருக்கும் நமக்குமான முதன்மையான வேறுபாடு, அவர்கள் இயற்கைசார்ந்து இயல்பாக வாழ்ந்தார்கள். நாம் இயற்கையைவிட்டு வெகுதூரம் விலகி வந்துவிட்டோம். இன்றைய நம்முடைய வாழ்வுமுறை என்பது பலவிதங்களிலும் செயற்கையானது.

சிலர் பழமையை மீட்டெடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். நல்லதுதான். ஆனால் அது முடியுமா என்னும் கேள்வியும் கூடவே எழுகிறது. முன்னோக்கியே ஓடும் காலத்தில், வரலாறு என்பது ஒருவழிப் பாதையாகவே உள்ளது. நம் வாழ்வில், இன்றும் நம்மோடு ஒட்டிக்கொண்டிருக்கும் நம் முன்னோர்கள் நமக்கு வகுத்தளித்த இயற்கை முறைகளை, நீதி நெறிகளைக் கடைபிடித்து ஒழுகினாலே மேலும் இயற்கையைவிட்டு விலகாமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம். அடுத்தடுத்து வரும் நம் தலைமுறையினருக்கும், சிதைக்காமல், சீரழிக்காமல் இயற்கையை விட்டுச் செல்லலாம். அப்படிப்பட்ட விழிப்புணர்வு மிகவும் அவசியமாகிறது.

●

சிறுகதை

# குலசாமி

## ச. மோகன்

“ஏம்புள்ள ராமாயி... இந்த நோஞ்சான் பயலுக்கொசரம் இப்படி கண்ணாலம் கட்டிக்காம கெடக்கிறியே. காடு கரைன்னு இருந்தா காலா காலத்துல பயிர் வைக்கணும் புள்ள...’’ என்று கூலி நெல்லு வாங்கும்போது வம்படி பேசும் காணிக்காரர்களையும் சரி, கூலிவேலைக்குப் போம்போதும் வரும்போதும் சாவடித் திண்ணையில் இருந்துகொண்டு பார்வையாலேயே தன் உடம்பை போகிக்கும் உள்ளூர் ஏளவட்டங்களையும் சரி, ஒரு மழுப்பலான சிரிப்பிலேயே கடந்துவிடுவாள் ராமாயி.

ஆனாலும் சில ராத்திரிகளில் அந்த தார்மீக உணர்வு, அவளையும் மீறி ஆட்கொண்டு விடுகிறபோது மாரில் ஏதோ பூச்சி ஊர்கிற மாதிரி இருக்கும். உடம்பெல்லாம் வெக்கை வழியும். ரெண்டு கைகளையும் இடுக்கிக்கொண்டு உடம்பை குறுக்கிக்கொள்வாள்.

கவுத்துக்கட்டிலில் படுத்திருக்கும் சின்ராசு, அண்ட்ராயர் நழுவிக்கிடப்பது கூடத் தெரியாமல் தூக்கத்தில் கடைவாயில் எச்சில் ஒழுக உளறிக்கொண்டிருப்பான்.

ராமாயியோ ஈச்சம் பாயில் ஒரு புழுவைப் போல நெளிந்து கிடப்பாள் பின்னங் கழுத்தில் மின்னலாய் அனல் பாய, பாயில் இடவலமாய் புரண்டு நெளிந்து கொண்டிருப்பாள். அப்போதெல்லாம் ராமாயியின் அடிவயிற்றுச் சேலை மெதுவாக நனைந்துகொண்டிருக்கும்.

***

மெட்ராசிலிருந்து சின்ராசு வந்து சேர்வதற்குத் தாமதமாகிவிட்டது. ராமாயிக்கு பங்காளி வகையறாக்கள் என்று யாருமில்லை. இன்னும் சொல்லப்போனால் சின்ராசுவைத் தவிர ஊரில் அவளுக்கு வேறு சொந்தமே இல்லை. சாதிக்காரர்களே பொதுவில் தேங்காய் உடைத்து சாமியை வழியனுப்பியிருந்தார்கள்.

மூலை வீட்டிலிருந்து இரவல் வாங்கி வரப்பட்ட மரப்பெஞ்சில் சவமாய் கிடத்தப்பட்டிருந்த ராமாயியின் முகம், வெறுமனே கண்ணை மூடிக்கொண்டு படுத்திருப்பதைப்போலத்தான் இருந்தது. தலைமாட்டில் எரிந்து கொண்டிருந்த குத்துவிளக்கும் கூட இரவல்தான். தினக்கூலியாகவே வாழ்வாடி முடித்திருந்த ராமாயிக்கு, அந்தப் பழைய குடிசை வீட்டை விட்டால் வேறெதற்கும் ஐவேசு இல்லை.

பொம்பள கணக்காய் சின்ராசு மாரடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கினான்.

ஆயப்பன் மொகத்த கூட பாக்காத பாவிப்பய என்னய, பெத்த தாயாட்டம் சீப்பட்டு சின்னப்பட்டு வளத்தியே! மூச்சுப்போற நேரத்துல கூட இருக்கறதுக்கு கூடநாதியத்த பயலா போயிட்டனே...

சின்ராசுவின் ஒப்பாரிச் சத்தம், சாவுப்பந்தலையும் தாண்டி தெருவில் எகிறிக் கொண்டிருந்தது.

இறுக்கிக் கட்டியிருந்த ராமாயியின் பெருவிரல்கள் கன்னிப் போயிருந்தன கால்மாட்டில் விழுந்து சின்ராசு கதறிக் கொண்டிருந்தான்.

மெட்ராசிலேயே கண்ணாலம் முடித்துக்கொண்டதால், ராமாயியோடு அதிக ஒட்டுதல் இல்லாத சின்ராசுவின் பொண்டாட்டியும் மகளும் அழத் தோன்றாமல் அல்லது அழத்தெரியால் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கால்மாட்டில் அழுதுகொண்டிருந்தவன், சட்டென எழுந்து ராமாயியின் கைகளைப் பற்றிக்கொண்டு பெருங்குரலெடுத்தான். காடு காடா களை வெட்டியும் பயிர் நட்டும் காப்புக் காய்த்திருந்த ராமாயியின் உள்ளங்கையில் சின்ராசுவின் கண்ணீர் துளிகள் ஈரமாய் கசிந்துகொண்டிருந்தன.

எத்தே... போன வாரம் கூட போன்ல பேசுனனே. ஒடம்புக்கு சொகமில்லன்னு

ஒரு வார்த்த சொல்லியிருந்தன்னா ஒரு எட்டு ஓடியாந்திருப்பனே...

தேம்பி அழுதுகொண்டிருந்த சின்ராசுவை ரெண்டுபேர் தூக்கி விட்டார்கள்.

அதான் அண்ணன் மவன் வந்துட்டான்ல. அப்புறம் என்னப்பா!

மானம் வேற ஒரு மாதிரியா இருக்குது. சட்டுப்புட்டுன்னு ஆவவேண்டியதப் பாருங்கப்பா... என்று கூட்டத்திலிருந்த சன்னாசி கெழவன் குரல் எழுப்பினான்.

உடனே சித்தேரி கம்மாயிக்குத் தண்ணி எடுத்துவர ஏற்பாடானது. ஊர் தொழிலாளிகள் தங்களுக்குரிய சடங்குகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். நமத்துப்போயிருந்தமோளத்தைகருவக்கட்ட முனையின் தீக்கங்கில் மோளக்காரன் சூடேற்றிக்கொண்டிருந்தான்.

ராமாயியோட வைராக்கியம் யாருக்கும் வாராதுடி எத்தினிப் பயலுவ ஆலவட்டம் போட்டானுங்க...

புள்ளக்குட்டி பெத்தவளுக்கு இருக்கற மொகக்களை, கண்ணாலம் முடிக்காதவளுக்கு இருக்காது. நரங்கி போயி கெடப்பாளுவ. ஆனா நம்ம ராமாயியப் பாரு. சாமி செலயாட்டமில்ல படுத்துக் கெடக்கறா...

அன்னாடங்காச்சின்னாலும் அவள ஏத்தியம் தாத்தியமா எவளாவது பேசிற முடியுமா என்ன!.....

மழை நாள் சாவு என்பது கிராமங்களில் உவத்திரியமானது. செத்தவனுக்கும் இம்சை. இருக்கிறவனுக்கும் இம்சை.

கெழவன் சொன்னமாதிரியே வடக்கால மானம் இருட்டுக் கட்டிக்கொண்டுதான் வந்தது.

***

எத்தே... பயலுவல்லாம் சோமாவரத்துக்கு போறானுங்க. நானும் போறேன். ரெண்டு ரூவா காசு குடுத்தே...

காலையிலிருந்து நாலாவது முறையாகக் கேட்டுவிட்டான் சின்ராசு, 10 வயது, அண்ணன் மகனின் கெஞ்சலைக் கேட்க ராமாயிக்குப் பாவமாகத்தான் இருந்தது. ஆனால் கூலியை நெல்லாக வாங்கும் ராமாயி காசுக்கு எங்கே போவாள்.

சின்ராசு மீண்டும் கேட்டான்.

எத்தே ரெண்டு ரூவா காசு குடுத்தே..

ஐப்பசியில் அழிச்சாட்டியம் பண்ணிவிட்டு போன அடமழைக்கு கார்த்திகையிலும் ஓதம் தாக்கிக் கிடந்தது கருப்பஞ்சருவு வேய்ந்த அவளின் கூரை வீடு. அழுக்குத் துணியும் ஏனபானமுமாய் வீடே ஒரே கந்தரகோலமாய் கிடந்தது.

எலேய் ! ஏண்டா இப்படி அக்கப்போரு பண்ற. காசு இருந்தா தரமாட்டானா காத்தால இருந்து சாப்பிடாம பொணக்கடி போட்டுட்டு கெடக்கிறியே. சோறு போடறேன். ஒரு வா சாப்டுட்டுப் போடா என்று சொல்லிக்கொண்டே அடுப்பிலிருந்து இறக்கிய சோத்துச் சட்டியை வடித்துவிட்டாள்.

பக்கத்தில் பொடை அடுப்பில் பழைய கொழம்பு கொதிவிட்டுக்கொண்டிருந்தது.

சின்ராசுவுக்கு மாரியாயி வார்த்து கெடந்தபோது, சமயபுரத்துக்கு வர்றேன்னு வேண்டிக்கிட்டு முடிஞ்சுவச்ச காசுல இருந்து ரெண்டு ரூபாய் எடுத்துத் தந்தாள் ராமாயி.

***

ராமாயிக்கு ஊரில் ரத்த சொந்தம் யாரும் கிடையாது என்றாலும் அக்கம்பக்கத்தில், மாமா ...அத்தை... சித்தப்பா... என்று எல்லோரையும் மொறை வச்சித்தான் கூப்பிடுவாள். குன்னுமோட்டில் துணி துவைத்துக்கொண்டிருக்கும்போது ஒருநா எதுத்த வூட்டு இருளாயி அத்தை கேட்டாள்;

ஏண்டி... சின்ராசுவையும் கூடவே வச்சிப் பாத்துக்கற இடமா பேசி கண்ணாலம் கட்டிக்கலாம்ல...

அட போத்த... தாலி கட்டறதுக்கு முன்னாடி எல்லா பயலுவளும் சரிம்பானுவ. அப்புறம் பேச்சு மாறிட்டா என்னா பண்றது. ஏஞ்சின்ராசுக்கு என்ன வுட்டா யாரு இருக்கா!

நாலு பேர வச்சு பேசிக் கட்டிதான் முடிக்கணும். அதுக்குன்னு இப்படியே சும்மா வுட்ற முடியுமா?

சரி! ஓம்பிரகாரம் புருசங்காரன் ஓக்கியமா இருக்கான்னே வச்சிக்குவோம். ஆனா வாக்கப்பட்டு போற வூட்டுல நாத்தனாக்காரி எப்புடியோ. ஒப்புடியாக்காரி எப்புடியோ?

என்றாலும் ஊரில் ராமாயிக்கு ஏடக்குறுக்க மாப்பிள்ளை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். கடைசிமுட்டும் ராமாயி கண்ணாலத்துக்கு கண்டிசனாக மறுத்துவிட்டாள்.

சாவடித் திண்ணை கண்கள் தினமும் அவளை மொய்த்துக் கொண்டுத் தானிருந்தது.

களையெடுக்கும் போதோ, பயிர் நடும் போதோ தீப்பட்ட மாதிரி தொசுக்குன்னு அந்த நெனப்பு அப்பப்ப ராமாயிக்கு வந்து போகும். வூட்டுக்கு தூரமாகும் அடுத்த ஏழெட்டு நாட்கள் புழுவாட்டம் புழுங்கி படாத பாடுபடுவாள். அதேநேரம் சின்ராசுவின் “ எத்தே “ என்கிற கூப்பிடு குரல் அவளுக்குள் ஒலித்துக் கிடக்கும். எப்படியோ உடம்பை பதுக்கி, உணர்வுகளை ஒதுக்க பழகிக்கொண்டிருந்தாள் ராமாயி.

***

உசரம் கம்மின்னாலும் ராமாயி அப்படி ஒன்னும் ஏசகோசயான ஆளு கெடையாது. நாலாவதோ... அஞ்சாவதோ எத்தினியாவது வரைக்கும் படிச்சான்னு அவளுக்கே ஞாபகமில்லை. 12 வயசிலருந்தே பயிர் நடவும் களையெடுக்கவும் என கூலிக்குப் பழகிவிட்டாள்.

ராமாயி அண்ணங்காரன் ஒருத்தன் தம்பட்டங்காளையாட்டம் ஊர சுத்திக்கிட்டுக் கிடந்தான். அவனுக்கு எப்படியோ ஒரு கண்ணாலத்தை பண்ணிவச்சிட்டு ஆயும் அப்பனும் போய்ச் சேந்துட்டாங்க. சம்சாரியான பின்பும் அண்ணங்காரனின் அலும்பு ஓயவில்லை. சின்ராசு பொறந்த கொஞ்ச நாள்லயே, சீக்காளியாகி விட்ட பொண்டாட்டிய விட்டுட்டு கூத்தியா கூடவே போயி ஒண்டிக்கிட்டான்.

சாதிசனம் சாடமாடயா சொல்லியும், நேரா சொல்லிப் பாத்தும் அவன் கேக்கற மாதிரித் தெரில. கடைசில ஒருநா ராத்திரியோட ராத்திரியா ஊர விட்டே ஓடிட்டான்.

சீக்காளி அண்ணிக்காரியும் ரொம்பநாளைக்குத் தாக்குப் பிடிக்கல. பெரட்டாசி மூணான் நாளு, ராமாயி கையில சின்ராசுவ ஒப்படச்சிட்டு அந்த மவராசி பொட்டுன்னு கண்ண மூடிட்டா.

அதுக்கப்புறம் 3 வயசு சின்ராசுவ ராமாயிதான் காவுந்து பண்ணினாள். கொஞ்சம் மசமசன்னு கெடந்த சின்ராசுவ அஞ்சாறு வயசு வரைக்கும், எங்க போனாலும் இடுப்புல தூக்கிக்கிட்டேதான் அலைவாள். ராமாயி களப்பறிக்கிற காட்டுலயும் பயிர் நடற காட்டுலயுந்தான் சின்ராசு வளர்ந்தான்.

***

புட்டியில் நெல்லை அள்ளிக்குடுத்து, கடையில போய் சாமான் வாங்கி வரச்சொல்லும் போது, எத்தே... அப்படியே எனக்கு ரெண்டு கல்கோனா வாங்கிக் கட்டுமா! என்று பாவமாகக் கேட்பான்

அப்போதெல்லாம் இந்தப் பச்சப் பாலவனுக்கு நல்லது பொல்லது கூட ஆக்கிப்போட முடியலயே என்று ராமாயி தனக்குத்தானே நோப்பாளித்துக் கொள்வாள்.

சிலேட்டுப்பையை கையில் கொடுத்து அனுப்பினால், சின்ராசு பள்ளிக்கூடத்துக்கு போமாட்டான். ஒரே ஓட்டமாக கொல்லைக்குத்தான் ஓடுவான். எதாவதொரு வயனார மரத்தில் பையை மாட்டிவிட்டு, பையன்களோடு சேர்ந்து ஓணான் அடிக்கத் தொடங்கி விடுவான். அடித்த ஓணான்களைத் மரத்தில் கட்டித் தொங்கவிட்டுட்டு, மூலை வீட்டு கெணத்துக்கு எல்லா பையன்களோடும் குளிக்கப் போய்விடுவான்.

சின்ன வயசுல நைநைன்னு கெடந்த சின்ராசு பத்துப் பன்னன்டு வயசுக்கு மேல, கைக்கு சிக்காத காத்து மாதிரி பறந்து கொண்டிருந்தான். தொலக்குழியில இருந்து கெணத்துக்குள்ள அவன் சொரக்கான் அடிக்கறத பாக்கணுமே!

ஆனாலும் ராமாயியிடம் வசமாக மாட்டிக்கொள்ளும்போது ஊருபட்ட பொய் பேசுவான்.

மருதையான் மேல சத்தியமா நான் இன்னைக்கு பள்ளிக்கூடம்தாத்த போனேன் என்று மூஞ்சை பாவமாய் வைத்துக்கொண்டு சொல்லுவான். ராமாயி புளிய மிலாரை கையில் எடுப்பாளே தவிர, அவனை அடிக்க அவளுக்கு மனசு வராது.

அப்பனுக்குப் புள்ள தப்பாம பொறந்திருக்குன்னு நோப்பாளித்துக் கொள்வாள். நீயும் ஒருநா அந்த ஓடுகாலிப்பய மாதிரிதான்டா ஆவப்போற!

அவள் வாக்கு அப்படியே ஒருநாள் பலித்துவிட்டது. யாருக்கும் அடங்காமல், மீசை அரும்பிய வயதில் ஊரைவிட்டு ஓடிப்போன சின்ராசுவை ராமாயியைத் தவிர ஊரில் பெரும்புடியாய் எல்லோரும் மறந்தேபோய்விட்டார்கள்.

சின்ராசு ஓடிப்போன ரெண்டொரு வருடங்கள் பித்தரச்சி போல நடமாடிக் கொண்டிருந்தாள் ராமாயி. கடேசிக்காலத்துல காவுந்து பண்ண ஒரு தொணை வேணுமின்னு, மீண்டும் ராமாயிக்கு கண்ணாலம் முடிக்க அக்கம்பக்கத்தவர்கள் எத்தனித்தபோது, ராமாயிக்கு இரவில் தூரம் போறது நின்றுவிட்டிருந்தது.

***

ரொம்ப வருடங்கள் கழித்து கண்ணாலம் முடித்த கையோடு ஊருக்கு வந்திருந்தான் சின்ராசு. அடையாளம் தெரியாத அளவுக்கு சின்ராசு வளர்ந்துவிட்டிருந்தான். அத்தைக்கு சீலை எல்லாம் கூட வாங்கி வந்திருந்தான் ஆனால் சின்ராசுவைப் பார்த்ததில் ராமாயிக்கு அப்படியொன்றும் சந்தோசம் ஏற்பட்டுவிடவில்லை. அவள் எல்லாவற்றையும் பறிகொடுத்த பின்பு யாரு வந்து பாத்தா என்ன... பாக்காட்டி என்ன...?

அப்புறம் அரியோம்னு மெட்ராசிலிருந்து எப்பவாவது ராமாயிக்கு பணம் அனுப்புவான். கொழந்தை பொறந்த சமயத்தில் ஒரு தடவ வந்து அத்தையிடம் புள்ளைய காட்டிவிட்டுப்போனான். ஏடக்குறுக்க ரெண்டொருதரம் வந்து போனான். அப்படி வரும்போதெல்லாம் ஏன் ராமாயி அத்ததான் எனக்குக் குலசாமின்னு தெருவில் பார்க்கிறவர்களிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பான்.

சோத்த எனக்குப் போட்டுட்டு, எத்தினி நா வெறும் நீராகாரத்த குடிச்சிட்டு எங்கத்த வேலைக்குப் போயிருக்கு தெரியுமா...

ஏரியில கத்தா போட்டு புடிச்சிட்டு வந்து எங்க அத்த வைக்கிற மீன் கொழம்பாட்டம் இன்னவரைக்கும் நான் வேறெங்கையுமே சாப்டதே இல்ல.

எங்கம்மாக்காரி உசுரோட இருந்திருந்தாக் கூட, என்ன இப்படியெல்லாம் வளத்திருப்பாளான்னு தெரியல...

ஏன் அத்ததான் எனக்கு குலசாமி... என்று சொல்லிக்கொண்டு ஊரெல்லாம் திரிவான்.

***

வடக்கே இருட்டுக் கட்டிய மானம் தூறத்தொடங்கிவிட்டிருந்தது.

பரபரப்பாய் மரப்பெஞ்சிலிருந்து பாடையேற்றப்பட்ட ராமாயி நனைந்துக் கொண்டேதான் இடுகாட்டுக்குச் சென்றாள். பாடமாத்தியைத் தாண்டியபோது, தூறலாக சிணுங்கிய மழை கொஞ்சம் பெரிதானது. அவசர அவசரமாக ராமாயியை இடுகாட்டுக்குக் கொண்டு சேர்த்தார்கள்.

குழிமோட்டில் சாங்கியங்களும் அவசர அவசரமாகவே செய்யப்பட்டன. எல்லா சாங்கியங்களையும் சின்ராசுதான் செய்தான். பாடையிலிருந்து குழிக்குள் இறக்கிவைக்கப்பட்ட ராமாயியின் நனைந்துபோயிருந்த உடல் மட்டும் ஆனால் சூடாகவேயிருந்தது. அவளது

நரைத்த தலையில் மழைத்தூறல் பொட்டு பொட்டென விழுந்து தெறித்துக் கொண்டிருந்தது.

கடேசியா மூஞ்ச பாக்கறவங்க எல்லாம் ஒருதரம் பாத்துக்கங்க...

குழிக்குள் கிடந்த அத்தையின் முகத்தை சின்ராசு கடேசியாக ஒரு தரம் பார்த்தான். ராமாயியின் சுருங்கிய முகத்தில், சின்ராசுவின் கூற்றுப்படி அந்த குலசாமியின் உயிரற்ற முகத்தில் ஏக்க ரேகைகள் வரிக்கோடிட்டுக் கிடந்தன. ●

# வெசக்கடி.. சொம்பு.. பாவாடை..

## கோ.அருணகிரி



வெளக்க கொளுத்துங்கடா.. வெளக்க கொளுத்துங்கடா... வேதவள்ளி வீட்டு வேலியோரமா யாரோ ஓடுற மாறி இருக்குன்னு கீச்சிக்கொரலா கத்தும்போதே இது வெசக்கடி வேதரத்தினம்தான்னு தூங்காம முழுச்சிக்கிட்டிருந்த சனங்களுக்குப் புரிஞ்சுட்டு. கண்ண கொண்டி லேசா மூடுனவங்கமட்டும் என்னம்மோ ஏதோன்னு வாரிசுருட்டிட்டு எந்திரிச்சாங்க...

எப்பவும் ராத்திரி படுக்கையில, தலமாட்டுல ஒரு லோட்டா தண்ணியும் தலகாணிக்கு அடியில நெருப்பு பொட்டியையும் இப்படி அவசர ஆத்திரத்துக்கு வெளக்கேத்தனுன்னா தடுமாறக் கூடாதுன்னு வச்சிக்கிட்டுத்தான் படுப்பாரு பாவாடைசாமி என்கிற கண்ணையன்.

வெசக்கடி விசயம் இல்லாம கத்தமாட்டான்னு பதட்டத்தில நெருப்புப் பொட்டிய தேடுறேன்னு லோட்டாவுல இருந்த தண்ணியத் தட்டிவுட்டுவாறு பாவாடைசாமி.

“தண்ணிய கொஞ்சம் தள்ளி வைக்காம எங்க வச்சிருக்கா பாரு கண்டாறஒலி பொடக்குள்ளன்னு”

தா பொண்டாட்டியைத் திட்டிக்கிட்டே நெருப்புப் பொட்டிய கொளுத்துன்னா, அதுவும் ரெண்டு குச்சி அணஞ்சி மூணாவலு குச்சிக்குத்தா எரிஞ்சது.

“வக்காளஒலி பயபுள்ள எரியுதா பாரு”ன்னு அதயும் ரெண்டு திட்டு திட்டினாரு.

“இவ நடவடிக்கை சரியில்லை. தலைக்கு ஒசந்த பொண்டு புள்ளையோள வச்சிருககோம் நாம. இவள நடுத்தெருவுல குடிவைக்காதீங்கன்னு தலமாடா அடிச்சிக்கிட்டேன்.. யாரு கேட்டா? இன்னக்கி தெருவுக்கே, ஆம்பளையோள வரச்சொல்லுற அளவுக்கு துளுருவிட்டுப் போச்சி..!”

வவுத்துல தூக்குனாப்புல வேட்டிய கட்டிக்கிட்டு வேதவள்ளி வூட்டு வேலியோரமா நின்னு வெசக்கடி சத்தம் போட்டுக்கிட்டு இருக்கையிலே பாவாடைசாமிக்கு புரிஞ்சுபோச்சு. இது ஏதோ அக்கப்போரு விசயந்தான்னு.

கடவாச படியிலேயே தலைய வச்சிப் படுத்திருந்தேன். நல்ல காத்தடிச்சதுல கண்ண சொருகுனுச்சி. அசந்து தூங்கிட்டா வேட்டி ஒரு பக்கம், நாம ஒரு பக்கமா கெடக்க வேண்டி இருக்கு. காலம்பற தண்ணிப் புடிக்க வர்ற பொண்டுவ திட்டுவாளுவோ. கனத்த ஒடம்ப கைய ஊணி, கால ஊணி பட்டுன்னு எந்திரிக்க முடியல. சரி உள்ள போயி படுத்துருவோமுன்னு நெனக்கையிலே வெசக்கடி கொரலு கேட்டுச்சின்னு சொல்லிக்கிட்டே வெறும் ஒடம்போட வவுத்த தள்ளிக்கிட்டு குண்டு ராஜேந்திரனும் வந்தாரு.

‘‘எம்மா வேதவள்ளி... சித்தாளு வேலைக்குப் போறே.. சமய வேலைக்குப் போறேன்னு.. நீ சொல்லிக்கிட்டு போயிட்டு வந்தாலும், எங்க போறே... ஓ வவுத்துப் பாட்டுக்கு ஏதோ செய்யி. நாங்க யாரும் ஒனக்கு படியளக்கப் போறதில்லே. இப்படி தெருவுக்கே ஆம்பளையோள வரச்சொல்றது நல்லவாம்மா இருக்கு...’’

‘‘என்ன பாவாடைசாமி... நல்ல பொம்பளைக்கு புத்தி சொல்ற வர்ற மாதிரி பேசிக்கிட்டு இருக்கீங்க. நாளைக்கு தெருவ காலிப் பண்ணிட்டு போடின்னு சொல்றிங்களா... இன்னனக்கி இவ வூட்டுக் கதவ தட்டுறவன்.. நாளைக்கி எங்க வூட்டு கதவயும் தட்டமாட்டானா?’’

“எம்மா.. பொண்டு புள்ளைங்க எல்லாம் ஆளாளுக்கு ஒரு பேச்சி பேசாதீங்க. ஆம்பளைங்க கூடி ஒரு முடிவெடிப்பாங்க..”ன்னு சொல்லிச்சி கண்ணுமணியக்கா.

“ஆளு வந்ததா நீ பாத்த.. இல்லையா வெசக்கடி?”

“யார்றா.. யார்றான்னு கேட்டுக்கிட்டே உடியார்றேன்.. ஏ.. நெஞ்சு படபடப்பே நிக்கலையே நா. என்ன பொய்யா சொல்றேன்..?”

“எம்மா.. வேதவள்ளி. நீ என்ன சொல்ற..?

‘ எனக்கு ஒன்னும் தெரியாதுங்கைய்யா. எல்லாரும் போல நானும் சத்தம் கேட்டுத்தான் வெளியே வந்தேன்னு..”

முந்தானையில் வாயமூடி அழுதுக்கிட்டே பேசினிச்சி வேதவள்ளி.

ஏதோ இந்த வாட்டி வந்தவன் ஓடிட்டான். நீயும் தப்பிச்ச. அடுத்து இப்புடி ஏதும் நடந்துச்சி, வந்தவனப் புடிச்சி தந்திக் கம்பத்துல கட்டிப் போட்டுட்டு, ஒஞ் சாமாஞ்செட்டுவோள அள்ளித் தெருவுல வச்சிடுவோம் ஆமா சொல்லிப்புட்டேன். சரி.. சரி... எல்லோரும் போய் படுங்கைய்யானு..” எழுப்பிவிட்ட வெசக்கடி வேதரத்தினமே முடிச்சிம் வச்சாரு.

இதுல பெரிய வேடிக்கை என்னன்னா.. காலாம்பற பொண்டுவக்குள்ள வேதவள்ளி பேசிக்கிட்டு இருக்கையில விசயம் என்னன்னு வெளியே வந்துச்சி. “யாரோ கதவ தட்டுனாப்புல இருந்துச்சி. யார்ன்னு இருட்டுல மூஞ்சி சரியா தெரியல. எதா இருந்தாலும் இந்த நேரத்துல நம்ம வூட்டு கதவத் தட்டுறவன் நல்லவனா இருக்கப் போறதில்லேனு, கடிக்கிகுடிக்கின்னு பேசிக்கிட்டே எடு வெளக்கமாறேன்னு வெளக்க கொளுத்துனா எனக்கு சொரேர்ன்னு ஆயிட்டு. இவரு நிக்கிறாரு.. யாரு வெசக்கடிதா!”

“ஒப்புறானா.. ஒப்பந்தன்னான.. இது என்னடி கூத்து..? அப்புறம்’’

“எம் பொண்டாட்டி சீக்காளி. எனக்கு எந்த நல்லலு கெட்டதும் இல்லேன்னு கையப் புடிச்சாரு. வாயில் நல்லா வந்துரும்னு வெளக்கமாத்தே ஓங்குனம்பாரு.. நா மசியலேன்னதும் தெருவுல போயி நின்னு யாரோ வந்தமாறி இருக்குன்னு இவரே கத்தவும் எனக்கு வேத்துப் போச்சி. ம்.. சரி இவன் நம்மள இங்க அசிங்கப்படுத்தப் போறான்து கம்முன்னு இருந்துட்டேன்.”

வேதரத்தினம் தா அவரு பேரு. நாய்க்கடி, எலிக்கடி, தேளுக்கடின்னு எல்லா வெசக்கடிக்கும் மருந்து அவரு தாத்தா காலத்துலேந்தே கொடுக்குறதால வெசக்கடி வீடுன்னு அவரு வீட்டுக்கே பேரா ஆயிட்டு. அவரு பேருக்குப் பின்னாடியும் அந்த அடைமொழி வந்துட்டு. வாய்யா வெசக்கடின்னு அவர செல்லம்மா கூப்புடுற கூட்டாளிகளும் உண்டு. வெசப்பயலாச்சே அவன்னு பின்னாடி விட்டு திட்டுறவுங்களும் உண்டு.

சீக்காளியான அவரு பொண்டாட்டிய வாசல்ல வச்சி குளிப்பாட்டி விடுறது, தலப்பின்னி வுடுறது எல்லாம் அவருதான். அவருக்கு ரெண்டு பய, ஒரு பொண்ணு, கல்யாணம் காச்சின்னு அதது அதது பாட்டுக்கு போய்ட்டு. தண்ணி போட்டுட்டானுவோனா ரெண்டு பயலுவளும் வந்து சொத்த பிரிச்சிக் கொடுய்யான்னு அவரப் போட்டு

அடிப்பானுவ. தெருசனமே அய்யோ பாவம்மேன்னு எரக்கப்படும். ஆனா காலையில் எதுவுமே நடக்காதது மாறி பட்ட அடிச்சிக்கிட்டு, வெள்ள வேட்டி கட்டி அவரு போறத ஆச்சரியமா பாக்கும் தெரு.

ஒரே பொண்ணு சாந்தா. கத வேறமாரி இருக்கும்.

"வூட்டுக்குப் பக்கத்துலேயே கொளத்துல கொறவ புடிச்சானுவ அப்பா. ஒனக்கு புடிக்குமேன்னு புள்ளையோள பள்ளியோடத்துக்கு அனுப்பிட்டு அரக்கபரக்க சமச்சிட்டு ஓடியாந்தேப்பா,"

வெளியே கெளம்பிக்கிட்டிருந்த வெசக்கடி பொண்ணையும் கொரவமீனு கொழம்பையும் பார்த்ததும் ரெண்டு கையையும் முதுகுக்குப் பின்னே ஊனி சாஞ்சாப்புல ஒக்காந்தாரு,

"ஒம்மா சீக்குல படுத்தப்புறம் நீ வந்தா தான்மா எனக்கு நல்ல கொழம்புன்னு துண்டால கண்ணத் தொடச்சிக்கிட்டே சொன்னாரு.

"அட நீ ஒரண்டப்பா. எல எடுந்தாந்திருக்கேன், ரெண்டு வறுத்த மீன தின்னு. அதுக்குள்ளாற நா சோறு வடிச்சிடுறேன்.."

"அப்ப இருந்துட்டுதா போவியாம்மா..?"

"ஆமாம்ப்பா ஒனக்கு வேட்டி துணிமணி எல்லாம் தொவச்சிப் போட்டுட்டு, அம்மாவுக்கு தல குளிப்பாட்டி நாளாச்சி. ரெண்டு நா இருந்து எல்லாத்தையும் செஞ் சிட்டுத்தான்ப்பா போவனும்."

'வூடு கட்டுற வேல நடக்குதுன்னு தானம்மா நீ ரெண்டு மாசமா வரல்ல..?

''அதெல்லாம் நிப்பாட்டியாச்சுப்பா...''

ஏம்மான்னு வறுத்தமீன வாயில வச்சபடியே கேட்டாரு வெசக்கடி.

"நீ கொடுத்த ரெண்டாயிரத்துல முழுசுமா கட்ட முடியும். நாந்தா சாணித் தரையில கெடந்தேன். போன எடம் சிமிண்டு தர. எம்புள்ளையோவாவது மொசைக்கு தரையில கெடக்கட்டுமேன்னு பாத்தேன். ஆனா வூட்டுவேல பாதியிலேயே நிக்குதுன்னு" கண்ணு கலங்குன சாந்தாவ பார்த்ததும் கொரவ மீன வறுத்துக்கிட்டு பொண்ணு வந்த காரியம் புரிஞ்சது வெசக்கடிக்கு.

ஒரு பத்து நா பொறும்மா. நெல்லு போட்ட காசு வருது, எதோ ஏங் கையில கெடச்சத தாரேன். ஆனா, அண்ணனுவோளுக்குத் தெரியக்கூடாது. பொண்ணுக்கே தாரே எங்களுக்கு இல்லையான்னு, எரியுற ஒட்டுல புடுங்க வரலாமுன்னு வந்துருவானுவோ...''

ஆனா எப்படியோ விசயம் தெரிஞ்சி மூக்குமுட்ட குடிச்சிட்டு ராத்திரி வந்துட்டானுவோ ரெண்டு பேடும்.

''ஏ வெசக்கடி வெளில வாடா. பொண்ணுக்கு மட்டுந்தா நெல்லு போட்ட காசா ? ஏ நாங்க ஒனக்கு பொறக்கலையா"

'ஏம்மா சாந்தா.. இவனுவோள சமாளிக்க குண்டு ராஜேந்திரனும் பாவாட பெரியப்பாவுந்தா சரியா வரும். ஓடிப்போயி கூட்டியாமா ரெண்டு பேரையும். கூப்புட சாந்தா ஓடிச்சி."

'ஏலே..ஏலே.. படுபாவி பயலுவோள நல்லா இருப்பீங்களா நீங்க. இந்தப் பொண்ணு வந்து கூப்புட்டுச்சி. வாரதுக்குள்ள அப்பான்னு கூட பார்க்காம வேட்டிய அவுத்துக் கீழே தள்ளிப் போட்டு அடிக்கிறியேளாடான்னு பதறியபடி ஓடி வந்தாங்க குண்டு ராஜேந்திரனும் பாவாடைசாமியும்.

'வாங்கைய்யா நீங்க ரெண்டுபேரு தான் இந்த ஆளுக்கு மேம்பட கேட்க வருவீங்கன்னு தெரியும். இன்னக்கி ஒரு முடிவு தெரிஞ்சாகனும்.

கீழே வுழுந்து கெடந்த வெசக்கடிய நிமித்தி ஒக்கார வச்சி நெஞ்சத் தடவிவிட்டு தண்ணிக் கொடும்மா அப்பாவுக்குன்னாரு பாவாடைசாமி.

"ஒங்க ரெண்டு பேரு எச்சிபாலு குடிச்சப்புள்ள அது. அதுக்கு இருக்குற பாசம்கூட ஒங்களுக்கு இல்லையா ?"

"அததான் நாங்களும் கேட்குறோம். எங்க எச்சிபாலு குடிச்ச அதுக்கு எல்லாஞ் செய்யுற இந்த ஆளு எங்களுக்கும் செஞ்சா என்ன ?"

“நானும் பாவாடையும் ஒங்க அப்பாவுக்கு சின்ன வயசு கூட்டாளியோ. நீங்க ரெண்டு பேருமே எங்களுக்குப் புள்ளையோதாண்டா. ஒப்பா காலத்துக்குப் பிறகு ஒங்களுக்குத் தாண்டா எல்லாம். இப்பயும் நெல்லு போட்ட பணம் வரட்டும். ஏதோ தர சொல்றேன்னு” குண்டு ராஜேந்திரனின் சமாதான வார்த்தையைக் கேட்டு அசமடங்கிப் போனானுவோ.

‘‘ஏம்மா சாந்தா காலையில நீ கொண்டாந்த வறுத்த மீன லேசா தோசக்கல்லுல சூடுபண்ணி கொண்டாம் மான்னு வெசக்கடி சாப்பிட ரெடியானாரு.

‘நம்மலா இருந்தா இப்ப நடந்தத நெனச்சி நெனச்சி ரெண்டு நாளைக்கி சோறு தண்ணி எறங்காது, இவனப் பாத்தியா மீன சூடுபண்ணி கொண்டாங்கிறான்னு’ குண்டு ராஜேந்திரனும் பாவாடையும் சொல்லி சிரிச்சுக்கிட்டே வாரேம்மா சாந்தானு கௌம்புனாங்க.

குண்டு ராஜேந்திரன், வெசக்கடி, பாவாடைசாமி மூணுபேருமே வாடா போடா கூட்டாளிங்கதான். பொண்டாட்டி புள்ளகுட்டியோ யாரும் இல்லாத தனிக் கட்டங்குறதால மத்த ரெண்டு பேரும் குண்டு ராஜேந்திரன் மேல தனிப்பாசமா இருப்பாங்க.

வீட்டு வாசலிலேயே ஒரு பொட்டிக்கட. அதுதா அவரு பொழப்பு; அவரு வூட்டு வாசலுல குடிதண்னி பைப்பு இருக்குறதால தண்ணிபுடிக்க, கடையில சாமஞ்சட்டு வாங்கன்னு பொண்டுவ கூட்டம் இருந்துகிட்டே இருக்கும், பச்சபுடிச்சவன்னு சில ஆம்பளைக திட்டுவதுண்டு. எந்த பொம்பளையும் அவர அப்படி திட்டுனது இல்ல. கால அகட்டி அகட்டி அவரு நடக்குறதே வேடிக்கையா இருக்கும். அதுக்கு காரணம் அவருக்கு வெதர்வீக்கம்னு சொல்ற ஒதப்புடுக்கு.

ஒரு கல்யாணத்துல யாரோ சொம்ப எங்கையோ வச்சிட்டேனு தேட, இத குண்டு ராஜேந்திரன் வேட்டிக்குள்ள வச்சிருக்கான் பாருன்னு அவரு கூட்டாளியோ வேடிக்கையாச் சொல்ல, வெளையாடாம சொம்ப கொடுங்கத்தான்னு பொண்டுவளும் கேட்க, கடுப்பானவர் ஒரு மசிரும் இல்லங்கடி.. அந்தக் கிராதக பயலுவதா வெவஸ்த கெட்டாப்புல சொல்றானுவன்னு நீங்களும் கேட்குறீங்க.. பாருங்கடின்னு வேட்டிய அவுத்துக் காட்ட ஒரே வேடிக்கையாப்போச்சி. அதுலேந்து அவர சொம்பு ராஜேந்திரன்னு கிண்டலா கூப்புடுறதுண்டு . சிலர் சுருக்கி சொம்புன்னும் சொல்றதுண்டு.

அவரு வெளுக்கி இருக்கப்போறதே ஒரு வேடிக்கைதான்.

“ஏய் சொம்பு ஏன்ய்யா ஆயி இருக்கப் போற நீ கையில அட்டைய எடுத்துட்டுப் போறே?’’

‘‘ம்... அத அங்க வந்து பாரு...’’

“நீ போறத நா பாத்து என்ன பண்ணப் போறேன். போ..’’

‘‘நீங்கதாண்டா கேட்டிங்கன்னு இப்படி பல வம்புவழக்க தாண்டிப் போய் பீ காட்டுல நல்ல இடமா தேடுவாரு. எல்லோரும் பொண்டுவ வந்தா எந்திரிக்கனும்னு கருவமுள்ளு புதரு, எருக்கஞ்செடின்னு மறவாதான் போய் குந்துவாங்க. ஆனா ராஜேந்திரன் எடம் சுத்தமா இருந்தா நட்டநடு பாதையில கூட வேட்டிய வலிச்சிக்கிட்டு குந்திடுவாரு. குந்தும் முன்னாடி கையிலக் கொண்டுபோற அட்டையைக் கீழவச்சி அதுமேல படிமனான ஒரு கல்லை எடுத்து வைப்பார். அதுமேல அவரு ஒத புடுக்க தூக்கி வைப்பார். நல்ல எடமா தேடி, கல்லு தேடி மெல்லக் குந்தையில பின்னாடி ஒளிஞ்சிக்கிட்டு சில பயலுவ பாம்பு பாம்புன்னு கத்துவானுவ. வெரண்டு எந்திரிச்சுப் பாத்துட்டு ஒன்னுமில்லன்னதும் அந்தப் பயலுவ இந்தப் பயலுவளான்னு வாயில வந்தபடி திட்டுவார். ஓரமா மறவாப் போயி பேண்டாத்தான் என்ன.. நட்டுநடு பாதையில பொம்பளைக வாரப்பக்கூட எந்திரிக்காம, கூச்சநாச்சம் இல்லாம குந்தி இருக்கிறத பாருன்னு போற வாரப் பொண்டுவத் திட்டுனாக்கூட,

‘‘ஒங்கிட்ட நா பாக்காததா..? எங்கிட்ட நீ பாக்காததா..? குந்துனா எந்திரிக்க முடியல. எந்திரிச்சா குந்த முடியல.

எம்பாடு எனக்குத் தெரியும் போவியான்னு ஒரே போடா போடுவார்.

நல்ல வெயில் நேரம் தலையில தேச்ச எண்ணெ கண்ணுல வழிஞ்சி எரியுது. ஒரு சீயக்காய் பொட்டலம் வாங்கிக்கிட்டு ஆத்துக்கு குளிக்கப் போவோம்னு வந்த பாவாடைசாமி, குண்டு ராஜேந்திரன் கடைவாசலுல சாக்கு தொங்குனதைப் பாத்துட்டு,

''ஏய் ராஜேந்திரா.. ஏய் குண்டா.. ஏய் சொம்பு யார்றான்னு கடையில சவுண்டு கொடுத்தாரு பாவாட. குண்டு ராசேந்திரன் கடைக்கு கதவெல்லாம் கிடையாது. ஒரு சாக்குபடுதாதான் தொங்கும். அவரு இருந்தா அது சுருட்டி மேல கட்டி இருக்கும். இல்லாதப்ப எறக்கி வுட்டிருக்கும். சாக்கு காத்துல ஆடாம இருக்க ஒரு நீட்ட மூங்கிக்குச்ச சாக்கோட அடிப்பாகத்துல சணலு கோத்துக் கட்டி இருப்பாரு. எங்க போயிருப்பான்னு சாக்க வெலக்கிக்கிட்டு கட உள்ளாறப் பாத்தாரு பாவாட. சொம்பு ராஜேந்திரன் லேசா தொண்டைய செருமுற சத்தம் கேட்டிச்சி.

ஏதோ பொம்பள குசுகுசுன்னு பேசுற சத்தமும் கேட்டிச்சி. ஆளு உள்ளே இருக்கிறத தெரிஞ்சுக்கிட்ட பாவாட, "தலையில எண்ணெய வச்சிக்கிட்டு எவ்வளவு நேரமா நிக்கிறது. ஒரு அரப்புத்தூளு பொட்டலம் வேணுன்பா. காலம்பறையிலே இருந்து என்னம்மோ தலைய ஒருபக்கமா விண்ணுவிண்ணுன்னு வலிக்குது . நமக்கு ஒரு சுடுதண்ணி வச்சிக் கொடுக்க யாரு இருக்கா?"

''ஏதோ பாடி பரதேசிக நமக்கு ஒதவுதுவோ. இந்தப் பொண்ணு படுங்கப்பா தைலம் தேச்சி வுடுறேனுச்சு" அவுந்த வேட்டிய அரகொறையா வவுத்துலத் தூக்கிக் கட்டிக்கிட்டு வந்தாரு குண்டு ராஜேந்திரன்.

பாவாடைக்கு விசயம் புரிஞ்சுட்டு. "ம். சரி., சரி,,, நா அப்புறம் வாரேன்.."

"வந்துட்ட, வாங்கிட்டு போ சீயக்காய. எனக்கு முடியல படுக்கப்போறேன்.."

''சாயங்காலம் சாமிக்குத்துக்கு வா... ஒரு முடிகயிறப் போட்டு உடுறேன்னு'' கெளம்புனாரு பாவாட.

அது என்ன.. சாமிக்குத்துக்கு வரச்சொல்றாருன்னு பார்க்குறிங்களா? அங்கதான்.. பாவாடைசாமின்னு ஒரு சாமிய வச்சிக் கும்புடுகிறார். அதனாலதான் கண்ணையா என்கிற அவரோட பேரைக்கூட மறந்துட்டு பாவாடைசாமின்னு சனங்க கூப்புடுதுவோ. எங்கையாவது பொறம்போக்கு நெலம் கெடந்தா அதுல ரெண்டு ஒதியம் போத்த ஊணுவார், பாவாடைசாமி. பத்துநாள் பார்ப்பார். யாரும் எதுவும் கேட்காட்டி ரெண்டு கத்தரி கன்ன ஊனுவார். அப்பவும் ஏதும் பிரச்சனை இல்லன்னா.. இனி அது பாவாடைசாமி கொல்லையாயிரும்.

அப்படி ஒரு இடத்த ஆக்கிரமிக்கையில கொஞ்சம் ஊருக்குள்ள சலசலப்பு வர அந்த எடத்துல சாமிவச்சிக் கும்புட ஆரம்பிச்சார், மூங்கிக்குத்து போட்டார். அதுக்கு சாமிக்குத்துன்னு பேரு வச்சார். சாமி காரியமா இருக்குன்னு சிலர் பயந்து பின்வாங்குனாவோ. பயந்த கோளாறுன்னு வர்ற சனங்களுக்கு துன்னுரு போட்டார். முடிகயிறு கட்டினார். அதுல என்ன வேடிக்கையின்னா ஆம்பளையோளுக்கு துன்னுற நெத்தியில பூசுவார். பொண்டு வளுக்கு மட்டும் துன்னுற வயித்துலதா பூசுவார். இத யாரும் கேட்டா..

"அதுக்கு புள்ளகுட்டியில்ல.. வயித்துல ஒரு புழுபூச்சி வக்கட்டும்முன்னுதான்...''

"சரி.. புள்ள இருக்கும் பொண்டுவளுக்கும் வயத்துலதானே பூசுறே...''

''அவளுக்கு வயத்து வலி"டான்னு கடுப்படிப்பார். பெரிசா காசுபணமுன்னு கேட்க மாட்டார். நாலு நல்ல வார்த்தை சொல்றாருன்னும், சிலருக்கு நல்லதும் நடப்பதாலும் சனங்க பாவாடை சாமியத் தேடி மூங்கிக்குத்துக்கு வர்றாங்க.

அந்தப் பாவாடை சாமியத் தேடித்தான் குண்டு ராஜேந்திரனும் வந்திருக்கார்.

"நேத்து சாயந்தரமே ஒன்ன வரச்சொன்னேனே.. ஏன் வல்ல..?"

"அடிச்சுப் போட்டாப்புல ஒடம்பு வலி. கடையும் தொறக்கல. பேசாம படுத்துட்டேன்''

"இருபத்தோரு முடிச்சி கயிறுலப் போட்டு, சாமிக்கிட்ட வேண்டிதா ஒனக்கு முடிகயிறு போடணும். செத்த குந்து,"

அங்க சாமிபடங்களோ, சிலைகளோ இருக்காது. அந்த மூங்கிக்குத்தில் ஒரு வேப்பமரம் இருக்கும், அதன் வேரடியில மஞ்சள் குங்குமம் வச்ச பெரிய அருவா இருக்கும், அதுல ஒரு எலும்மிச்சப்பழத்தக் குத்தி வச்சிட்டு சாமி கும்புடுவார், அன்னைக்கி அப்படி ஒக்காந்து கண்ணமூடி முடிகயிறு முடிச்சி போட ஆரம்பிச்சார்.

அய்யா பாவாடைசாமி.. ஒங்க கூட்டாளி வெசக்கடி போயிட்டாரய்யா. ரெண்டு மூணுபேரு கத்திக்கிட்டு மூங்கிக் கொல்லக்குள்ள ஓடியாந்தாங்க. கயிறு முடியுறத அப்படியே போட்டுட்டு முழிச்சமுழி முழிச்சபடி பேயறஞ்சதப் போல பார்த்தாரு, பாவாடைசாமி, என்னடா சொல்றீங்கனு பதறிக்கிட்டு கேட்டாரு குண்டு ராஜேந்திரன்.

ஆமாங்குறேன். ராத்திரி கொல்லப் பக்கம் போயி ஒன்னுக்குப் போயிருக்காரு. தோளுமேல ஏதோ வுழுந்தபடி இருந்திருக்கு. தென்னங் குரும்பையோ, கூறாஞ்சியோன்னு தட்டிவுட்டுட்டு வந்து படுத்துருக்காரு. பொண்ணுகிட்ட சொல்லி இருக்காரு. அது வெளக்க கொளுத்தவா? தலையில ஏதும் தேச்சிவிடவான்னுருக்கு. இவரு காலையில பாத்துக்கலாம்னு படுத்துட்டாரு, காலையில பாத்தா வெறச்சிப் போயி கெடந்துருக்காரு. நல்லபாம்பு தீண்டியிருக்கு. ஒடம்பெல்லாம் நீலம் பூத்துப்போச்சி.

அடப்பாவத்தேன்னு அடிச்சிப் புடிச்சிக்கிட்டு எல்லாரும் வெசக்கடி வூட்டுக்கு ஒடுறாவோ.

எல்லா காரியமும் முடிஞ்சி சுடுகாட்டாங்கரையில இருந்து வரயில குண்டு ராஜேந்திரனும் பாவாடைசாமியும் கொஞ்சதூரம் பேசாமலேயே வந்தவங்க,

''சின்னபுள்ளையிலே இருந்து தாயாபுள்ளையாக் கெடந்தோம். நம்மள வுட்டுட்டு போய்ட்டானய்யா வெசக்கடின்னு கொரலு ஒடஞ்சிபோய் சொன்னாரு'' குண்டு ராஜேந்திரன். பொறந்த பொறப்பாட்டாம் இருந்தான் வெசக்கடி. ஒரு பதினைஞ்சி நாளைக்கி கவுச்சி கிவுச்சி தின்னுறாதன்னார் பாவாடை. எப்படிய்யா மனசு வரும். எனக்கு பதினஞ்சி நாளென்ன. இனி ஆயுசு முழுக்கும் அவருக்குப் புடிச்ச கொரவ மீனத் திங்கமாட்டேன்ய்யா நா. அப்ப கெண்ட மீனத் திம்பேங்கிறே? இந்த கிருத்துருவந்தான் வேணாங்குறதுன்னு அந்தத் துக்கத்துலேயும் சிரிச்சாங்க ரெண்டுபேரும். ●

---

கவிதை

# காத்திருப்பு

அவனோ
வளமனை துூர்ந்த
மருதநில நாடன்.

எண்ணெய்க் குழாய்
வெடித்து
வயல்கருகும் ஊரினன்.

மணல் அள்ளிய தடத்தில்
கிளிஞ்சல் கீற
இலைகள் உதிர்ந்த
மரத்தின் கீழ் நிற்கிறான்.

யானோ
காடழித்து
கடவுள் செய்யும் கானகத்தி.

வெட்டி எடுத்த
பெருங்குன்றில்
வற்றியுள்ளது
நீர்ச்சுனை மார்பு.

சோறுக்கும்
நீருக்கும்
நிலம் பெயரா
காலமொன்றுக்காய்
காத்திருக்கிறது
அவன் பூச்சூடும்
நறுநெய் பூசிய கருங்கூந்தல்.

- கருப்பி

# திணை தாண்டிய விழுமியத் தீற்றல்கள்

## (சொற்கள் கூடு திரும்பும் அந்தி - கோ. கலியமூர்த்தி)

மீனாசுந்தர்

ஒரு காலத்தில் தொடத் தயங்கிய பொருண்மைகளைக் கூட இன்று ஊடறுத்தும் உடைத்தும் கவிதைகள் வெளிப்படைத் தன்மையுடன் பேசி வருவது கண்கூடு, கவிதை இன்று சனநாயகப் படுத்தப்பட்டுள்ளது. எதைப் பற்றியும் எவரும் எழுதலாமென்ற அளவிற்குக் கவிதையின் இயங்குதளம் மிகப் பரந்ததாக இன்று புனரமைக்கப்பட்டுள்ளது. அதன் அகமும் முகமும் மாற்றம் கண்டு மிளிர்கின்றன. புதியவர்கள் பலரும் வீச்சோடு புதிய மொழியில் எழுதத் தலைப்பட்டுள்ளார்கள். பரிசோதனை முயற்சியாக அவர்கள் பற்பல வடிவங்களில் எழுதிப் பார்க்கிறார்கள். ஒற்றை நூலிலேயே சிலர் உச்சம் தொடுவதையும் பார்க்கிறோம்.

நூல் விற்பனை என்ற சந்தைவெளி அரங்கில் மிகவும் பின்தங்கியிருந்த போதிலும் வெளிவருகின்ற இலக்கிய வகைமைகளில் கவிதைகளே இன்றும் முன்னிலை வகிக்கின்றதெனில் மிகையன்று. இக்கட்டுரை எழுதப்பெறும் இந்நொடியில் கூட ஏதோவொரு கவிதைச் செயற்பாடு தமிழ்நிலத்தில் நடந்து கொண்டிருப்பதற்கான சாத்தியப்பாடு மிக அதிகம். ஏனெனில் தமிழ்மரபு கவிதையோடு பின்னிப் பிணைந்தது. தமிழனின் ஆதி இலக்கிய வடிவம் கவிதையே. தொல்காப்பியம் தொடங்கி சங்கப் பனுவல்கள் அனைத்தும் இதற்குச் சான்று பகர்கின்றன. சண்டையெனினும் சமாதானமெனினும் நம்மவர்கள் கவிதை கொண்டே அடித்தனர்; அணைத்தனர். கால ஓட்டத்தில் பாடுபொருளிலும் வடிவத்திலும் சில மாற்றங்களைச் செரித்துக் கொண்டதேயொழிய படைத்தலென்னும் செயற்பாடு மாறவுமில்லை; நிற்கவுமில்லை. அதன் நிற்கா ஓட்டத்திற்கு அண்மைச் சாட்சியாக வெளிவந்துள்ள நூலே கவிஞர். கோ. கலியமூர்த்தியின் சொற்கள் கூடு திரும்பும் அந்தி* இந்நூல் வேரல் வெளியீடாக அழகிய வடிவமைப்புடன் வெளி வந்திருக்கிறது.

இழந்தவர்கள் பக்கம் நிற்பதே மானுட அறமாக இருக்க முடியும். இலக்கியத்திற்கும், இலக்கியவாதிகளுக்கும் இது விதிவலக்காக இருக்க முடியாது. கோ. கலியமூர்த்தி அடிப்படையில் ஒரு மனிதநேயச் செயற்பாட்டாளர். விளிம்புநிலை மானுடம் விடுதலை பெற வேண்டி எழுதுபவர். ஊரெங்கும் அலைந்து திரிந்து உரையாற்றுபவர். அவரை அறிந்தவர்களுக்குத் தெரியும். இந்நூலிலும் அவர் இழந்தவர்களின் கரங்களையே இறுகப் பற்றி நிற்கிறார். தொகுப்பெங்கிலும் காட்டை இழந்தவர்கள், நிலத்தை இழந்தவர்கள், நீரை இழந்தவர்கள், சமூக மதிப்பை இழந்தவர்கள் எனப் பலரும் அணி வகுக்கின்றனர்.

காட்டையே வாழ்விடமாகக் கொண்டவர்கள் அக்காட்டை ஒருநாள் இழந்து துரத்தப்படுவது போன்ற வலிக்கு ஈடாக எதை முன்னிறுத்த முடியும்? அவர்களுக்கு என்ன ஆறுதல் சொல்ல முடியும்? காட்டின் பூர்வீகர்கள் என்ற வரையறைக்குள் பழங்குடிகள் மட்டுமின்றி யானை உள்ளிட்ட விலங்குகளின் வலிகளையும் இணைத்து நோக்கினால் வலியின் முழு பரிமாணம் நம்மைக் காலத்திற்கும் வதைத்துக் கொல்லும். நீரும் நிலமும் இன்று பெருமுதலாளிகளால் கபளீகரம் செய்யப்படுகின்றன. எங்கும் கார்ப்பரேட்டுகள் ஈரமின்றி தங்களின்

வேர்களை ஆழமாகப் பரப்பி நிற்கின்றனர். நிலத்தைத் தங்களின் வேட்டைக்காடாக மாற்றி விட்ட கொடூர மனங்களின் அவலத்தை வேதனையுடன் சுட்டுகிறார் கோ.கலியமூர்த்தி. களிறுகள் வெளியேறிய காடுகளில் கஞ்சாமனம் வீசுகிறது* என்ற தலைப்பிலமைந்த கவிதையில் சில வரிகள் இவ்வாறு இடம் பெறுகின்றன.

**நம் காடு**
**கார்ப்பரேட் தரகர்களின் வேட்டைநிலம்**
**இப்போது.**
**நீயென்னை**
**நானுன்னை**
**நாம் நமது கானகத்தைத்**
**தொலைத்த கதை பெருங்கதை.**

காட்டை மையப்படுத்திய மலைகளும், ஆறுகளும், மரங்களும், இன்னபிற வளங்களும் எந்தத் தடையுமின்றி கார்ப்பரேட் பெருமுதலாளிகளால் உறிஞ்சப்படும் அவலம் ஒருபுறமிருக்க. அதற்காக அங்கிருக்கும் பூர்வீகக் குடிகளை விரட்டியடிக்கும் அவலத்தை இதன் பின்காட்சிகளாக நாம் விரித்துக் கொள்ள முடியும். காட்டை விட்டு வெளியேறும் யானைகள் என்ற செய்தியோடு, யானையைச் சபித்துவிட்டு கடந்து விடும் நாம், அதன் வாழ்விடங்களுக்குள் அறமின்றி ஊடுருவியுள்ள நமது கல்மனத்தை என்று கேள்விக்கு உட்படுத்தப் போகின்றோம்? நம்மிடமுள்ள குற்றத்தை அவற்றின் குற்றமாக மடை மாற்றுவது போன்ற அயோக்கியத்தனம் வேறுண்டா இவ்வுலகில்?

கவிஞரின் தன்னிலை விளக்கம் போன்று, ‘‘மிகையான சொற்கள்..” என்றொரு கவிதை. இக்கவிதை கவிதை குறித்தே பரந்து பேசுகிறது. எது கவிதை என்ற வினா கவிஞரின் ஆழ்மனத்தை துளைத்துப் பார்க்கின்றது. கவிதையின் உள்ளடக்கம், கவிதை எப்படி, யாருக்காக, எங்ஙனம் அமைய வேண்டுமென்பதை ஓர் இலக்கண வரம்பைப் போலப் போதித்துச் செல்கிறது. அந்தப் போதனைக்குச் சான்றாக அவர் எடுத்து வைக்கும் வெண்மணிச் சம்பவம் நமக்குள் அணையாத கங்குகளை ஊதிப் பெருக்குகின்றது. கோபாலகிருஷ்ணநாயுடு என்னும் ஒற்றை மனிதனே இதற்குக் காரணமென்று சுருக்கிப் பார்க்கவியலாது. அவனைப் போன்ற எத்தனையோ கோபாலகிருஷ்ணன்கள் இன்றும் நமக்கிடையே மாயவேடம் பூண்டு நிற்பதை என்று அம்பலப்படுத்தப் போகிறோம்? எதிரில் நிற்கும் கோபாலகிருஷ்ண நாயுடுகளை விட நம்மருகில், நம்முடனே பயணிக்கும் கோபாலகிருஷ்ண நாயுடுகளுக்கு எப்படிப் பாடம் புகட்டுவது? உறவாடிக் கொல்லும் அவர்கள் எதிரில் நிற்பவர்களை விட மிகவும் ஆபத்தானவர்கள். வெண்மணியின் வெந்து மடிந்த தியாகிகளை அவர் காட்சிப்படுத்தும் கவிதை வரிகள் நமக்குள் கண்ணீரைக் கொப்பளிக்கச் செய்கிறது. வெந்த உடல்களின் சதைகளை அவித்த கிழங்கைப் போல என்ற பதத்தின் மூலம் நம்மைப் பதற்றத்திற்கு உட்படுத்துகிறார்.

**அவித்த கிழங்கைப் போல்**
**வெந்த உடல்களின் கதையின்னும்**
**தொடரத்தானே**
**செய்கிறது.**
**ராமையாவின் குடிசைக்குள்**
**எரியும் போது எழுந்த**
**கதறல்கள் ஒலித்தால்**
**தீட்டாகி விடுமா அது?**

எளியவர்களின் குரல்களைப் பேசவல்லவா இலக்கியம்.?! கோ. கலியமூர்த்தி அதில் உறுதியாக உள்ளாரென்பதை அவரின் கவிதைகள் கட்டியம் கூறி நிற்கின்றன. அவற்றைப் பேசினால் கவிதை தீட்டாகி விடுமா? என்ற சாட்டையடிக் கேள்வி குளிரூட்டிய அறைகளின் கொண்டாட்ட கவிஞர்களைக் கொடுவாள் கொண்டு தாக்குகிறது.

‘‘சீழ் பிடித்த கிராமங்கள்” என்ற தலைப்பில் ஒரு கவிதை. தலைப்பே கவிதையின் ஆன்மா என்னவென்பதை வெளிப்படையாக உணர்த்தி நிற்கிறது. கிராமங்களின் அசல் முகத்தை இக்கவிதைத் தோலுரித்துக் காட்டுகிறது. சுத்தமான காற்றும், நீரும், நிலமும் கொண்ட கிராமங்கள் வாழ்வதற்குச் சொர்க்கம் என்று சிலர் பேசி வருவதற்கு மாறாக அதன் மற்றொரு கோர முகத்தை இக்கவிதை

பொதுவெளிக்கு எடுத்து வைக்கிறது. அங்குள்ள ஏற்றத் தாழ்வுகள், சாதியவெறி, பற்பல கீழ்மை செயல்களின் இறுக்கமான கட்டுமானங்கள் என நினைத்து நினைத்து மருகும் கவிஞரின் துயரமொழி வாசகனைப் படுத்தச் செய்கிறது.

முடை நாற்றமடிக்கும் பால்யத்தின் நினைவுகள் அக்கிப் புண்ணுக்குக் காவிமண் பூசியவை வடுவுக்குள் உயிர்த்திருக்கும் ஆறாத காயங்கள் சாதி வெறி பிடித்த நம் கிராமங்களின் போலிக் கருணை அருவருப்பானது என்று ஆக்ரோசமாய் வெளிப்படும் கவிதை முடிவுறும் போது தர்க்க நியாயத்தின் அடிப்படையில் நகரத்தின் இயல்பை ஒப்பீட்டளவில் போற்றி நிற்கிறது. அதில் நியாயம் இருப்பதாகவே நமக்கும் படுவது கவிதையின் வெற்றியாகக் கொள்ளத் தோன்றுகிறது.

**ஆயிரம் துயரங்கள் உண்டெனினும் நண்பா**
**அரவணைத்த நகரம் பெருங்கருணை மிக்கது.**
**நமதிந்த சிறகுகளும் வானமும் அது தந்தது.**

கிராமத்தின் போலிக் கருணை அருவருப்பானது என்பதும், அரவணைத்த நகரம் பெருங்கருணை மிக்கது என்பதும் இரண்டின் வரைபடக் காட்சிகளாக வாசக மனத்துள் விதைக்கப்படுகின்றன. இக்கவிதை இன்றைக்கும் தமிழகக் கிராமங்கள் ஒன்றும் புனித பூமியாக மாறிவிடவில்லை என்பதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது. உத்தபுரம் தொடங்கி கீழவளவு, திண்ணியம், வேங்கைவயல் சம்பவங்கள் கடந்து எத்தனையோ கீழ்மைகள் இதன் ஆழ அகலங்களை உரத்துச் சொல்லும் வல்லமை வாய்ந்தவை.

இன்றைய போலிச் சாமியார் தொடங்கி வடநாட்டினர் ஆதிக்கம் வரையும் நம் மனத்துள் கொண்டு வந்து நிறுத்துகிறது "பசி மயக்கம்'' என்றொரு கவிதை.. அசலான வழிபாட்டு முறைமைகள் மறக்கடிக்கப்பட்டு புதிய புதிய வடிவில் தோன்றும் வியாபாரச் சாமியார்களின் குடில்களை அம்பலப்படுத்துகிறது இக்கவிதை. அவர்களின் மருத்துவக் குறிப்புகளும், மன அமைதிக்கான வழிகளும் நம்மை நிம்மதியறத் துரத்திக் கொண்டேயுள்ளன. எந்தச் செய்தி ஊடகத்தை எடுத்துக் கொண்டாலும் அவர்களின் வியாபார விளம்பரங்கள் பல்லைக் காட்டுகின்றன. கோ. கலியமூர்த்தியின் கவிதை அவர்களைப் பாடும் முறையே வேறுபட்டு நிற்கிறது.

**வடநாட்டிலிருந்து வந்திறங்கிய**
**கார்ப்பரேட் சாமிகளும்**
**நவீன மடங்களும்**
**குலதெய்வ வழிபாடும் மெல்ல அருகி**
**பெருந்தெய்வ வழிபாடு பெருகிய நிலத்தில்**
**குப்பையைச் சீய்க்காத**
**பெட்டையைப் புணராத**
**பிராய்லர் கோழிகள் பெருகிவிட்டன.**

எனத் தாக்குகிறார். குப்பையைச் சீய்க்காத கோழியென்ன கோழி? பெட்டையைப் புணராத பிராய்லர் கோழிகள் பெருகிவிட்டன என்பதில் விரியும் இன்றைய நவீன வாழ்வு முறையின் கேடுகள் நம்மைப் பெருங்கவலைக்கு இட்டுச் செல்கின்றன. குலதெய்வத்தை மறக்கச் செய்யும் புதிய வழிபாட்டு உத்தி பெருந்தெய்வ வழிபாட்டு மரபில் நம்மைக் கரைத்து நமது அசல் மரபைக் காணாமல் செய்யக் கூடியதாகும். உணவும், கனவும் கூட நஞ்சாகிக் கிடக்கும் இளந்தலைமுறைப் பிள்ளைகளுடைய வாழ்வின் கோரங்களை இதை விட வலிமையாக எப்படி மொழிய முடியும்?

சொற்கள் கூடு திரும்பும் அந்தி* நூலின் தலைப்பைத் தாங்கி நிற்கும் கவிதை. அக்கவிதையில் இழையோடும் மென்சோகம் கிராமங்களில் அல்லிக்குளங்களில் குளித்து வளர்ந்தவர்களை நிச்சயம் அதன் அடியாழக் குளிர்ச்சிக்கு இட்டுச் செல்வது உறுதி.

**அல்லிக்குளங்கள் தொலைந்த காலத்தின்**
**மஞ்சள் உரசிய உருக்காங்கல்**
**பால்யம்.**

தொலைந்த அல்லிக்குளங்களைப் போலவா அத்தனை நினைவுகளும் தொலைந்து போகும்? ஊரே கூடி நிற்கும்




அல்லிக்குளத்தில் கிடந்த உருக்காங்கல்லும், மஞ்சள் கிழங்கும், அம்மாக்களும், அக்காக்களும், அத்தைகளும், அத்தாய்ச்சிகளுமல்லாவா நமது நினைவில் நடக்கிறார்கள். அந்த ஏக்கத்திற்கு நமது பெட்டிக் குளியலறையும், இப்போது புழக்கத்திலுள்ள மஞ்சள்பொடிகளும் என்ன செய்து விட முடியும்?

கடந்த காலத்தின் பாதையைத் தேடுகையில் பொக்லின்கள் ஊளையிடும் சப்தமே கேட்கிறது என்ற கவிஞரின் வார்த்தைகளையே வழி மொழிய வேண்டிய இக்கட்டு நிலையை நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இரவைக் கொண்டு வந்தவள் என்றொரு கவிதை இப்படி முடிகிறது.

**நெடிய சொற்கள் முடிவுக்கு வருகையில்**
**சொல்ல வந்ததைச் சொல்ல**
**ஒரு கண்ணீர்த் துளிதான் பயன்படுகிறது.**

இந்த வார்த்தைகள் எவ்வளவு சத்தியமானவை.? கோ. கலியமூர்த்தியின் கவிதைகளைப் படித்துக் கடக்கையில் அவ்வப்போது படரும் கண்ணீர்த்திரை சொல்ல வந்ததைத் சொல்லவியலாமல் நம்மையும் அலைக்கழிக்கிறது; தடுக்கிறது. அவரின் வார்த்தைகள் சத்திய பிரமானத்தைப் போல நூல் நெடுகிலும் நம்மைப் பின் தொடர்கின்றன. இப்படிப் பல்வேறு பொருண்மைகளில் கவிதைகள் தொழிற்பட்டுள்ளன.

கோ. கலியமூர்த்தியின் கவிதைகள் பூடகமின்றி நேர்ப்பேச்சு பாவனையில் இயங்கக் கூடியவை. ஆனால் இத்தொகுப்பில் அவர் சொல் முறையிலும், வெளிப்பாட்டுத் தன்மையிலும் பல்வேறு பரிசோதனை முயற்சிகளைக் கையாண்டு பார்த்திருக்கிறார். அவற்றில் அவர் வெற்றியும் பெற்றிருக்கிறார். அவரது மனத்தின் அடியாழத்தில் மணந்து ஒட்டிக் கிடக்கிறது. வண்டல் மொழி. அவரது விரல்களின் வழியே வெகு இயல்பாக அவை உணர்ச்சியுடன் இறங்கி வந்துள்ளன. அவர் சார்ந்த மருதத்திணை தாண்டியும் அவரின் கவிதைகள் மானுட விழுமியங்களைக் காக்க குறிஞ்சி, முல்லை, நெய்தல் எனப் பரந்து பயணப்பட்டுள்ளன. அவர் எதிர்கொண்ட இளம்பருவத்து வாழ்க்கையைப் பல கவிதைகளில் புலன் விசாரணையைப் போல மீட்டிப் பார்த்திருப்பதை உணர முடிகிறது.

வார்த்தைகளைச் சிக்கனமின்றி அள்ளியள்ளிக் கொட்டியிருப்பதை தவிர்த்திருக்கலாம். அவை, கவிதையின் நேர்த்தியான கட்டுமானத்தைக் குலைத்து நீர்த்துப் போனதைப் போன்ற தோற்றத்தைத் தருகின்றன. இது வாசிப்பதற்கு சற்றே அலுப்பைத் தருகின்றது. ஒரு கவிதை கவனமின்மையின் காரணமாக திரும்பவும் வேறு தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது. செம்மையாக்கத்தில் கவனம் செலுத்தியிருந்தால் நூல் மேலும் பொலிவு பெற்றிருக்கும். அட்டையும் வடிவமைப்பும் நவீனத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை நேர்த்தியுடன் ஒப்புகின்றன. கோ. கலியமூர்த்தியின் உரைகள் மீது அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள எதிர்பார்ப்பைக் கவிதையிலும் அவர் தரக்கூடுமென்ற நம்பிக்கையை இக்கவிதைகள் ஏற்படுத்துகின்றன. காவிரிப் படுகையின் கால் நூற்றாண்டுக்கும் மேலான வாழ்வின் பதிவுகளாக, நிகழ் வாழ்வின் ஆவணமாக இக்கவிதைகள் நம்மை ஈர்த்துக் கொள்கின்றன.

வேரல் வெளியீடு

விலை ரூ.220

தொடர்புக்கு: 9578764322

# கடவுளின் விசும்பல்

## அமுதாராம்



கடவுளுக்கு இந்தமுறை ஒரு விபரீத ஆசை தோன்றியது. பண்டிகைக் காலமாதலால் ஏதேனும் ஒரு வீட்டில் நன்கு வயிறாரச் சாப்பிட்டு விட்டு, எந்நாளும் துன்பத்தில் உழலும் மக்களுக்கு தந்துதவ வேண்டுமென்றும் கேட்கும் வரங்களனைத் தையும் தயாளக் குணத் துடன் பூமியில் வந்துதர உத்தேசித்தார். அப்போது அவரது எண்ணத்தைத் தன் உள்ளத்தால் அறிந்துணர்ந்த, சற்றும் அயர நேரமில்லாத மாதர்தம் குலவிளக்கு, அவரின் ஏகபத்தினி மனம் கேட்காமல் அவ்வாசைக்கு முட்டுக்கட்டைப் போட நினைத்தாள்.

“இது வேண்டாத வேலை உங்களுக்கு ஏற்கெனவே நான் பட்டது போதும்.”

வழக்கம்போல் பெண்பேச்சு காற்றில் பறந்தது. அவளது கரிசனமொழியை அவர் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவரது புறப்பாடு முன்னைவிட மேலும் தீவிரமடைந்திருந்தது. நெஞ்சில் நெருஞ் சியாய்த் தைத்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொண்டு கணவன் மீது கொண்ட தீராக்காதல் அவளைச் சும்மாயிருக்க விடவில்லை. புழுவாகத் தவித்தாள். எவ்வளவு சொன்னாலும் உதாசீனப்படுத்தும் ஆண் புத்தியை என்னதான் செய்வதெனக் கையாலாகாதவளாகப் புலம்பித் துடித்தாள். முகமெங்கிலும் வேர்வை முத்துகள் மைத்தீட்டப்பட்ட விழிகளில் உயிருக்குப் போராடும் படபடப்பு. எளிதில் துடைத்தெறிய முடியாத ஆற்றாமை ஆழிப்பேரலையாக உருவெடுத்துக் கொண்டிருந்தது. ஆனாலும் பொறுமை அடர்த்தியாய் அவளை எழும்பவிடாமல் அமுக்கியபடியிருக்க,

“நான் சொல்லும் இந்த ஒரு சொல்லையாவது நீங்கள் கேட்கக்கூடாதா?”

நா தழுதழுத்தது. தன் உயிருக்குயிரான கணவருக்கு நேரவிருக்கும் இழிவைத் தாங்கிக் கொள்ள அவளால் முடியவில்லை. தவிர, அவளது உடல் ஏற்கெனவே பழுதிலிருந்தது. கடும் வயிற்றுவலியோடு இந்தமுறையும் உதிரப்போக்கு காட்டாறாகக் கேட்க நாதியில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. அதற்கு அவரிடமிருந்து ஒட்டுமில்லை. ஒணக்கையுமில்லை. பதிலுக்கு நீ என்னதான் தெய்வப்பிறவியோ? என்ற சலிப்பை ஒவ்வொருமுறையும் அவரிடமிருந்து கேட்கும்போது வெந்தப் புண்ணில் வேல் பாய்ச்சுதல் என்பார்களே அதைத்தான் அவள் உணருவாள். பெண்ணுக்குள் எப்போதும் ஈரம் மிகுதி. ஈரத்திலேயே அவள் கிடந்து உழல்வதால் என்னவோ அவளுக்கே விளங்கவில்லை. பெண்புத்தியென்பது பின்புத்தியோ முன்புத்தியோ ஆனால் ஆண்புத்தியென்பது மட்டும் அவசரபுத்தி என்பதை அவர் ஆணியடித்தாற்போல் உணர்த்திக் கொண்டிருந்தார். அவளது

முயற்சியனைத்தும் வங்கக்கடலில் வீணாகக் கலக்கும் காவிரியானது.

அவளால் அங்கு நடப்பதற்கு ஒன்றுமில்லை. இனிபட்டுத் தெரி(ளி)ய. இருப்பவரை விட்டுத்தான் பிடிக்கவேண்டுமென நினைத்துக் கொண்டாள். கூடவே ஏதும் அவருக்கு நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் கடவுள் என்பதை மறந்து வேறுபல தெய்வங்களை நினைந்து பக்தியுடன் மன்றாடி வேண்டிக்கொண்டாள். புத்தம் புது ஆளாகக் காட்சியளித்தவரின் புதுக்கோலத்தைக் கண்டு வியந்தபோதிலும் அவள் மனம் பதறத்தான் செய்தது.

“பூவுலகிற்குச் செல்லும்போது இப்படியா போவீர்கள்?”

அதற்கில்லை தேவி ஆடை ஆபரணங்கள் ஆயுதங்கள் இத்யாதி இத்யாதியெனப் பகட்டாகத் தோற்றமளித்தல் எரிச்சலாகவும் சுமையாகவும் உள்ளது.”

“அதற்காக இங்கிருப்பது போல நினைத்த நேரத்தில் எழும்புவது, குளிப்பது, உண்பது, உறங்குவது, எதையாவது உடுத்துவது என அங்கும் இருக்க முடியுமா?”

“என் சோதனை முயற்சிக்கு நீ ஆதரவு தராவிட்டாலும் பரவாயில்லை. இப்படி அணைக்கட்டுவது முறையா?”

“நீங்கள் செய்யும் எல்லாவற்றையும் நான் சகித்துக் கொள்வது என் விதி. அதை மாற்ற முடியாது. அதையே எல்லோரிடமும் எதிர்பார்ப்பதென்பது என்ன நீதி?”

“முடிவாக என்னதான் சொல்ல வருகிறாய்?”

“கடவுள் நீங்கள்! கடவுளாகவே பூலோகம் செல்லுங்கள்! அதுதான் உங்களுக்கும் நல்லது நம் எல்லோருக்கும் நல்லது. உங்கள் திருவிளையாடல் என்னிடமும் என் மகன்களிடம் மட்டும் தான் செல்லும்! இப்போது அங்குச் செல்லுபடியாகாது என்பதைத் தாங்கள் உணர்ந்தால் சரி.”

“என் முடிவில் எந்த மாற்றமுமில்லை. பெண்ணென்பவள் எங்கேயும் எப்போதும் அழகுப் பதுமையாகத்தான் இருக்க வேண்டும். நீ அதை மீறினாய். அதனால் விளைந்த வேதனையை அனுபவிக்கின்றாய். ஆனால் நான் அப்படியல்ல. எப்படிப் போனாலும் பக்தர்கள் என்னை மெச்சவே செய்வர். புரியுதா?”

“மெச்சுவதும் மொத்துவதும் அங்குப் போய்தான் உங்களுக்குப் புரியப்போகிறது. உங்கள் தலையெழுத்தை மாற்ற நான் யார்? அதற்கென புதுக்கடவுள் ஒருவர்தான் அவதாரம் எடுத்து வரவேண்டும்

“என்ன அங்கே முனகல்?

“ஆங்....ஒன்றுமில்லை. நீங்கள் நல்ல நேரத்தில் இங்கிருந்து புறப்படுங்கள் சாமி. அதுதான் நம்மிருவருக்குமே நல்லது. உங்களிடம் வாதம் செய்து நான் மறுபடி மறுபடிச் சாம்பலாக என்னால் முடியாதுப்பா. காற்று எப்போதும் ஒரே திசையில் மட்டும் வீசாது. அது மட்டும் உறுதி.

“இப்போது சொன்னாயே இதுதான் மிகச் சரி.”

மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரளப் புவியை நோக்கிக் கிளம்பி நின்றார் கடவுள். பசி மறந்து.

“காலைச் சாப்பாடு?”

வேண்டாம். செத்துக்கிடக்கும் நாக்கிற்கு எம் பக்தர்கள் உயிரூட்டுவர். அதுவரை உன் சமையலை நீயே தின்னுத்தொலை.”

கட்டுண்டுக் கிடந்தாலும் ஆனந்தத்தில் பூரித்து சட்டென மாயமாக மறைந்து போன கணவன் நல்லபடியாக வீடு திரும்ப நோன்பிருக்கலானாள் உலகிற்கே படியளக்கும் அன்னை. மிகுந்த மன வலியோடு. பின், உடல் பெரும்பாட்டால் நசநசத்துப் போன உடைகளையும் அதிகாலையில் ஊர்மெச்ச பூண்டிருந்த ஒப்பனைகளையும் களைந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள மெல்ல ஒருவர் கண்ணிலும் தட்டுப்படாதவாறு வீட்டினுள் உட்புகுந்தாள்.

ஒவ்வொரு வீடும் விழாக்கோலம் பூண்டிருந்தது. அவரவர் தகுதிக்கேற்ப பண்டிகைக்கால பலகாரங்களை ஆக்கிப் படையலிட்டு வழிபட மும்முரமாக

இருந்தனர் மக்கள். அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வீடுகள் பெரும்பாலும் உள்தாழிட்டபடிக் கிடந்தன. காற்று எல்லாம் நுழைவதற்கே மிகச் சிரமப்பட வேண்டியிருந்தது. அதுவுமில்லாமல் ஆளரவம் இருப்பதற்கான அறிகுறியே இல்லாமலிருந்தது. பாதிப்பேர் மயக்கத்திலும் ஏனையோர் முயக்கத்திலும் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தது கடவுளுக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. கேட்பாரற்று சில்லிட்டுக் கிடந்த சமைத்த மற்றும் இணையவழியில் பெறப்பட்ட உணவுவகைகள் மெல்ல கெட ஆரம்பித்தன. பசி வயிற்றைக் கிள்ள ஏமாற்றத்துடன் வெளியேறினார் கடவுள். ஏறுவெய்யில் வேறு மண்டையைப் பிளந்தது.

நடந்ததில் நாக்கு வறளத் தொடங்கியது. அண்ணாந்து வானத்தைப் வெறித்தார். வெண்மேகங்கள் ஒன்றையொன்று துரத்தியோடிக் கொண்டிருந்தன. அதன் நடுவே களைந்த கூந்தலுடன் அவரது உத்தமி இரு கைகளையும் அகலவிரித்துக் கூப்பிடுவது போலிருந்தது. நாணத்தால் கடவுள் தலைகவிழ்ந்தார். தன்நிலை கண்டு தானே நொந்து போனார். அவருடைய மனக்குமுறலை அருகிலிருந்த மூங்கில் காட்டில் குடிகொண்டிருந்த குயிலொன்று சோகத்துடன் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தது. பஞ்சு போன்ற பாதங்கள் நோவ, கால்கடுக்க நடந்து கொண்டிருந்தார்...

தெளித்துவிட்டாற்போல மண்டிக்கிடந்த குடிசைகளுக்குள் கால்பதிக்க அவருக்கு மனம் ஏனோ வரவில்லை. மேலும், அங்கிருந்த பட்டினிப் பட்டாளங்களைக் காணச் சகிக்கவில்லை அவருக்குச் சுத்தமாக. தவிர, அவர்களது வீடு முழுவதும் நிறைந்து கிடந்தது வறுமை. கண்ணீர் முட்டியது. தம்மைக் கடவுள் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்பட்டார். அவர் முதன்முறையாக. தலைப்பிசுக்குடன் வெறும் இடுப்பு உள்ளாடையோடு அம்மாவின் நைந்துக் கிழிந்தப் பழையத் துண்டுப்புடவையைக் கைக்கு வந்தபடி சுற்றிக்கொண்டு கையில் முறிந்த புங்கங்குச்சியுடன் விளையாடிய ஆசிரியச் சிறுமி ஒருத்தியை எதிர்கொண்டவருக்கு ஒரே ஆச்சர்யம்.

“ஆரு?” கெட்டிப் புருவம் வில்லாய் வளைந்தது.

“நான்...”வாய்த் திக்கினார்.

பசிச்சுதா? இந்தா...”

பரிதாபத்துடன் அவள் கையில் கடித்து மீதியிருந்த தின்பண்டத்தை வேகமாக நீட்டியதும் கடவுளால் தாங்க முடியவில்லை. கண்ணீர் பொலபொலவென்று அருவியாய்க் கொட்டியது. அவர் அழுவதைக் கண்டு அவளும் அவளது அம்மாவைக் கூப்பிட்டபடி அழத் தொடங்கினாள். அதற்குள் அங்குக் கூட்டம் கூடிவிட்டது. கடவுளுக்கு என்ன சொல்வதென்று ஒன்றும் புரியவில்லை. கும்பலைக் கண்டு அலங்க மலங்க விழித்தார்.

“இன்னா புள்ளக் கடத்த வந்தவன் மாட்டிக்கிட்ட மாறி முழிக்கிற.ஆரு நீ?...”

“இன்னா வூரு?”

கேள்வி அம்புகள் சரமாரியாகப் பாய்ந்தன. கடவுள் திக்குமுக்காடிப் போனார். பேச்சு வர

மிகவும் சிரமப்பட்டது. புள்ளப் புடிக்கிறவன் மாறித் தோணல.”

ஆளைப் பாத்தா நல்லாளு மாறித்தான் தோணுது.

“ஆமாமா. நீ சொல்றது கரெக்கிட்டுதான்.”

“இன்னா பசியா? துட்டு வேணுமா?”

வேண்டும் என்பது போலவும் வேண்டாம் என்பது போலவும் இருவிதமாகத் தலையாட்டினார். கடவுள் வேகவேகமாக. கண்களில் உருவான மிரட்சி இன்னும் மறையவில்லை. உச்சியில் தகித்தது சூரியன். வறட்சியில் வாடிய தொண்டைக்குள் நாலாபுறமும் கூட்டித் திரண்ட சிறு எச்சிலைக் கொக்கு தன் தலையை முன்னும் பின்னும் ஆட்டியசைத்து மீனை

விழுங்குவது மாதிரி உள்ளனுப்பிக் கொண்டார்.

“எங்களுக்கே இங்க வழியக் காணோம். இதுல நீ வேறயா…?”

“அட வுடுப்பா. நம்மக் கஷ்டத்த அவர்ட்ட சொல்லிட்டு. இங்க நீ தேட்றது எதுவும் கெடைக்காது. எங்களுக்கே புழுத்த ரேஷன் அரிசிதான். அதுவுமிப்போ மாசக் கடேசி வேற ஒரு வேளைக் கஞ் சிக்கே பெரும் திண்டாட்டமாயிருக்கு. அதுவுமில்லாம இங்கிருக்கிற எல்லாம் சோத்துப்பட்டாளம். கொஞ்ச நேரம் போச்சுதுனா பசிதாங்காம இவனுங்க ஒன்ன பிச்சுத்தின்னாலும் தின்னுருவாங்க. ஆளு வேற மா நிறமா இருந்தாலும் சோக்காயிருக்க பொண்ணுப் புள்ளைங்க நெறைஞ்சிருக்கற எடம் இது. ஒன்ன மாறி ஆளுங்களை வேற நம்பமுடியாது. அதுனால மொதல்ல எடத்தக் காலி பண்ணு.”

அங்கிருந்து அடித்து விரட்டப்பட்ட வராகச் செய்வதறியாது கால்போன போக்கில் நடையைக் கட்டியவரைப் பார்த்து அச்சிறுமியின் விதவைத்தாய்க் கூறினாள். கழிவிரக்கத்துடன்.

“ஐயோ.பாவம்.”

கடவுள் தனியே நடக்க ஆரம்பித்தார். மிக சோர்வுடன். பசி காதை அடைத்தது. ஆனாலும், பக்தர்கள் மீதான தன் நம்பிக்கையை அவர் இன்னும் கைவிடவில்லை. போகப்போக அவருடைய நடை தள்ளாடியது. சூரியன் மேற்கு நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தான். கடவுளை இனியும் வாட்டுவது முறையல்ல என்று கருதி ஒவ்வொரு மேகக்கூட்டத்திலும் ஒளிந்து ஒளிந்து. இதற்கிடையில் அங்கிருந்த ஒரு பெரிய சாலைப் பள்ளத்தில் கால்வைத்துத் தடுமாறி விழப் போனவரைத் தாங்கிப் பிடித்தது ஒரு கை.

“என்னய்யா நீ கண்ணப் பொறடியில வச்சுட்டு நடக்கிற? ஒழுங்கா நடந்தாலே ஆள அடிச்சுக் காலிபண்ணிட்டு சிட்டா பறந்துர்றான்.நீ என்னடான்னா…”

கடவுள் தன்னை நன்கு இப்போது சுதாரித்துக்கொண்டார். எஞ்சியிருந்த உடல் வலுவனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து. அத்திருநங்கை கூறியது போலவே சாலையில் இயங்கிக் கொண்டிருந்த பல்வேறு வாகனங்கள சர்புர்ரென காதைப்பிளக்கும் சத்தத்தடன் புகையினைக் கக்கிக்கொண்டு பறந்து கொண்டிருந்தன.

சற்று முன்னர் அடிபட்ட நாயொன்று சக்கைச்சக்கையாய் ஆகிக்கொண்டிருந்தது.

செல்பேசி மனிதர்கள் சுற்றுப்புறத்தை மறந்து செவி தீப்பிடிக்க குழாவிச் செல்வதை வியப்போடு அவர் பார்த்தார். தனக்கும் இப்படியொரு கைப்பேசி கிடைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என மனத்திற்குள் நினைத்துக் கொண்டார். அப்போதுதானே உடன் தன் மனைவியைத் தொடர்புகொண்டு ஒரு மன்னிப்பு கேட்கமுடியும். “அவன் அவன் குடிச்சுட்டு பகல்லேயே மெதக்குறான்னா நீ சரக்குப் போடாமயே கனவுல மெதக்குற?! நீ சரிபட்டு வரமாட்டே. எனக்குத் தலைக்குமேல் வேலை கெடக்கு. இந்தாயிருக்குப் பாதை. பார்த்து ஓரமாப் போ! நா வர்றேன்.”

கட்டைக்குரலில், பற்றியிழுத்து வந்த கையை வெடுக்கென்று உதறி நடையில் நளினத்தைப் பெருக்கி விரைய முற்படுபவளைத் தடுக்க மனமில்லை அவருக்கு. போகட்டும் என்று விட்டுவிட்டார். அவள் தோள் மற்றும் கை நிறைய அழகிய கைவேலைப்பாடுகள் நிறைந்த வண்ணவண்ண ஒயர்கூடைகள் விற்பதற்காகத் தொங்கிக்கொண்டிருந்தன. அததற்குரிய விலையுடன்.

கடவுள் விரக்தியுடன் தனக்குத் தானே ஒரு குறுஞ்சிரிப்பை வெளிக் காட்டிக்கொண்டார். அவரது அடிவயிற்றில் பிடுங்கித் தின்னும் கோரப்பசி கொஞ்சம் கொஞ்சமாக மரத்துப்போகத் தொடங்கியது. அப்போது எங்கிருந்தோ வந்த கோடைத் தென்றல் அவருடைய உடம்பு முழுவதையும் வருடிச் சென்றது. ஆழ்ந்து மூச்சை இழுத்துக்

கொண்டார். களைத்துப் போயிருந்த உடலில் ஒரு பெரும் புத்துணர்ச்சி கூடியது போலிருந்தது. நிமிர்ந்து நேராகக் கையினை இருமருங்கிலும் வேகமாக வீசி நடக்க முற்பட்டார். அப்போது காத தூரத் தொலைவிலிருந்த ஒரு தனி மாடி வீட்டில் பண்டிகைக் களைக்கட்டிக் கொண்டு நிரம்பியிருந்தது. அதுபோக, பலகார வாசம் மூக்கைத் துளைத்தது. காய்ந்து வெடித்திருந்த நிலத்தில் இப்போது திடீர் இடிமழை உள்நாக்கு ஈரம் இனித்தது. மட்டுமல்லாமல் அடங்கிப் போன ஆர்வத்தை மேலும் தீவிரப்படுத்தியது. மயிர்க்கால்களெல்லாம் ஆனந்தத்தில் சிலிர்த்துக் கிடந்தன.

வீடே அல்லோலகல்லோலப் பட்டாலும் அங்கு அவரை வரவேற்க ஒரு நாதியும் எழவில்லை. ஆனாலும் அவர் ஓர் அழையா விருந்தாளியாய் அங்குக் காட்சித் தந்தார். யானைப் பசியுடன். கதவு திறந்துக் கிடந்தது. புழக்கத்தில் ஒருவருமில்லை. எல்லோரும் பூஜையறையில் சாமிக் கும்பிடுவதில் மும்முரமாக இருந்திருப்பார்கள் போலும்!

“ஐயா...அம்மா...”

குரல் மிகவும் பலவீனம் அடைந்திருந்தது. ஒருத்தரும் எட்டிப் பார்க்கவில்லை. இந்த முறை அதையே சற்று வேகமாகக் கூவினார். பல்வேறு சடங்குகள் சத்தத்திற்கிடையே ஒரு சுட்டி வெளியே வந்ததும் அவருக்குள் இனம்புரியாத ஒரு பெரிய நிம்மதி! முகத்தில் வெளிச்ச நிலவுகள் ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தன.

“யாருடீ?”

“யாருன்னு தெரியலம்மா. யாரோ புது அங்கிளா இருக்கார்!”

“வளவளன்னு அவருகிட்டே தொணதொணக்காம யாரு? என்னன்னு சுருக்கா கேட்டனுப்பிட்டு சட்டுனு உள்ளவா. சாமி கும்பிட்டுட்டு சாப்புடணும்.

“கடவுள் தன்னால் முடிந்தமட்டிலும் அவ்வீட்டினுள் ஏதேனும் உணவாகக் கிடைக்காதா என்று எட்டிப்பார்த்தார். ஒருவரும் தட்டுப்படவில்லை. ஆனால், குரல் மட்டும் அச்சிறுமியை இயக்கிக்கொண்டிருந்தது. அதுதவிர, வீடே பலகாரப் பட்சண வாசனையால் ஆளைச் சுண்டியிழுத்தது. அவ்வீட்டிற்குள் யாரும் எளிதில் நுழைய முடியாதபடி பெரிய இரும்பினாலான நுழைவுவாயில் ஒன்று இழுத்து மூடப்பட்டு உள்பூட்டுப் போடப்பட்டிருந்தது. அவருக்குப் பெரும் இடையூறாக இருந்தது. அந்த நுழைவு வாயிலில் சுவர்ப் பல்லியாக அவர் ஒட்டிக்கிடந்தார். பாவமாக.

யாரு வேணும்?”

அதட்டலான குரல். அவருக்குச் சப்பென்று போனது. இதற்கு என்ன பதில் கூறுவதென்று அவருக்கு விளங்கவில்லை. ஒருவழியாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு வேறு

உபாயமின்றி உண்மையைப் போட்டுடைக்க முற்பட்டார். நாந்தான் உங்கள் கடவுள் வந்திருக்கேன்னு சொல்லும்மா!.”

திடீரென வெடிச்சிரிப்பு சிரித்தாள் அந்தச்சிறுமி. பூமி கொஞ்சம் அதிர்வதைப் போலிருந்தது. கடவுள் துடித்துப் போய்விட்டார். எப்படி அதை அவளிடம் மெய்ப்பிப்பது என்று புரியாது குழம்பினார். ஒருசில வினாடிகளுக்குள் அவரது மண்டை காய ஆரம்பித்தது. உடன் திரண்ட கண்ணீர் இருகண்களையும் முட்டிக்கொண்டு நிற்க...

“நீ கும்புடுற சாமி சத்தியம். நான் கடவுள்! உங்கள் கடவுள்!”

அழுதேவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும் போலும்.

கடவுள்னா ஒன்னமாறி இப்படியிருக்காது. போட்டோவுலயும் கோவில்லயும் ச்சும்மா ஜம்முன்னு இருக்கும். நீ வேணும்னே புளுகுற! ஒன்னப்பாத்தா புள்ளப்புடிக்குறவன் மாறியிருக்கு.”

அதற்குள் பொறுமையிழந்து போன அவளுடைய தாய் அங்கு வந்துவிட்டாள். தலை சிலும்பிக் கிடந்தது. முகமெங்கிலும்

வியர்வைத் துளிகள் அரும்பிக் கிடந்தன ஒரே தொப்பலாக, அங்கு சற்று நேரத்தில் ஒரே பரபரப்பு கூடியது.

"என்னடீ அங்க! ஒரே வெட்டிப் பேச்சு?"

"யாரோ ஒருத்தர் இங்கு வந்து தன்னைக் கடவுள்னு சொல்றாரும்மா!"

"அவருக்குத்தான் புத்தியில்ல. ஒனக்குமா?"

"இல்லமா நெசமாத்தான் சொல்றேன்."

"போய்யா. போயி ஓஞ்சோலியப் பாரு. எங்களுக்கு உள்ளுக்குள்ள ஆயிரம் வேலைக் கிடக்கு. சும்மா கடவுள் கிடவுள்னு இந்தப் பச்சப்புள்ளைக்கிட்டே பொய் சொன்னமாறி வேற எங்கினேயும் புளுகு மூட்டைய அவுத்து வுடாத! அப்பறம், முதுகு புண்ணாப போய்டும். ஜாக்ரதை!"

மறுபேச்சு எதையும் கேட்க விரும்பாதவளாகத் தன் சுட்டிப்பெண்ணின் தோளைக் கெட்டியாகப் பிடித்துத் திருப்பித் துரிதமாக ஒரு மாட்டை அடித்து விரட்டுவதுபோல வீட்டினுள் ஓட்டிச் சென்றவள் நிலைப்படியில் நின்று பின்.

திரும்பிப் பார்த்தவளுக்கு அதிர்ச்சி.

அவரிடம் ஒரு அசைவுமில்லை. பிடித்துவைத்த பிள்ளையார் மாதிரி அவர் அப்படியே காணப்பட்டார். அவரைப் பார்க்கவே ஒருவகையில் கஷ்டமாக இருந்தது. மிகப் பாவமாக இருந்தது. அதுபற்றி அவளுக்கு எந்தக் கவலையையும் காட்டிக் கொண்டதாக ஒரு அறிகுறியுமில்லை. மாறாக, அவள் மிகவும் எரிச்சலுற்றாள். உள்ளுக்குள் ஓர் இனம் புரியாத பயம் ஒன்று கவ்வியது. அதனாலேயே

"ம்ம்... கௌம்புக் கௌம்பு..."

"நா..." பேச வாயெடுத்தார்.

"நீ ஒண்ணும் சொல்லவேணாம். போறியா இல்ல போலீஸ கூப்பிடட்டுமா?"

அவரது கடைசி நம்பிக்கையும் தூள்தூளானது. வேறுவழியில்லாமல் திரும்ப தன் இருப்பிடம் நோக்கி விரைந்து செல்வதே நல்லதென முடிவெடுத்து அங்கிருந்து அவரது கால்கள் தரையைத் தடுமாறித் தடுமாறி அளவிட்டன. அப்போது விண்ணிலிருந்து தூறல் ஒன்று விழத் தொடங்கியது. அந்நிய ஆள் ஒருவரிடமிருந்து தப்பிய மகிழ்ச்சியில் அவளோ இவ்வாறு அங்கலாய்த்துக் கொண்டாள்.

"சாமிப் பேரச் சொல்லிக் கொஞ் சங்கூட இரக்கமில்லாம இந்த மனுஷங்க வரவர எப்படியெல்லாம் ஏமாத்தக் கிளம்பிட்டாங்க."

●


## படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

கதை சொல்லிகளிடமிருந்து கதைகள், கவிஞர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரையாளர் களிடமிருந்து கட்டுரைகள், பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள்.
தகுதியான படைப்பிற்கு களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்: 9659335462
மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே
9659335462 விவரத்தை எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.



# மௌன ராகம்

## பா.உஷாராணி

1.
மண்ணில் இட்ட விதை
சற்றொப்ப நாட்களிலேயே
அடர்த்தியாய் விரிக்கத் தொடங்கியது
வசீகரப் பசுமையை..
வேரின் வலிய மௌனத்தை வியக்கிறேன்..
ஆழ ஆழப் புதைந்து நீரேற்றி காத்தல் செய்யும்
'சொல் குறுக:
நிமிர் கீர்த்தி' என
வியத்தலின் தலையில் குட்டுகிறார் கம்பர்.
2.
வாய் ஓயாத பேச்சில்
பன்னெடுங்காலமாகத் தங்கியிருக்கிறாய்..

உன் பேச்சின் பள்ளத்தாக்குகளில்
உருளாமல் இருப்பதே
பெரும் சாகசம் தான்..

உற்சாகத்தில் களிமிகு கூச்சல்கள்..
உக்கிரம் கொள்கையில்
தடித்த சொற்களின் மோதல்கள்..
மன சலசலப்பில்
ஆரவார அழுகையொலிகள்..
எதையும் சப்தங்களோடு
நிகழ்த்தப் பழகியிருக்கிறாய்..

சொற்கள் நிசப்தத்தைக் கிழிப்பதைத்
தாளவியலாமல் தடுமாறுகிறேன்..

கால்களில் மகரந்தத் துகள்களை
எடுத்துச் செல்லும்
வண்ணத்துப்பூச்சியொன்றின்
அழகிய மௌனத்தைப்
பின்தொடர்வது
போதுமானதாயிருக்கிறது இவ்வாழ்வுக்கு.

3.
தன் மௌனத்தில்
நிசப்தத்தின் ஒளிக்கீற்று
அடர்த்தியாய் வியாபித்திருப்பதை
என்னிடம் இரவு
பகிர்ந்து கொண்டிருந்த பொன் கணத்தில்
சட்டென எங்களைப் பிளந்தது
நடுநிசி நாய்களின் ஆங்கார ஊளை..
மகத்துவங்கள்
அற்பத்தில் குலைவது
இப்படித்தான்.

என் மௌனத்திற்கு அல்ல..
உங்கள் பேச்சிற்கு வேண்டும்
சொல்லிப் புலம்ப காதுகள்..
4
என் மௌனத்திற்கு அல்ல..
உங்கள் சொல்லுக்கு வேண்டும்
வசீகரிக்க பூச்சுக்கள்..

என் மௌனத்திற்கு அல்ல..
சப்தங்களின் நெரிசலில் நிற்கும்
உங்கள் வார்த்தைகளுக்குத் தான் வேண்டும்
'யாகாவாராயினும் நா காக்க' என்னும்
சாட்டை.

5. புத்தராவதோ,
கடவுளாவதோ பிறகு..
உக்கிரத்தின் தட்பவெப்ப நிலைக்கு
அப்பாற்பட்டதோர்
உன்னத மௌனத்தைக் கண்டடைந்து
மனிதராவோம் இப்போது.

●

ஆய்தல்

# முறைதிரிந்த மருதம்பாடும் மனங்கொத்திப் பறவை

செழியரசு

தஞ்சை மண்ணில் திருவையாற்றுப் பகுதி குடமுருட்டி ஆற்றுக்கும் வெட்டாற்றுக்கும் இடையிலுள்ள திருவாலம் பொழில் என்னும் சிற்றூர்வாசி இனிய நண்பர், கவிஞர் வலம்புரி லேனா 1990 முதல் கவிஞராக, கட்டுரையாளராக, இதழாளராக, தொகுப்பாளராகத் தொடர்ந்து எழுத்து யாத்திரிகம் மேற்கொண்டிருக்கும் இவர் அண்மையில் வெளியிட்ட ஒரு காலத்தில் நிகழ்காலம் என்ற கவிதைத் தொகுப்பைக் கையளித்திருந்தார்.

தன்னோடுவசிக்கும் ஊர்மக்களின் மனங்களை, மருத நிலக்கழனி முறை திரியும் காட்சிகளை, சிதையும் சூழலியலை, தனக்கே வாய்த்த அபூர்வத் தருணங்களை, இயற்கையின் அழகியலைச் சிக்கென வார்த்தைக்குள் பிடித்து நம்மிடம் வசப்படுத்தியிருக்கிறார்.

அடுக்குமாடி அறைக்குள் வைக்கப்பட்டிருக்கும் இனிப்பை நுகர்ந்து கண்டடைந்திடும் சிற்றெறும்புகளைப் போல் மிக எளிதாக நுழைந்து விட முடிகிறது லேனாவின் கவிதைகளுக்குள். இவர் வார்த்தைகளைத் தேடி அலையவில்லை ஒரு பிஸ்கட்டிற்காக தன் பின்னால் ஓடி வரும் நாய்க்குட்டிகளாகச் சொற்கள் இவர் பின்னால் வாஞ்சையுடன் நடந்து சினேகம் கொள்கின்றன.

குழந்தைகள் எல்லாவற்றையும் நம்மைக் கண்டு கற்றுக் கொள்கிறார்கள். அன்பை மட்டும் நாம் அவர்களிடம் கற்றுக் கொள்ள வேண் டிருக்கிறது என்பார்கள் குழந்தைகள் விளையாடுவதைக் கண்டு தரிசிக்கும் கவிஞர் லேனா "குழந்தைகளும் / அதிகாரங்களைக் / கையிலெடுக்கும் / அவதாரங்களுக்கே / ஆசைப்பட்டன" என்கிறார். சமகால அதிகாரத்தின் தாக்கம் குழந்தைகளின் மனதையும் ஊடுருவி ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டு அதிராமல் இருக்க முடியவில்லை.

"விளையும் பூமியில் / விதைத்தனர் / பெட்ரோல் பங்குகள். "என்று மருதத்தின் கையறு நிலையைக் காட்சிப்படுத்தும் லேனா "தூண்டிலுக்கும் /வலைக்கும் / அகப்படாதது / லாரிகளுக்கு அகப்பட்டது / ஆறு" என்று குமுறுகிறார். கவிஞரின் தழுதழுக்கும் குரலில் நிலமும் ஆறும் நிர்மூலமான அவலத்தைக் கேட்பதோடு நாம் கடந்து கொண்டிருக்கிறோம் கிஞ் சித்தும் மனஉறுத்தலின்றி அடுத்தத் தலைமுறையினரின் வாழ்வாதாரத்தைப் புறக்கணித்தவர்களாய். காதலால் தான் இந்தப் பிரபஞ்சம் மலர்ந்திருக்கிறது. காதலைக் கொண்டாடும் தேசங்கள் அறிவியலில், தொழில்நுட்பத்தில் அளப்பரிய உயரத்தில் சென்று கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு உயிரும் அதனதன் இணையைத் தேர்வு செய்ய இயற்கை அனுமதித்திருக்கிறது. தமிழ் நிலத்திலோ தலைகீழ் தருமபுரி இளவரசன் திவ்யாவின் ஆணவக்கொலை முதல் இப்படியான நிகழ்வுகள் தண்டவாளங்கள் போல் நீண்டு செல்லும் பேரவலத்தைக் காணும் கவிஞர் "காதலை / ருசி பார்த்து ருசிபார்த்து / கறுத்துப் போய் கிடந்தன/ தண்டவாளங்கள்" என்று குழம்பாய்க் கொதிக்க வைக்கிறார்.

அழகியலை அளவெடுத்த வார்த்தைச் சட்டகத்திற்குள் வார்த்தெடுக்க கவிஞர்களுக்குக் கைக்கூடுமெனினும் லேனாவின் அழகியல் அனுபவம் கூடுதலாகத் தத்துவமாய் மிளிர்கின்றன. "இருளுக்குள் செல்ல / பயமாகவே இருக்கிறது/எப்போதும் / தனியாகவே இருக்கிறது/இருள் எனத்திடுக்கிட வைப்பவர், "அழகான பூமாலை / அலங்கோலமான பிறகு / ரசிக்க முடியவில்லை / அலங் கோலமாய்ச்/சிதறிகிடக்கும்/ பூக்கள் / அழகைக் கூட்டிவிடுகின்றன என்று மலர்களின் ஒழுங்கையும் ஒழுங்கின்மையும் காட்சிப்படுத்தும் லேனா பார்வை முரணை கவிமாலையாக்கும் லாவகக்காரராய் வலம் வருகிறார்.

கவிஞர் லேனாவின் கவிதைகள் வாசிக்க வாசிக்க அலாதியானவை ●

சிறுகதை

# எல்லோர்க்கும் பெய்யும் மழை

## அ.சுரேஷ்குமார்



நெடுமருதூர், காவிரிப் பாசனத்தில் செழித்திருந்த ஊர், முப்போகமும் நெல் விளையும் வளமான பூமியாகத்தான் இருந்தது. கஜா புயலுக்குப் பின் கலைத்துப் போட்ட தாயக்கட்டங்களாக மண்ணின்தன்மை மாறிப்போய் கிடந்தன. சுற்றியுள்ள ஊர்களின் நிலங்களில் தென்னை வளர்ப்பும், இறால் பண்ணைக் குட்டையும் பெருகிக் கொண்டிருந்தன. ஆற்றுப் பாசனப் பரப்பும் குறைந்து போனதால் பாதிப்பேர் பட்டணம் போய்விட்டார்கள். பிழைப்புக்கு வழி தேடுவது அதிகரித்தது.

மேட்டூரிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் கடை மடைப்பகுதி வரை வந்து சேரவில்லை. கூடுதலாகவும், முறை வைத்தும் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள், மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துவிட்டுக் காத்திருந்தார்கள். அந்தப் பகுதியின் உழவர் சங்கத்தில் ஒருவனாக அன்னத்தின் கணவன் கந்தன் இருந்தான். அவனின் பெயரும் சிறு விவசாயிகள் பட்டியல் பதிவில் இருந்தது. சங்கத்தின் பகுதிச் செயலாளரும் அவன்தான். தோளில் பச்சைத்துண்டும் மனசில் சிவப்புத் சிந்தனையும் கொண்டவன். விவசாயிகள் சங்கத்தில் முக்கியமானவன்.

இளங்காலை வேளையில் கந்தன், உதவியாட்களுடன் தன் வீட்டிலிருந்த நெல் மூட்டைகளைக் கமிட்டிக்கு அனுப்பப் பாரவண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தான். தோளில் ஏற்றியும், இறக்கியும் நெல் மூட்டைகளை அடுக்கியவர்களுக்கு உதவிக்கொண்டிருந்தான்.

அங்கே வந்த அன்னம், ரெண்டு ஏக்கருக்கு முப்பது மூட்டை நெல்தான் கண்டிருக்கு! வெள்ளாமை சரியில்லே அதை மனசில வச்சுட்டு கமிட்டிக்கு

மட்டும் போய்ட்டு வாய்யா.. வேல மரத்துக் காணிய சம்பாவுலயாவது மீட்கமுடியுமானு பார்ப்போம்? கூட்டத்துக்குப் போனேன், ஸ்டேசனுக்குப் போனேன்னு, எதுவும் சொல்லாத! என்று தன் கையில் வைத்திருந்த பச்சைநிறத் துண்டினை கொடுத்தாள். அதை வாங்கித் தோளில் போட்டுக்கொண்டு, அன்னம்.. வெத நெல் எடுத்து வெச்சியா? என்றான். ம்.... நாலு மூட்டை எடுத்து வெச்சிருக்கேன் போதும்.

நம்ம சீவன் துடிக்கறதே, இந்த நெல்மணிகளுக்காகத்தானே! என்றபடி கீழே சிதறிக்கிடந்த நெல்மணிகளைக் கைகளால் கூட்டி ஓரிடத்தில் குவித்து வைத்துக் கொண்டிருந்தாள், அன்னம்.

அதைப் பார்த்த, கந்தனுக்கு அவளின் கோரிக்கை நினைவுக்கு வந்தது. சரிதான் அன்னம்.. இங்கே அதிகாரம் வெச்சிருக்கிற எல்லா மனிதர்களிடமும் நியாயமும் இருந்தா போதும். கழனி செழிக்கும், உழவர்கள்னாலே காமாலை வந்த கண்ணாலயே பாக்கறாங்க, விவசாயி சான்று, கமிட்டியில பதிவு, பணம் வழங்கல் எல்லாத்தையும் காலத்துல செஞ்சுட்டா, நாங்க ஏன் மறியல், போராட்டம்னு போறோம்? ஆர்ப்பாட்டம்னு போறோம்? உழக்கிறவனுக்கு எத்தனை வேலை இருக்கு உலகத்தில்.

இப்போ கூட பாரு.... கழனிவாசல் வாய்க்கால சரியா தூர் வாராததாலே வடிகால் தண்ணீர் கடலாழிக்குப் போகாமே எதிர்த்து வருது. தாளடிக்கு விட்ட நாத்தங்கால் எல்லாம் தண்ணியிலே மூழ்கிப்போச்சு.... நம்மைப் போல, நெல்லு தான் உசிருன்று நெனக்கிறவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. சேற்றிலேயே கால் தேஞ்சு இடுப்புக்கு வேட்டியும், தோளுக்கு துண்டுமா அலையறவன் மனசு தாங்குமா? சூலிலே கருகின நெல்லாட்டாம் ஆகாது? அதுக்காகத் தான் கோரிக்கை, மறியல், ஆர்ப்பாட்டம்னு போறோம். இங்கே போராடினா தானே எல்லாம் கெடைக்குது. நாங்க வேணுமுன்னு செய்யலம்மா.... வேதனை.... வலி.... அதுதான் என்று அவளைத் தேற்றும்படிச் சொல்லிவிட்டு, பாரவண்டியின் அருகே நின்றிருந்த காளைகளைப் பூட்டினான்.

நெல் மூட்டைகளை அடுக்கி முடித்துக் கீழிறங்கிய உதவியாட்கள் தண்ணீ தாங்க என்று கேட்க, அவள் உள்ளே சென்று. சொம்புத் தண்ணீரும், குவளையும் கொண்டு வந்து தந்தாள். அவர்கள் அதை வாங்கி மிடறு மிடறாகக் குடித்து விட்டு வண்டியிலேறினார்கள். அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளின் மீது துணியைப் பரப்பி உட்கார்ந்ததும், போலாண்ணே! என்று குரல் கொடுத்தார்கள்.

அன்னம் ஏதோ நினைவுக்கு வந்துவிட்டதைப் போல... என்னாங்க.... அதியன் தஞ்சாவூர் மன்னர் கல்லூரியிலே சேர்ந்துட்டானாம். உடனடியா பெரிய போன் வாங்கச் சொல்லிட்டாங்களாம் பட்டன் போன்ல புது வசதிகள் இல்லே. பத்து ஆயிரம் ரூவா வருமாம். பட்டையா, பெருசா, இருக்குமாமே! அந்த மாதிரி போனுக்குத் தான் பாடங்கள், விவரங்கள் எல்லாம் அனுப்புவாங்களாம் என்றாள்.

ஆமா அன்னம். இந்த நாளிலே எல்லா படிப்புக்கும் அந்த போன் அவசியந்தான்னு பேப்பர்ல எழுதி இருந்தாங்க படிச்சேன். கமிட்டிக்கு போய்ட்டு வர்றேன், பேசிக்குவோம்... இன்னிக்கே வேல முடிஞ்சுட்டா நல்லது தான் என்று பேச்சை முடித்து ந்தா...என்று சத்தமிட்டு அவனும் வண்டியில் ஏறிக்கொள்ள, கந்தனின் அந்தச் சொல்லைக் கேட்டதும் காளைகள் அவற்றின் கழுத்தை முண்டி இழுத்து நடக்க ஆரம்பித்தன.

மஞ்சளாற்றுக் கரையின் வண்டித் தடத்திலேயே மாயவரம் நோக்கி அந்த வண்டி, மூட்டைகளையும் அவர்கள் மூவரையும் சுமந்து சென்று கொண்டிருந்தது.

வானம் புகையாகத் தெளிவில்லாமல் இருந்ததால் கீற்றாய் வரும் சூரியக்கதிர்கள் மேகங்களின் இடைவெளியில் நுழைந்து தரையினைத் தொட்டபடியே வந்தன.

இந்த ஆற்றிலிருந்து தான் கோடங்குடி மதகு வழியாகக் கழனி வாசல் வாய்க்கால்

மூலம் பாசனம். வாய்க்காலின் நீர் இளம்பச்சை நிறத்தில் சேலை அசைவது போல் அசைந்தபடி சென்றது. தாம்புச் செடிகள் நீரில் முங்கி எழுந்தன. அப்பகுதியில் குறுவை சாகுபடிக்கு நிலத்தடி நீர், தாளடிக்கு காவிரி நீர் என்று பற்றாக்குறையிலும் விவசாயம் தொடர்ந்தது. உழவை மதிப்பவனுக்கு தண்ணீரும் ரத்தமும் ஒன்றுதான். அது உயிரில் கலந்தது. வீணாக்கக் கூடாது என்ற உணர்வு இருக்கும்.

கந்தனைக் கமிட்டிக்கு அனுப்பிவிட்டு வீட்டில் இருந்த அன்னம். மரத்தூணில் சாய்ந்தபடி அவனை நினைத்துக்கொண்டாள். கந்தன் பகுதி செயலாளர் என்றாலும் தவறுக்குத் துணை போகாதவன். உழவர்கள் பயன்பெற மட்டுமே கலெக்டர் ஆபிஸ், மாயவரம், நன்னிலம் என்று பயணம். மற்ற நாட்களில் சேத்து நண்டு மாதிரி வயலிலே உழன்று கொண்டிருப்பான். களை எடுக்க,உரமிட என்று நாள் முழுதும் உழைப்பான். உழைச்சு வாழாதவனுக்கு ஏது உலகம்? என்ற கொள்கை உடையவன்.

ஒரு முறை கந்தனை, வெள்ள நிவாரணம் கேட்டு மறியலில் ஈடுபட்டதற்காக மாயவரம் சிறையில் வைத்துவிட்டார்கள். விவசாயிகள் பலரும் அவனோடு அடைக்கப்பட்டிருந்தனர். அவனைப் பார்க்க அங்கே வந்த அதியனையும், அன்னத்தையும் சிறைக்கம்பிகளுக்கு வெளியே பார்த்ததும் கந்தனுக்கு குற்ற உணர்வு வந்து நாக்கு குழறினான். பேச முடியாமல் அவர்களை எதிர்கொள்வது மேலும் ஒரு தண்டனை என்று எண்ணி மௌனமாய் நின்றிருந்தான்.

சிறிது நேரத்தில் தன்னிலைக்கு வந்தவன் அன்னம், தம்பியை அழைச்சுட்டு வீட்டுக்குப் போ... தலைவர் வந்ததும் வெளிய விட்டுருவாங்க...''

வந்திடுறேன் என்றவன். அதியனிடமும், நீ கவலைப்படாதப்பா! எனக்காக நான் வரல உன்னைப் போல வளரும் தலைமுறைக்குச் சோறு போட இந்த மண்ணு வேணும்.... நிலத்தை மலடாக்கிற திட்டங்கள் எல்லாமே தவறு தான். நிலத்துக்காக, விடுதலைக்காக, சுயசார்புக்காக எத்தனையோ தலைவருங்க தியாகம் செஞ்சிருக்காங்க அதோட ஒப்பிட்டா, நான் அனுபவிக்கிற சிறைவாசம் எள் முனை அளவு, ஒரு துளி நீர் அவ்வளவு தான். என்னை இந்தக் கம்பிகள் ஒன்றும் பண்ணாது.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழிப்போம்னு பாரதி பாடினார். அதைத்தான் நாங்க பேசிட்டு இருக்கோம். நெற்பயிருல அவரு கதிருன்னா... நாங்க குருத்து, இது தான் தம்பி வித்தியாசம்!'' என்றான்.

அன்று, அவன் கூறிய ஆறுதல் வார்த்தைகள் இன்றும் அவளின் காதில் கேட்பதைப் போல் இருந்தது. நல்லவிதமா... போய்வரட்டும் என்று வேலை அசதியால் தரையில் படுத்து உறங்க ஆரம்பித்தாள்.

மாயவரம், உழவர் சந்தைக்கு முன்பாக வண்டியைக் கந்தன் ஓட்டிச் செல்லும் போது, நடேசன் தெருவிலேயே போக்குவரத்துத் தடையானது. சாலையில் மழை நீரும் சகதியும் கலந்து கோடாய் ஓடிக்கொண்டிருந்தது. முன்னே செல்ல முடியாமல் வாகனங்கள் நெருக்கடியில் தாறுமாறாய் நின்றிருந்தன.

வண்டியிலிருந்த உதவியாள் ஒருவன் கீழிறங்கிப் போய் விசாரித்து வந்து, ''அண்ணே! கமிட்டியிலே விவசாயிகள் சாலை மறியல் செய்றாங்க. நெல் கொள்முதல் நடக்கலயாம். அங்கே வெளியிலே அடுக்கியிருந்த நெல் மூட்டையிலேருந்த நெல்லெல்லாம் முளைப்பு கண்டதால அதிகாரிகள உள்ளே வெச்சு பூட்டிட்டாங்களாம்'' என்று தெரிந்து வந்த விவரங்களை ஒன்று விடாமல் சொன்னான். அதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த கந்தன், தம்பி.... வண்டிய ஓரங்கட்டுங்க என்றதும், செய்தி சொன்னவன் இரண்டு சக்கரங்களின் முன்னே கல் வைத்து அண்டை கட்ட, மற்றொருவன் வண்டியின் பின்னால் சென்று தாங்கு கட்டையை எடுத்துக் தரையில் வைத்தான். மாடுகளின்

கழுத்திற்கும் நுகத்தடிக்கும் இடையில் காற்று நுழைந்து போகும் இடைவெளி ஏற்பட்டது, மாடுகள் பெருமூச்சு விட்டு, கழுத்து வலி குறைந்து உடலைத் தளர்த்திக் கொண்டு நின்றன.

கந்தன், அவர்களிடம் நீங்க, வண்டிக்கிட்டேயே இருங்க! கைச் செலவுக்கு வெச்சுக்கங்க... என்று கொஞ்சம் பணமும், அவனின் படிவங்கள் அடங்கிய துணிப்பையையும் தந்துவிட்டுக் கூட்டத்தினுள் நுழைந்து வழி ஏற்படுத்தியபடியே முன்பக்கமாக நகர்ந்து, கமிட்டியின் வாசலுக்குப் போனான். அங்கங்கே திட்டு திட்டாகப் பத்துப் பதினைந்து பேர் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களின் கைகளில் வைத்திருந்த நெல்மணிகள் முளை விட்டதைப் பார்ப்பவர்களிடம் எல்லாம் காட்டினார்கள். சிலர் நீதி வேண்டும், நிவாரணம் வேண்டும் என்று ஆவேசமுடன் சத்தமிட்டார்கள்.

அவர்களை நோக்கி வந்த கந்தனைப் பார்த்ததும், கந்தா, பாருய்யா, இந்த நெல்மணிகளை! என்று நீட்டும்போது அவர்களின் கைகளிலிருந்து மழையில் நனைந்து முளைப்பு கண்ட நெல்மணிகள் சிதறித் தரையில் விழுந்தன.

அவை எத்தனை மனிதர்களின் வியர்வையால் விளைந்தவை... வீணாகிப்போனதே! அவர்களின் கண்ணீர் வீதியில் விழலாமா? என்று கலங்கினான்.

கந்தா, மூணு நாளாச்சு, எடை வெக்கலே, காக்க வெச்சுட்டாங்க, மழையில் நெல் மூட்டைக நனைஞ்சுருச்சு காரணம் கேட்டா, சாக்கு இல்லேங்குறாங்க. நம்ம நெலம இப்படியா ஆகணும்! என்று பேசப் பேச ஒரு பெரியவர் குரல் உடைந்து அழுதார். இன்னொருவர் நாமளும் எவ்வளவு தான் குனியிறது? எல்லாத்துக்கும் ஒரு அளவு இல்ல!

மனுசனுக்கு கோபம் வராதா? வந்தது. அதான் அவங்கள உள்ளே வெச்சு பூட்டினோம் போலிஸ் வரட்டும் எல்லோரும் ஜெயிலுக்குப் போறோம் என்றார், கந்தன் அவர்களிடம் முதல்ல பூட்டைத் திறந்து அவங்க வேலையச் செய்ய விடுங்க... அவங்களும் நம்மைப் போல.... உழைக்கிறவங்க தானே! முறையா பேசிக்கலாம். உழவர் சந்தை வரை வண்டிக நிக்கிது. வாகன நெருக்கடி அதிகமாயிட்டே போகுது. அண்ணே.. வாங்க! பூட்டைத் திறங்க என்றான். கந்தனின் பேச்சுக்காகவும், அவன் மீதுள்ள நம்பிக்கையிலும் அவர் பூட்டைத் திறந்துவிட்டார். சங்கிலிகள் பிரிந்து சத்தத்துடன் விழுந்தன.

இரும்புக்கம்பிக் கதவுகள் அகலமாகத் திறந்ததும் அனைவரும் உள்ளே சென்றார்கள். கமிட்டியில் சேகரிக்க இடமில்லாமல் வெளிப்புறத்தில் சிறு குன்றுகள் போல நெல் குவியலாக குவிக்கப்பட்டு இருந்தன. குவியல்களின் மீது கறுப்பு நிறத்தில் தார்பாலின் போர்த்தப்பட்டும் மழைநீர் இறங்கி தரையில் ஓடிக்கொண்டிருந்தது.

உழவர்களின் மறியல் செய்தியைக் கேள்விப்பட்ட மாயவரம் டவுன் போலிஸ் இன்ஸ்பெக்டர், பத்து காவலர்களுடன் கூண்டு வண்டி, ஜீப் சகிதம் வந்து இறங்கினார். இரு புறமும் இடைவெளி விட்டு ஆர்ப்பாட்டக்காரர்களைத் தனிமைப்படுத்திய இன்ஸ்பெக்டர், வந்த சிறிது நேரத்திலேயே விவரங்களைத் தெரிந்துகொண்டு முளை கண்டு விட்ட நெல்மணிகளைக் கையில் அள்ளிப் பார்த்தார். அவை உடைந்த மழைத்துளிகள் போல் மஞ்சள் நிறத்தில் சிதறிக்கிடந்தன. அந்த இடம் நெல்மணிகளின் வாசனையாய் இருந்தது.

இன்ஸ்பெக்டர் உழவர்களைப் பார்த்து இறுக்கமான முகத்துடன் நின்றார். அவரோடு வந்த காவலர்கள் உழவர்களை அழைத்துப் பெயர் விலாசம் கேட்டுக் குறித்து கொண்டிருந்தார்கள்.

கந்தன் பேசத்தொடங்கினான் அய்யா, இது எங்களோட நியாயமான கோரிக்கை. வெளியே சரியான விலை இல்லேன்னுதான் கமிட்டிக்குக் கொண்டு வாறோம். ஆனா இங்கே மண்ணுக்கும் உதவாம, மக்களுக்கும் உணவாகாம அழிஞ்சு போறத பார்த்தா.... யாருக்குத்தான் கோபம் வராது? முதல்ல வகையா நெல்லெ பாதுகாத்து அனுப்பினாப்போதும், பணமெல்லாம்

ரெண்டாம்பட்சம் தான். வெளியே வட்டிக்கு வாங்கிக்கூட சமாளிப்போம். விளைச்சல் வீணாகி, உழைப்பு கானலாகிப் போச்சேங்குற ஆதங்கம். அதான், இப்படி நடத்திட்டாங்க. ஒண்ணுக்குப் பாதிப்பணம் தந்தாலும் அவங்க உழைப்புக்கு கிடைக்கிற மரியாதையா இருக்கும். இழப்பீட்டுக்கு மட்டும் ஆவண செய்யச் சொல்லுங்க போதும்... என்று முடித்தான்.

கந்தனின் பேச்சு இன்ஸ்பெக்டரின் இறுக்கமான உணர்வுகளைத் தளர்த்தி உழவர்களின் பக்கமிருந்த நியாயத்தைப் புரிய வைத்தது.

சரி, எல்லோரும் ஸ்டேசனுக்கு வந்து கையெழுத்துப் போடுங்க... என்றபடி ஜீப்பில் ஏறிட, அவர் நகர்ந்த போது கமிட்டிக் கட்டிடத்திலிருந்து வியர்த்துப் போய் வந்து அதிகாரிகள் சார்! 'அவங்க எல்லார் மீதும் வழக்கு போடுங்க, புகார் மனுதர்றோம்“, என்று ஒரு உறையை நீட்டினார்கள். அவர்களின் கண்களில் கலவரம் இன்னும் விலகாமல் இருந்தது. விவசாயிகள் கூட்டத்தை விட்டுத் தள்ளியே நின்றார்கள்.

கான்ஸ்டபிள், அந்த உறையை வாங்கிட்டு இவங்க எல்லாரையும் வண்டியில ஏத்துங்க. 'நீங்களும் ஸ்டேசன் வரணும் சார்”, என்றார். அவர்களும் சரிங்கய்யா என்று வழிவிட்டனர். இப்போது தான் அதிகாரிகளுக்கு பயம் விலகத் தொடங்கியது.

இந்தாப்பா.. “எல்லோரும் வண்டியில் ஏறுங்க, ஸ்டேசனில் மத்ததப் பேசிக்கலாம்“ என்றார் கான்ஸ்டபிள், கூடவே 'நம்ம அய்யாவும் விவசாயியோட பிள்ளை தான். விசாரணைக்காகத்தான் ஸ்டேசனுக்குப் போறோம் கைதெல்லாம் இல்லை “ என்றார்.

கந்தனின் சகாக்கள் ஒருவரை ஒருவர் பார்த்து பயத்தைக் குறைத்துக் கொண்டனர். வண்டி கிளம்பியது. நடேசன் தெரு, உழவர் சந்தை சாலைகளில் வண்டிகள் ஊர்ந்து செல்ல ஆரம்பித்தன.

வானில் மேகங்கள் சூழ்ந்து வந்து கொண்டிருந்தன. கந்தன் தன்னுடன் பயணிக்கும் உழவரின் கைப்பேசியினைக் கேட்டுப் பெற்று அன்னத்திற்கு அழைப்பு விட்டான், எதிர் முனையில் அன்னம் எடுத்தாள்.

'அன்னம், மாயவரம் ஸ்டேசன் வரைக்கும் போய்ட்டு வர்ரேன். நீ எடுத்து வெச்ச விதைநெல்லை வித்திடு”. பணத்தை அதியன் கிட்ட கொடுத்து போன் வாங்கிக்கச் சொல்லு, வேறெதும் சொல்ல வேணாம்! ஒரு வேளை நான் வீட்டிற்கு வர நேரமானாலும் நீங்க வரவேணாம்.

எதிர்முனையில் அன்னம் கலக்கத்துடன் சரிய்யா... என்றாள்.

சாரல் மழை பெய்யத் தொடங்கி விட்டது. வெள்ளை நிறக் கூண்டு வண்டியின் முன்பக்கக் கண்ணாடிகளைத் தழுவியபடி மழைத்துடைப்பான்கள் இரண்டு அரை வட்டங்களை ஏற்படுத்திக் கொண்டே செல்ல... ஒரு டீக்கடையிலிருந்து, “ஆடிப்பட்டம் தேடிப்பாத்து விதைக்கணும் கண்ணையா ஏருபூட்டும் ஏழைக்கூட்டம் வாழனும் பொன்னையா'' என்ற பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. ●

## அன்பான வேண்டுகோள்!

**கண்ணாமூச்சிக்கான ஆண்டுக்கட்டணம் சென்ற இதழோடு நிறைவடைந்தவர்கள் தாங்களாகவே ஆண்டுக் கட்டணத்தைப் புதிப்பித்து கண்ணாமூச்சி ஆட்டத்தில் பங்கேற்க அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.**

**- கண்ணாமூச்சி**

பதிவு

# 9.அரிசிக்கடைத்தெரு

## கலைபாரதி



கதைகளால் நெய்யப்பட்டுள்ளது அவரது உலகம். அவரது உரையாடல்கள் முழுவதும் மானுட கரிசனம் நிரம்பி வழியும். எப்போதாவது பார்த்துக் கொள்கிற போது மட்டும் பேசிக் கொள்கிற நான் இப்போதெல்லாம் அவரிடம் பேசிக் கொண்டிருப்பதற்காகவே பார்க்க ஆரம்பித்து விடுகிறேன்.அறம் சார்ந்த ஏதோ ஒரு தெறிப்பு அவரது உரையாடல்களில் எப்போதுமே வந்து விழும். நாற்றங்கால்களில், நடவு வயல்களில், வாய்க்கால் வரப்புகளில், பக்கத்து தெருக்களில்,வீடுகளில்தனக்கான கதை மாந்தர்களை அவரால் கண்டெடுத்துக் கொள்ள முடிகிறது. இலக்கிய உலகிற்கு அவரை கண்டெடுத்தவராக கவிஞர் பரிதிபாண்டியனைச் சொல்லலாம்.இனி வருங்காலங்களில் காவிரிப்படுகையின் கி.ரா.வாக காலம் அவரை அடையாளப்படுத்தட்டும் அவர்..

9.அரிசிக்கடைத் தெருவில் சன்மேன் டெய்லராக மன்னார்குடியின் அடையாளங்களில் ஒன்றாக மாறியிருக்கும் கோ. அருணகிரி. இலக்கிய உலகிற்கு மண்சார் இலக்கிய இதழான கண்ணாமூச்சியின் ஆசிரியர்!

நடவுக்குப் போய்விட்டு முன்னிரவுப் பொழுதில் வீடு திரும்பும் போது கொடியாடு மாதிரி கிடக்கிற கடைக்குட்டி பயலுக்காக நடவுவயலில் பசியாறக் கொடுத்த பக்கோடாவை முந்தானையில் முடிந்து வைக்கின்ற அம்மாவின் ஈர அன்பில் தொடங்குகிறது அருணகிரியின் இலக்கியம்.

முந்தானை உதறி, சும்மாடுகோலி, கூடை சுமந்து ,அங்காடி விற்கின்ற எளிய மனிதர்களின் பாடுகளை,துயரங்களை, வலிகளை அவரால் மிக இலகுவாக கடத்த முடிகிறது.அதிலும் கோடைக்காலங்களில் பாமணி ஆற்றின் குண்டு குழிகளில் கிடக்கும் தண்ணீரைச் சொல்லும் போது "ஒரு சீலை தலைப்பு மாதிரி தண்ணீர் பள்ளங்களில் கிடந்தது" என்கிறார். கிராமங்களில் அரசபுரசலாக நடக்கும் தகாத உறவு குறித்தான பஞ்சாயத்து உரையாடலில் "அவன் மேலுங்கீழுமா பார்த்துட்டான்" என்கிறார்.

"தண்ணீர் கண்ட இடத்தில் குடிச்சுக்குவோம்.. தடங்கண்ட இடத்துல நடந்துக்குவோம்..திண்ணக் கண்ட இடத்துல படுத்துக்குவோம்.." என்கின்றனர் அவரது கதை மாந்தர்கள். இதுதான்.. இதுதான்.. அருணகிரியின் இலக்கியம்.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு கவிஞர் பரிதிபாண்டியனின் படத்திறப்பு. நண்பர்களும் தோழர்களும் அந்த நினைவேந்தலில் அவரது படத்திற்கு மாலை அணிவித்தபோது நண்பர் அருணகிரி இரண்டு காராச்சேவு பொட்டலமும் அந்த வார ஆனந்த விகடனும் வாங்கி வந்து அவரது படத்திற்கு முன்வைத்து வணங்கி நின்றது ஈரம் கசிந்த நிகழ்வு.! குகன் இராமனைச் சந்திக்கும்போது கையுறையாகக் கொண்டு சென்ற கங்கை மீனுக்கும் கொம்புத் தேனுக்கும் நிகரானது அது.

எனக்கும் அருணகிரிக்குமான கருத்தியல் முரண்பாடுகள் நிரம்ப உண்டு. ஆனாலும் எங்களுக்குள்ளானத் தோழமை உடன்பாடே எப்போதும் முன்னிற்கும் என்பதையும் சொல்லியாக வேண்டும்.

மன்னார்குடி முக்கிய வீதிகளில் ஒன்றான அரிசிக்கடைத் தெருவில் அருணகிரி கடை திறக்கும் போதெல்லாம் ஒரு நாய்க்குட்டி ஓடி வந்து அவரது காலைச் சுற்றும். உடனே அதற்கு ஒரு

டைகர் பிஸ்கட் எடுத்துக் கொடுப்பார். அது வாலாட்டியபடி சென்று விடும். ஒரு பதினோரு மணிவாக்கில் மயிலம் பசு ஒன்று கடை எதிரே வந்து நின்று அவரது முகம் பார்த்து பெருங்குரலெடுக்கும். தயாராக வைத்திருந்த கீரைக்கட்டை அதற்கு தின்னக் கொடுப்பார். எப்போதாவது அரைப் பைத்திய நிலையில் ஒரு மனிதர் வருவார். அவர் யார்? எந்த ஊர்? எங்கிருந்து வருகிறார் என்பதெல்லாம் அருணகிரிக்குத் தெரியாது .அவரது கையில் ஒரு ஐம்பது ரூபாயைத் திணிப்பார்.

"காலைச்சுற்றும் நாய்கொரு
டைகர் பிஸ்கட்..
பெருங்குரலெடுக்கும் பசுவுக்கு
ஒரு கீரைக்கட்டு..
முகம் தெரியாத மனிதனின்
அகம் குளிர்விக்கும் கருணைமிகு பார்வை.." இதுதான் அருணகிரியின் ஆன்மிகம் என்று சொல்லத் தோன்றுகிறது

கடவுள் நம்பிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை,

"யாவருக்குமாம் இறைவற்கொரு பச்சிலை யாவருக்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை யாவருக்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி யாவருக்குமாம் பிறருக்கு ஒரு இன்னுரை தானே." என்கிற திருமூலரின் திருமந்திரத்தைப் படித்திருக்கிறேன்.. இப்போது அருணகிரியைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

நவம்பர் 27, இன்று கண்ணாமூச்சி ஆசிரியர் அருணகிரியின் பிறந்தநாள். "வணங்குதலில் முந்திக் கொள்ள வேண்டும்" என்பார் நபிகள். அருணகிரியை வாழ்த்துதலில் முந்திக் கொள்கிறேன் நான். வாழ்த்துகள் அருணகிரி!

●

---

**கவிதை**

# அறிமுகமற்ற கால்களைக் கொஞ்சும் பசித்த நாய்க்குட்டி

ஒரு சின்னஞ்சிறிய நாய்க்குட்டி
தனித்திருக்கிறது
மேலும்
பசித்திருக்கிறது..

கூட்டம் நிரம்பிய தேநீர்க்கடையில்
ஒரு விள்ளல் ரொட்டிக்காக
அறிமுகமற்ற கால்களை அது
கொஞ்சும்போது
எட்டி உதைக்கப்படுகிறது

முனகலைப்போல் அது அழுதபடியே
நம்பிக்கை இழக்காமல் இறைஞ்சும்பொழுது
கொதிக்கும் வெந்நீரை வீசுகிறது
கடைக்காரனின் கருணை!

வீல்வீல் என்று கதறியபடியே
சாலைக்கு ஓடி
முனகும்போது
அன்பு கருணை என்பதற்கெல்லாம்
அர்த்தம் என்னவென்று தேடுகிறது.

கொஞ்சநேரம்தான் யாவும்
தன்னைப்போலவே கைவிடப்பட்ட
ஒற்றைச்செருப்பைப் பார்த்தவுடனே
விளையாடத்தொடங்குகிறது
அதனோடு..

கைவிடப்பட்ட இரண்டு துயரங்கள்
ஒன்றுக்கொன்று ஆறுதல்
சொல்லிக்கொள்வதாய் இருக்கிறது
அவ்விளையாட்டு.

நான் நாய்க்குட்டியாகவும் இருந்திருக்கிறேன்
செருப்பாகவும் கிடந்திருக்கிறேன்!

பூமியையே பந்தாக உதைத்து
விளையாடப் பழகியபிறகே
பசியற்ற உலகுபற்றிக்
கனவொன்றில் நுழைந்திருக்கிறேன்.

– கோ.கலியமூர்த்தி

●

# வந்தார்கள் சென்றார்கள்

## சூர்யகலா சரவணன்

வந்தாரை வாழவைக்குமாம் தமிழ்நாடு. யார் வந்தாலும் வாழ வைக்கும் எம்மன்னார்குடி. பானிபூரிகாரர்கள் நடவு நடுகிறார்களாம். பூரிக்கிறார்கள் இன்றைய தலைமுறையினர். வட இந்தியர்களை கண்டு வளம் கொழிக்கும் எம்மண்ணைத் தொடும் அவர்கள் அல்லவா பூரிக்க வேண்டும். இயற்கையின் பாரபட்சத்தால் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை தன் இருப்பிடத்தை விட்டு வருடத்தின் இரண்டு மூன்று மாதங்கள் தன் இல்லாமையைப் போக்க போக்கிடம் தேடி நம் மன்னை மண்ணில் உழைத்துத் திரும்பிய மாசற்ற மக்கள் கூட்டம் ஒன்று இருந்தது.

பழைய தென்னார்க்காடு மாவட்ட சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து குறிப்பாக, ஜெயங்கொண்டம், உடையார் பாளையம் பகுதிகளிலிருந்து குடும்பம் குடும்பமாக ஏன பானத்தையெல்லாம் கட்டிக்கொண்டு மூட்டை முடிச்சுகளோடு தை மாத அறுப்பு வேலைகளுக்காக கார்த்திகை மாசத்தோடும் கன்னிப் பொங்கலோடும் வந்திறங்கும் வடக்கத்தி சனங்களின் சொல்லப்படாத கதைகள் பல இந்த மண்ணில் பொதிந்து கிடக்கிறது.

வானத்தைப் பார்த்துப் பார்த்து பூத்துப்போன அவர்களின் பூமி போல் பூத்துப்போன கண்களோடும், பலாப்பழ வாசனையும், ஆட்டு மொச்சை வாடையும் கலந்தடிக்கும் வாசனை நிறைந்த உடம்போடும், வறண்டு போன முடியோடும், காய்ந்த முந்திரி கொட்டைகளாய் கண்டுமுதல் பார்க்கவும், கடலைக்காய் ஆயவும் இங்கே வந்து ஓர் வாழ்விலையே விளைவித்துச் சென்ற வடதமிழக மக்களைப் பற்றியதே இக்கட்டுரை.

தமிழக வட்டார மொழி வழக்குகளில் பல வகையுண்டு. ஆனால் பழைய தென்னார்க்காடு மக்களின் மொழி நமக்கு சற்றே வித்தியாசமானது. வெகுளித்தன்மையும், ஏக்கமும் நிறைந்தது அப்பேச்சு வழக்கு.

அந்தப் பக்கத்து பேச்சை ஆடு புலுக்கை போட்ட மாதிரி அசராம பேசிக்கிட்டு ஆம்பளைக்கு மூணு மரக்கா, பொம்பளைக்கு ரெண்டு மரக்கா கூலிக்கு அறுப்பறுக்க வரும் அந்த சனங்க, பெரிய அளவில் வெள்ளாமை பண்ணும் வீடுகளில் மட்டுமே தங்கவோ, ஊரில மற்றவர்களுக்கும் வேலைக்கு போவாவோ.'

அங்குன கூலித்தகராறு ஏதாச்சும் ஆச்சுண்ணா பெரிய நிலத்துக்காரவோ வீட்டுல இருக்கோம்ன்னு சொல்லி கண்டிச்சு வாங்கிக்கலாம் என்பது அவர்களுக்குத் தெரிந்த அரசியல்

அந்த வீட்டு திண்ணை ஆலோடிகளில் அவோ வரிசையாய் படுத்திருக்கும் அழகே அழகு. உழைச்ச களைப்பின் உறக்கம் எவ்வளவு அழகானது என்று உணர்ந்து பார்த்த நாட்கள் அது.

ஊருக்கு வந்த முதல் நாள் அரிசி சோத்துக்கு ஏங்கி நாக்குச் செத்துப்போய் அலுப்போடும், ஆசையோடும் வரும் அந்த சனம் கேட்கும் விருந்து சுடுகஞ்சி. அப்படி கஞ்சி குடிக்கும்போது ஏனத்தை கீழே பொத்து தண்ணிய கீழே விட்டு சோத்தை மட்டுமே மறுபடியும் மறுபடியும் கேட்டு வாங்கிக் குடிக்கும் அந்த சனம். ஆட்டு மாட்டு சாப்பை அடுப்படியாக்கி அந்தில அவோ வைக்குற கருவாட்டுக் குழம்புக்கு ஊரே மணக்கும்.

சாய்ந்தாரம் ஆனா அந்த சனங்களுக்கு சந்தோசம்தான். சும்மா ஜேஜேன்னு இருக்கும். தண்ணியா வைச்ச கருவாட்டுக் குழம்பையும் சோத்தையும் மண்டி தின்னுட்டு காலைல பழையதுக்கு தண்ணிய ஊத்தி வைச்சிட்டு ஏனபானத்தை கழுவிப்புட்டு எல்லாம் சேர்ந்து உக்காந்து ரேடியோ கேக்கும். இல்லண்ணா டீவி பார்க்கும். அண்ணே எங்க பக்கம் ஏதாச்சும் சேதியா...

டீவில ஏதும் சொன்னாவொளா? என தன் மண்ணை பற்றிய சிந்தனையும் அவர்களிடம் இருக்கும்.

சினிமாதான் அவொளுக்கு எல்லாம். படுக்கைய வரிசையா போட்டுக்கிட்டு கூட்டத்துல ஒன்னுரெண்டு பேர் பாடுறவோ இருப்பவோ அவோ பாட ஆரம்பிச்சா, அப்படித்தான் இருக்கும். நல்லா பாடுற ஆளுகளைத்தான் எல்லோரும் வேலைக்கு விரும்பி கூப்பிடுவவோ.

எம்.ஜீ.ஆரையும், ராமராஜனையும் தான் அவொளுக்குப் பிடிக்கும. எம்.ஜீ.ஆர் இறந்துவிட்டார்ன்னு சொன்னா சண்டைக்கே வந்துடுவாவோ. எங்கூரு பஞ்சாயத்து டீவில பாட்டு பாடுனாரு. வரானைக்கு முதல் நாள் கூட நான் பார்த்தேன். நீயென்ன ஆச்சி செத்துபூட்டாருங்கறன்னு சொல்லும் அளவிற்கு அப்பாவிகள்.

வேலை சொல்ல வேண்டியதில்லை. அப்படி செய்வாவோ, பாதையே இல்லாத வயங்காட்டுல இருபத்தி நாலு மரக்கா நெல்லு மூட்டைய பத்து வய தாண்டி ஒத்த ஆளா தூக்கும் வலுவான ஆளுவோயா அந்தாளுவோ அவ்வோள மாதிரி வருமான்னு பேசிக்குவவோ.

அறுப்பறுத்து அறுத்த நெல்லுக்கு காவ இருந்து, வைக்க உருட்டி வண்டி ஓட்டி, பில்லருத்த அவொள்ட்ட பேதம் பார்த்தரிக்காக அடிக்கடி வருத்தப்படுவது ஒரே விசயத்துக்குத்தான்.

நாக்குல எச்சி ஊறியும் நாலு மொளவாப் போட்டு அவொ அரைச்ச துவயலை நக்கிப் பார்க்காமல் விட்டத்துக்குத் தான். இன்னைக்கு கூட்டாளியா இருந்தா நிச்சயமா வாங்கி தொட்டுகிட்டுருப்பேன். அன்னிக்கு இந்த கெழச்செருக்கி பேசுவாளேன்னு விட்டுட்டேன் என சொல்லும் நம் அம்மாக்களும் உண்டு.

அவொ தங்கியிருக்கும் வீட்டாளுகளின் சொந்த பந்தங்களுக்கெல்லாம் போய் வேலை செய்யும் சனங்க கூலியாய் கிடைக்கும் நெல்லை மூட்டை மூட்டையாய் கொண்டாந்து தங்கியிருக்கிற ஊட்ல அடுக்குவவோ.

வேலையில்லாத அன்னிக்கு அக்கா அரிசி குடு,, இல்லண்ணா பத்தாயத்துல உள்ள நெல்லையாச்சும் குடுக்கான்னு...?? உரிமையா கேட்டு வாங்கி உரல்ல போட்டு குத்தி சோறாக்கும் அந்த சனம் இம்மண்ணில் விட்டு சென்ற சுவடுகள் ஏராளம்.

அடுக்கி வச்ச நெல்லை ஊருக்கு கொண்டு போக ஊர்ல முக்கியப் புள்ளிய பார்த்து லெட்டர் வாங்கி கொண்டு போவவோ (அக்காலங்களில் நெல் மூட்டைகளை எடுத்து செல்வது குற்றம்) அந்த சனங்க போனப்புறம், வீடே வெறிச்சோடிப் போகும். ஏண்டா போறாவோன்னு இருக்கும். போறப்போ நம்ம விலாசத்தை வாங்கிட்டுப் போய் போனப்புறம் போய் சேந்துட்டோம்ன்னு இன்லண்ட் லெட்டர் போடுறதும், அவோ வீட்டு நல்லது கெட்டதுக்கு நம்மைத் தேடி வந்து கூப்பிடுவதும் போவதுமாக இருந்தது இந்நூற்றாண்டின் இறுதிவரை எங்களுக்கும் அவொளுக்குமான உறவு.

காசுப் பணத்தைப் பற்றி கவலையே இல்லாத மனிதர்கள். நெல்லுக்காகவும், அரிசிக்காகவும் இம்மண்ணை நேசித்து வந்தவர்கள். மனிதர்களைப் போற்றியவர்கள். அவர்கள் உழைப்பிலும் குறைவில்லை. இங்கே அவர்களுக்கான கூலியிலும் குறையில்லை. அவர்கள் எப்படி இங்கே வந்தார்கள் என்று ஆராயத் தோன்றவில்லை. ஏனெனில் அவர்கள் எதையும் அழிக்கவில்லை. ஆக்கித்தான் வைத்துவிட்டுச் சென்றார்கள். எதனையும் எடுத்துக்கொண்டு செல்லவில்லை. மாறாக, அவர்கள் இல்லையென்ற ஏக்கத்தை தான் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இயந்திரங்களின் வருகைக்குப் பின்னும் இலவசங்கள் அதிகரித்ததாலும் அவர்கள் இப்பக்கம் வரவேயில்லை. பாசை புரியாத வட இந்தியர்களிடம் பாடாய்ப் பட்டு வேலை வாங்கும்போது தான் தெரிகிறது வடக்கித்திய சனங்களின் அருமை. நம்மை மறந்தே விட்டார்களே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவதுண்டு. நன்றாக இருக்கிறார்கள். அதனால் தான் நம்மிடம் வரவில்லை என்று அமைதி கொள்வதுமுண்டு. நன்றாகவே இருக்கட்டும். ●

# கறிக்குழம்பு

## கத்துக்குட்டி

கணவரை இழந்த ரோஸ்மேரி இந்த ஆண்டு பண்டிகைக்குத் தனது மூன்றாவது மகன் அந்தோணிசாமி வீட்டிற்கு வந்திருந்தார். அந்தோணிசாமிக்கு திருமணம் முடிந்து ஒரு மகனும், ஒரு மகளும் உண்டு. ஒரு தனியார் நிறுவனத்தில் உயர்பதவியில் இருக்கிறான். நகரத்தில் இடம் வாங்கி சொந்தமாக வீடு கட்டி வசிக்கிறான். மருமகளும் குணவதிதான்.

பண்டிகை அன்று குளித்து, புத்தாடை அணிந்து, தேவாலயம் சென்று, வழிபாடு முடிந்து வீடு திரும்பியாகிவிட்டது. மதிய உணவருந்தும் நேரம். மகன் அந்தோணிசாமி வீட்டின் சாப்பாட்டு மேசை முன்பு அமர்ந்திருக்கிறார் ரோஸ்மேரி. மருமகள் எஸ்தர் ராணி உணவு பரிமாறுகிறாள். கோழிக்குழம்பு மணக்கிறது. எதிரில் அமர்ந்திருந்த மகன், அம்மாவை சாப்பிடச் சொல்கிறான். அம்மாவோ உணவருந்தாமல், மகனையே வெறித்துப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருக்கிறார்.

மகன், அம்மாவிடம், 'அம்மா இது பிராய்லர் கோழி இல்ல, நாட்டுக்கோழிக் குழம்புதான். சாப்பிடுங்கள்' என்கிறான். அப்போதும் அம்மா சாப்பிடாமல் மகனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

தனது ஏழு பிள்ளைகளில் ஒரு பிள்ளைதான் மகன், அந்தோணிசாமி. அவனது பொருளாதார வளர்ச்சியைப் பறைசாற்றும் பெரிய வீடு, கார், ஆடம்பரப் பொருட்கள் எல்லாமே கண்டு ரோஸ் மேரிக்கு மகிழ்ச்சிதான். அந்தோணி சாமி மட்டுமல்ல, வறுமையில் வாடிய அவளது மற்ற பிள்ளைகளும் முயன்று, கல்வி கற்று, நல்ல பணிகளில் அமர்ந்து, பொருள் ஈட்டி இன்று சிறப்புடன் வாழ்வது அவளுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது.

ரோஸ் மேரியின் கணவர் ஜோசஃப், ஒரு பஞ்சாலையில் கூலித்தொழிலாளி. ஆலையிலிருந்து சற்று தொலைவில் அமைந்திருந்த ஒரு சிற்றூரில் அவர்கள் வசித்து வந்தனர். நான்கு ஆண்களும், மூன்று பெண்களும் என ஏழு பிள்ளைகள். குறைந்த கூலி, நிறைந்த குடும்பம், வறுமையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. என்றாலும், கர்த்தர் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட குடும்பம். கர்த்தரை நினைத்து ஜெபம் செய்வதில் அனைவருமே ஒருமித்த கருத்துடையவர்கள்.

அன்றைய காலங்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேவாலயத்திற்கு செல்வதோடு, கிருத்துவக் குடும்பங்களில் வீட்டில் ஆட்டுக்கறிக் குழம்பும் தவறாமல் இடம்பெறும். ஓரளவிற்கு வசதி உள்ளவர் களுக்கு மட்டுமே ஆட்டுக்கறி வாங்கி சமைப்பது சாத்தியப்படும். வறுமை மட்டு மல்ல, பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகம் கொண்ட ஜோசஃப் குடும்பத்தில், ஆட்டுக் கறி வாங்கி சாப்பிடுவது கானல்நீர் தான்.

அதனால், தாய்மை உணர்வு காரணமாக ரோஸ் மேரி ஒரு காரியம் செய்தார். வீட்டில் நாட்டுக்கோழி வளர்க்க ஆரம்பித்தார். பிராய்லர் கோழி அறிமுகம் ஆகாத காலம். அவ்வப்போது, ஒரு விடைக்கோழி அல்லது சேவல் அடித்துக் குழம்பு வைத்து தனது பிள்ளைகளுக்குக் கொடுத்து வந்தார்.

அப்படி நாட்டுக்கோழிக் குழம்பு சாப்பிட்டு வந்த அந்தோணிசாமியின் நடத்தையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. கோழிக்குழம்பு வேண்டாம் என்று மறுத்து அடம்பிடித்தான். ரோஸ்மேரி எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. ''ஏண்டா அப்பா சாப்பிடுறாங்க, அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சிகள் சாப்பிடுறாங்க. உனக்கு மட்டும் என்னடா வந்தது. சாப்பிடாமல் அடம்பிடிக்கிறாய்'' என்று கேட்டதோடு கோபத்தில் தனது தலையிலும் அடித்துக்கொண்டார்.

ஒருநாள் இரவு, பிள்ளைகள் உறங்கிய பிறகு ரோஸ் மேரி தனது கணவரிடம், ''ஏங்க இந்த அந்தோணிசாமி பயலுக்கு என்ன ஆச்சுண்ணே தெரியலையே. கோழிக்குழம்பு வேண்டவே வேண்டாம் என்ற அடம்பிடிக்கிறான்'' என்கிறார். அதற்கு ஜோசஃப் மற்ற பிள்ளைகள் மாதிரி ஆட்டுக்கறிக்குழம்பு சாப்பிட முடியவில்லை என்னும் ஏக்கமாக இருக்குமோ என்னவோ, தெரியவில்லை'' என்று தனது யூகத்தைச் சொல்கிறார்.

''ஏசி, பேசி, அழுது, புலம்பி எப்படி யெல்லாமோ கேட்டாச்சுங்க. பய எதுவுமே சொல்ல மாட்டேங்குறான். ''இப்ப சொல்லட்டுமா..'' என்று கேட்கிறான் அந்தோணிசாமி. திடுக்கிட்ட ரோஸ்மேரி, திரும்பிப் பார்க்கிறாள்.

''அம்மா இப்போது சொல்லட்டுமா?'' என்று மீண்டும் கேட்கிறான் அந்தோணிசாமி. அப்படி இரண்டாவது முறை கேட்ட பிறகுதான், ரோஸ்மேரி பழைய நினைவுகளில் இருந்து திரும்பி, எதிரில் அமர்ந்திருக்கும் தனது மகனை வியப்புடன் பார்க்கிறாள்.

எவ்வளவோ கட்டாயப்படுத்திய போதும், ஏசி, பேசியபோதும் வாய்திறந்து சொல்லாத மகன் இப்போது 'சொல்லவா' என்று கேட்கிறான். எதுவும் பேசாமல், மகன் பேசட்டும் என்று மௌனமாகக் காத்திருக்கிறாள். ''அம்மா, நாம் வீட்டில் பிள்ளைகள் அனைவரும் சாப்பிட்ட பிறகு ஐயா (அப்பா) சாப்பிடுவாங்க. ஐயா சாப்பிட்டு முடிந்த பிறகு நீங்க கடைசியாக சாப்பிடுவீங்க. ஒருநாள் நான் எனது கூட்டாளிகளுடன் விளையாடிவிட்டு வீட்டிற்கு பிந்தி வந்தேன். நான் வந்தபோது ஐயா சாப்பிட்டு முடிச்சிருந்தாங்க. எனக்கு நீங்க கோழிக்கறிக் குழம்பு சோறு பரிமாறினீங்க. கோழிக்கறியுடன் நான் சாப்பிட்டு முடித்தேன்.''

''அன்று எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. நான் கோழிக்கறிச் சட்டியைப்பார்த்தேன. கறிக்குழம்பு எல்லாம் வழித்துவிட்டுச் சட்டி காலியாக இருந்தது''

அம்மா, உங்களுக்கு சோறு, குழம்பு இருக்கிறதா என்று நான் அன்று இரவு உங்களிடம் கேட்டேன். இருக்கிறது என்று பொய் சொன்னீங்க. அம்மா, நீங்கள் சாப்பிடுவதை ஒருநாளும் நான் பார்த்ததில்லை என்பதை அப்போதுதான் நான் நினைத்துப் பார்த்தேன்.

எங்களுக்காக நீங்கள் செய்த தியாகத்தைப் புரிந்துகொண்டேன். தனியாக இருக்கும்போது அதை நினைத்தால், என் கண்களில் கண்ணீர் வந்துவிடும். அன்றிலிருந்து நான் கோழிக்கறி சாப்பிடுவதை நிறுத்தினேன். உங்களுக்கு என் மீது வெறுப்பு உண்டானபோதும், எனக்குள் இனம்புரியாத, வெளியில் சொல்ல முடியாத மகிழ்ச்சி உண்டானதை நான் உணர்ந்தேன். காரணம், நீங்கள் கோழிக்கறி சாப்பிட்டீங்க. இதனை மற்றவர் எவரிடமும் சொல்லாமல், கட்டுப்பாட்டுடன் இருந்தேன்'' என்று சொல்லி நிறுத்திவிட்டு அம்மா ரோஸ்மேரியைப் பார்த்தான்.

ரோஸ்மேரியின் கண்களில் இருந்து கண்ணீர் அருவிபோலக் கொட்டியது.

அந்தோணிசாமி பேச்சைத் தொடர்ந்தான். ''நான் கோழிக்கறி சாப்பிடாமல் இருந்ததற்கு, கோழிக்கறி மீது உண்டான வெறுப்பும் காரணம் இல்லை, மற்ற பிள்ளைகள் போல் ஆட்டுக்கறி சாப்பிட முடியவில்லையே என்ற ஏக்கமும் காரணம் இல்லை. என் மனதில் உள்ளது வெளியில் தெரிந்துவிடக்கூடாது என்றுதான் என்னை நீங்கள் அவ்வளவு திட்டியபோதும் நான் எதுவும் சொல்லாமல் அடம்பிடித்து ஆர்ப்பாட்டம் செய்தேன்''.

எழுந்து வந்து அம்மாவின் கால்களைக் கட்டிக்கொண்டு பழைய வறுமை நிறைந்த வாழ்க்கையை எண்ணிப் பார்த்து அந்தோணிசாமியும், அம்மாவுடன் சேர்ந்து அழுதான். மருமகள் எஸ்தர், தனது கணவர் அவரது அம்மா மீது எந்த அளவிற்கு பாசம் வைத்திருந்திருக்கிறார் என்பதை அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகளும் நடப்பதைப் பற்றி எதுவுமே தெரியவில்லை என்றாலும், அமைதியாக நின்றார்கள்.

ரோஸ்மேரி, அழுவதை நிறுத்தவே இல்லை. அம்மாவை சமாதானம் செய்த மகனிடம், ''இப்படி ஒரு பிள்ளை கிடைப்பதற்குக் கர்த்தரின் ஆசி எனக்கு இருந்திருக்க வேண்டும். ஆனால் இதை அறியாமலேயேப் போய் சேர்ந்துவிட்ட உன் அப்பாவை நினைத்து வருந்தி அழுகிறேன். பெண் பிள்ளைகளுக்கு மட்டுமே இயல்பாக வரக்கூடிய இந்த அன்பு, உனக்கு வந்ததை எண்ணி பெருமையுடன் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன். இப்படி ஒரு பிள்ளையை எனக்குக் கொடுத்தமைக்காகக் கர்த்தருக்கு ஒரு கோடி நன்றிகள் சொல்வேன்.''

''இப்படி ஒரு கணவரையும், அம்மாவையும் எனக்குச் சொந்தமாக்கிய அந்த கர்த்தருக்கு நூறுகோடி நன்றிகள்'' என்று சொன்ன மருமகள் எஸ்தர், கோழிக்கறி சாப்பிட இருவரையும் அழைத்தாள். ●

# அப்பா.. நாம என்ன சாதி

## சின்னப்பயல்

இன்று காலையில் தொலைக்காட்சியில் கர்ணனின் 'மஞ்சனத்திப் புராணம்' பாடலைப் போட்டு பிள்ளைகளோடு ஆடிக் கொண்டிருக்கும் போது, என் மகன் கவின் காஸ்ட்ரோ,

"எப்பா.. நாம என்ன சாதிப்பா.."

என்றான். ஆடிக்கொண்டிருந்த நான் ஒரு நிமிடம் உள்ளபடியே ஆடிப்போனேன். அவன் சென்ற வருடம் ஐந்தாம் வகுப்பு படிக்காமலேயே இந்த வருடம் ஆறாம் வகுப்பு 'அ' பிரிவுக்கு செல்பவன். அடுத்த வருடம் எப்படியோ? அது கொரோனா காலம்.

"ஏன்ப்பா.. இப்படி கேட்குற..?"

"இல்லப்பா... நாம பார்க்குற படத்துல எல்லாம் இப்படித்தானே கத்திக்கிட்டு திரியுறாங்க.."

"நாம என்ன சாதிப்பா.."

"நாம நக்சல்பாரிப்பா.." என்றேன்.

"அப்படின்னா?"

"இந்த மண்ணையும் மக்களையும் நேசிக்குறவங்கப்பா.."

என்னுடைய திருமணம் சுயமரியாதைத் திருமணம். கவிவேந்தர் மு.மேத்தா அவர்கள் நிகழ்த்தி வைத்தார். உடன் பேராசிரியர்கள் ச.அந்தோணி டேவிட்நாதன், மன்னை.உ.இராசேந்திரன், பேராசிரியர் அ.குணசேகரன், பேராசிரியர் செல்லையா தியாகராசன், நண்பர் சா. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட தோழர்கள் இருந்து நிகழ்த்தி வைத்த மகிழ்வான தருணம். நான் வாழ்நாள் முழுதும் அம்பேத்கர், பெரியார், பாவாணர், பிரபாகரன் என்று இயங்குபவன். என் வாழ்விணையரோ சபரிமலை ஐயப்பன், அடைக்கலம் காத்த அய்யனார் என்று வாழ்பவள். அவர்களது குடும்பம், மிகுந்த ஆன்மீகமான குடும்பம். மாமனார் அவரது ஊரில் குலசாமி. திருமண மேடையில் வெங்கடாசலபதி படத்தைப் போட்டு அலங்கரித்து வைத்திருந்தனர். முதல்நாள் அதனைப் பார்த்துவிட்டு நண்பர் வீர.முருகேசன்,

"என்ன நண்பா... நீ சுயமரியாதைத் திருமணம் என்று சொல்கிறாய். இங்கே வெங்கடாசலபதி படத்தைப் போட்டு வைத்திருக்கிறார்கள்.." என்றான்.

உடன் மாமனாரிடம்,

"நீங்கள் மேடையிலிருந்து வெங்கடாசலபதி படத்தை அப்புறப் படுத்த வேண்டும்..." என்று வற்புறுத்தினேன்.

அவரும், "சரிங்க தம்பி... நான் எடுத்து விடுகிறேன்..." என்று சொல்லிவிட்டு என்னை ஒரு பார்வை பார்த்தார். நாம எதுவும் தப்பா முடிவு செய்து விட்டோமோ என்பது போலிருந்தது அந்தப் பார்வை.

அந்தக் கலவரமான மனநிலை திருமண அழைப்பிதழிலேயே ஆரம்பமாகிவிட்டது! திருமண அழைப்பிதழில் நான் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், படத்தைப் போட்டு அடித்து இருந்தேன். அவர்களோ அடைக்கலம் காத்த அய்யனார், சபரிமலை ஐயப்பன் என்று அடித்து இருந்தார்கள். இப்படியாக நிறையச் சொல்லலாம்.

கடைசியாக ஒன்று.

என் மூத்த மகன் பிறந்தபோது, பெயர் வைக்க வேண்டும். பெயர் என்பது நம் அடையாளம். அதற்குள்ளும் ஒரு வரலாறு, ஒரு மரபு, அதன் தொடர்ச்சி இருக்க வேண்டும் என்று நம்புபவன் நான். பிள்ளைக்கு என்ன பெயர் வைப்பது என்று ஆலோசிக்கும்போது என் மனைவி,

"இந்தச் சிறையில் உள்ளவன் பேரு, தூக்குல தொங்கியவன் பேரு, செத்துப்

போனவன் பேரு எல்லாம் வைக்கக் கூடாது. பேரு வைக்கிறதுல எனக்கும் உரிமை இருக்கு” என்றாள்.

“ஒங்க வீட்டுக்கார என்ன பேருன்னாலும் வைக்கச் சொல்லு, ஆனா அதுல ‘ஸ்’ இருக்குற மாதிரி பார்த்துக்க..” இது மாமியார்.

“பேர கொஞ்சம் மாடர்னா வையுங்க..” இது மச்சினிச்சி.

என்ன செய்வது... பிள்ளைக்கு பெயர் வைப்பபது கூட மனைவியைத் தாண்டி, மச்சினிச்சியைத் தாண்டி, மாமியாரைத் தாண்டி பெயர் வைக்க வேண்டிய நிலையில் வாழவும் வேண்டி இருக்கிறது.

நான் ‘கவின் காஸ்ட்ரோ’ என்று பெயர் வைத்தேன். எனக்குப் பழக்கமான தோழி ஒருவர்,

“அது என்ன.. எப்போதும் தமிழ்மொழி உயர்வு, வடமொழி எதிர்ப்புன்னு பேசுவிங்க.. அது என்ன ஒங்க புள்ளைக்கு மட்டும் ‘ஸ்’”

காஸ்ட்ரோவுல வர்ற ‘ஸ்’ சாம்.

“அது வந்து சோசியம் பார்த்தேன். அதுல ‘ஸ்’ வர்ற மாதிரி வைக்கச் சொன்னாங்க அதுதான்..” என்றேன்.

“ஊருக்குத்தான் உபதேசம். ஒங்களுக்கு இல்ல..” என்னைத் திட்டிக்கொண்டே சென்றார்.

தோழர் ஜீவானந்தம், “மகன் பேரு என்ன..?” என்றார்.

சொன்னேன்.

“பிடல் காஸ்ட்ரோன்னு வச்சிருக்கலாம்.. அது என்ன தோழர் கவின் காஸ்ட்ரோ” என்றார்.

“கவின்னா அழகு. காஸ்ட்ரோன்னா புரட்சி. என்னைப் பொறுத்த வரைக்கும் புரட்சி அழகானது என்றேன்.

அது இருக்கட்டும்.

இப்ப கவின் கேட்ட “நம்ம சாதி என்னப்பா..” என்ற கேள்விக்கு வருவோம்.

சாதி.

சாகடிக்கவே முடியாத சாதி இன்று சிறுபிள்ளைகள் மனதிலும் ஊடுபாவாய் ஊடாடிக் கிடக்கிறது. அதை சாகடிப்பது எப்படி?

“சாதி என்பது இரண்டுதான். வேறொன்றுமில்லை... ஒன்று உறுபொருள் கொடுத்து வாழ்வது. இன்னொன்று கொடுக்காமல் திரிவது. அதாவது முன்கை நீள்பவன் உயர்சாதி. முழங்கயும் நீட்டாமல், உள்ளங்கைக்குள் முடங்கிக் கிடப்பவன் இழிசாதி” என்பார் பழையோள் ஔவை.

“இருட்டறையில் உள்ளதடா உலகம். சாதி இருக்கின்றது என்று இறுமாப்புடன் மீசை முறுக்கித் திரிபவனையும் இன்னும் விட்டு வைத்துக் கொண்டிருக்கிறோமே..” என்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

“சாதி என்பது நோயுற்ற மனநிலையாக இருக்கிறது..” என்றார் புரட்சியாளர் அம்பேத்கர். மீண்டும் மீண்டும் அந்த மனநோயாளர்களிடம் நிகழ்த்துகிற உரையாடல்களே சாதி என்கிற நீண்ட நெடுஞ்சுவரை அடித்து நொறுக்கும். முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.ஜி.முருகையன் அவர்கள் கிழக்காசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்றுவிட்டு வந்த பிறகு ஒரு கூட்டத்தில் இப்படி பேசினாராம்.

“நான் எஸ்.ஜி. முருகையனா இருந்தாலும், இன்னும் என்னை எஸ்.சி. முருகையனாத்தான் பார்க்குறாங்க..” என்று,

சென்ற வருடம், நண்பர் ஒருவர். பேராசிரியராகப் பணி செய்பவர். நண்பர் என்று சொல்வதை விட தெரிந்தவர் என்று சொல்லலாம். தெரிந்தவர் நண்பராக ஆவதும், நண்பர் தெரிந்தவராக மாறுவதும் காலத்தின் கோலமாகத்தான் சில நேரங்களில் இருந்து விடுகிறது. எதேச்சையாக அவர் பணி செய்த கல்லூரிக்கு வேறு வேலையாகச் சென்றிருந்தேன். உடன், அவருடைய திருமண அழைப்பிதழை நீட்டினார்.

கவிஞர் பரிதி பாண்டியன் அவர்கள் ஒரு கவிதையில் எழுதி இருப்பார்.

“நடைப்பயிற்சியில் கைக்குலுக்கினால்

கூட ஒரு கல்யாணப் பத்திரிக்கையை நீட்டி விடுகின்றனர்” என்று,

அழைப்பிதழைப் பிரித்துப் படித்தேன். அவர் முனைவர் பட்டம் உள்ளிட்ட மூன்று நான்கு பட்டங்களைப் பெற்றவர். ஆனால், அவர் பெயரின் பின்னொட்டாக மீசையை முறுக்குகிற சாதியப் பட்டம்.

“என்ன இது..?”

“எங்க பட்டம்..”

“பட்டமுன்னா...? முனைவர் பட்டம் வரைக்கும் பெற்றிருக்கிற நீங்க சாதியப் பட்டம் போடலாமா? நாங்க பள்ளிக்கூடத்துல சாதி இல்லன்னு சொல்லிக் கொடுத்து அவன ஒங்கக்கிட்ட அனுப்பி வச்சா... நீங்களே சாதிப்பட்டம் போட்டு இருக்கிறீர்கள். அப்படின்னா ஒங்ககிட்ட படிக்கிறவன் எப்படிங்க இருப்பான்.”என்றேன்.

“நீங்க பேசுவது கேட்கன்னா நல்லா இருக்கும்” ஆனா, அதையெல்லாம் நடைமுறைப்படுத்த முடியாது. படுத்தினா எங்க ஊர்ல ஒதுக்கி வச்சிடுவாங்க..” என்றார்.

“ஒரு பேராசிரியராக இருந்து கொண்டு சொந்த வாழ்க்கையில இல்ல... சொந்தப் பேருல கூட சாதி ஒழிப்பை நடைமுறைப்படுத்த முடியாத ஒங்களோட திருமணத்திற்கு நான் வர மாட்டேன்..” என்று சொல்லிவி;ட்டு விறுவிறுவென நடக்க ஆரம்பித்தேன்.

பக்கத்து வகுப்பறையில் பேராசிரியர் ஒருவர் பாடம் நடத்தும் சத்தம் கேட்டது.

பறைச்சியாவது ஏதடா, பனத்தியாவது ஏதடா இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ.. – பேசுவோம் ●

---

கவிதை

# தனிமை - மகிழினி



காலையில் படுக்கையில் இருந்து
எழுப்பி விட யாரும் இல்லை...

பல் துலக்கி வந்த பிறகு காப்பி
கொடுக்க நாதியில்லை...

குளித்துவிட்டு துண்டை தேடினால்
எடுத்துக் கொடுக்க துணையும் இல்லை...

தலைவாரி முடிக்கும் முன்னே
தட்டில் இட்டலி காத்திருக்கும்
அதிசயங்கள் நிகழ்வதில்லை...

தட்டு தடுமாறி உணவகத்தை தேடி
அலைய வேண்டும் வேறு வழியும் இல்லை...

மாலை வீடு திரும்பும் போது
வாசலில் காத்திருக்கும்
குழந்தையும் இல்லை,
ஆசையில் காத்திருக்கும்
மனைவியும் இல்லை...

ஒற்றைப் படுக்கையில்
இரட்டை தலையணையுடன் படுத்துறங்கும்போது
இவையெல்லாம் கிட்டி விடாதா
என்ற கனவுகளுக்கு மட்டும் பஞ்சமேயில்லை... ●

# வாழ்த்தி மகிழ்கிறோம்...










VCRG IN

HOTEL

**CHURCH PARK**

FEEL THE OCEAN

Free wifi | Amble car parking | Cooking facility | 24hours Hot water | 24hours power Backup

☎ 04365 - 263300

+91 94895 63300, +91 98425 67037

No. 126/14 Thonithurai road, Velankanni, Nagapattinam - 611111


Siva
தொழில்நுட்பமே
எங்கள் சிறப்பம்சம்
உங்கள் இல்ல
நிகழ்வுகளை துல்லியமாக
பதிவு செய்திட
சிவா
வீடியோஸ்
டிஜிட்டல் ஸ்டுடியோ
& லேசர் கலர் லேப்
மன்னார்குடி
செல் : 93440 10195 - 92620 74795
OUT DOOR PHOTOGRAPHY
WEDDING VIDEOGRAPHY
SPOT MIXING & YOU TUBE LIVE
WALL LED DISPLAY